



பாரதியாரின்
குயில் பாட்டு
(பேச்சுரை)



முனைவர் ஔவை அருள்

குயில் பாட்டு

காட்சியுரை

ஆசிரியர் :

முனைவர் ந.அருள்

ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம்

12/6, போயஸ் சாலை,

தேனாம்பேட்டை, சென்னை – 600 018.

தொலைபேசி : 044–4341 8700

ஸ்ரீராம் நிறுவனங்கள் ஆதரவில்
ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம்
மகாகவி பாரதியாரின்
140 ஆம் பிறந்த நாள் விழாவில்
23-4-2022 அன்று வெளியிடப்பட்டு
அன்பளிப்பாக வழங்கப்படுகிறது.

மேலட்டை ஓவியம் : இரா.மகேஷ்

தொகுப்பாக்கம் : பொன்னேரி பிரதாப்

ஒளிஅச்சு : ஸ்ரீ மகி கிராபிக்ஸ்
சென்னை - 600 004.

அச்சிட்டோர் : ஆர்.எஸ்.டி பிரிண்டர்ஸ்
சென்னை - 600 004.

பாரதியாரின்
குயில் பாட்டு

பேச்சுரை



ஆசிரியர் :

முனைவர் ந.அருள்

பதிப்புரை

நாட்டுக்குப் பெருமையூட்டும் உயர்ந்த தொழில் நிறுவனமான ஸ்ரீராம் குழுமத்தின் அங்கமான பாரதி கலை இலக்கியக் கழகத்தினர் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக மகாகவி பாரதியார் படைப்புகளைப் பரப்பும் முயற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். பாரதியாரின் பல்வகைச் சிறப்புகளைப் பல பரிமாணங்களில் கொண்டாடி வருவதோடு அவர்களின் அயராத முனைப்பால் ஆண்டுதோறும் பேச்சால், எழுத்தால், தொண்டால் பாரதியத்தைப் பரப்பி வரும் பாரதி ஆர்வலர்கள் – தக்க அறிஞர்கள் பலருக்குப் பரிசுகள் வழங்கிப் பாராட்டி வருகிறோம்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் "பாரதியார் பதில்கள் 100" என்ற நூலை முனைவர் ஔவை அருளைக் கொண்டு எழுத வைத்து வெளியீட்டு வருகை புரிந்த எழுநூறு படிகளையும் பாரதியார் பிறந்த நாள் விழாவிற்கு வருகை புரிந்த அனைவருக்கும் அன்பளிப்பாக வழங்கினோம்.

எங்களுக்கு ஊக்கம் தரும் வகையில் படிகளைக் கேட்டு நூற்றுக்கணக்கான கடிதங்கள் தொடர்ந்து வந்தன. இந்த வேண்டுகோள் எங்களுக்குப் பெருமையாக இருந்தது. எனவே அதே நூலை மூன்று மடங்கு பெரிதாக 366 கேள்விகளாகச் சேர்க்கச் சொல்லி ஈராண்டுகளுக்கு முன்னர் ஆண்டு (2020) "லீப் ஆண்டு" என்பதால் " 366 – நாளும் நினைவோம் – பாரதியார்" என்ற நூலை வெளியிட்டு வழங்கினோம்.

கடந்த சில ஆண்டுகளாக எத்தனை – எத்தனையோ இடர்களால் மக்கள் பெரிதும் துயருற்றார்கள் என்றாலும் நண்பர் அருளும் – தமிழறிஞர் ஔவை நடராசன் அவர்களின் செயலர் பொன்னேரி பிரதாப்பும் எப்படியோ முயன்று குயில்பாட்டை பேச்சுரையாக இப்போது வெளியிட முனைந்தனர்.

இசைமாமணி டாக்டர் சூரியபிரகாஷ் வளர்ந்து வரும் இசை மேதை, பாரதியாரின் ஆர்வம் எழுத்துக்கு எழுத்து இராக வடிவத்தில் பொங்கி வழிகிறது. அருள் பேசும் கம்பீரக்குரலின் புகழ் கேட்கக் கேட்கத் தூண்டுகிறது.

முனைவர் ஔவை அருள் எங்களுக்காக இந்தப் பணியில் மும்முரமாக உழைத்ததைப் பாராட்டுகிறேன். அருள் எமது துணைவராகப் பாரதியார் கலை இலக்கியக் கழகத்தில் பங்கேற்றுள்ளார். இந்த நூல் எளிய இனிய தமிழில் பள்ளிப் பிள்ளைகளும் படித்து மகிழத்தக்க வகையில் வெளிவந்துள்ளது.

மகாகவி பாரதியாரின் 140 ஆம் ஆண்டு பிறந்த நாள் நினைவாக, பாரதியார் படைப்புக்களுக்கு நூற்றாண்டு நினைவுப் பரிசாக ஶ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம் வெளியிடப்பெறும் இந்நூல் விலையில்லாமல் விருந்தினர் அனைவருக்கும் கையுறையாக வழங்கப்பெறுகிறது.

" குக்குக்கூ வென்று குயில்பாடும் பாட்டினிலே
தொக்க பொருளெல்லாம் தோன்றியதென் சிந்தைக்கே,
அந்தப் பொருளை அவனிக் உரைத்திடுவேன்"

ஜி.சுந்தரேசன்
தலைவர்

ஔவை நடராசன்
அமைப்பாளர்

முன்னுரை

உலகம் போற்றும் மகாகவி பாரதியாரின் கவிதைகள் எக்காலத்திற்கும் – என்றும் ஏற்ற காவியங்களாகும். மிக உயர்ந்த கருத்துக்களையும் சிறு குழந்தைகளும் புரிந்து கொள்ளும் எளிய தமிழில் எழுதப்பட்ட அப்படைப்புக்களின் சிகரங்களாக விளங்குபவை பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, கண்ணன் பாட்டு ஆகிய மூன்றுமாகும் .

மூன்று தலைமுறைகளாகத் தமிழ்த் தொண்டாற்றி வரும் பரம்பரையில் உதித்து இன்று அருந்தமிழ் அறிஞராகத் திகழும் டாக்டர் ஔவை அருள் நடராசன் எனது பள்ளித் தோழனாய் அமைந்தது நான் பெற்ற பேறு.

எனது இசை ஆர்வமும் அருளின் தமிழார்வமும் பள்ளிப் பருவத்திலேயே கனல் விட்டு எரியத் தொடங்கியதற்கு எங்கள் கிருத்தவக்கல்லூரி மேல்நிலைப்பள்ளியின் பாரதி விழாவில் நடைபெற்ற பாட்டுப் போட்டியும், பேச்சுப் போட்டியும் ஊக்கம் அளித்தன.

வருடங்கள் சென்றன, நான் இசைத்துறையில் பங்கு பெற்று புகழைத் தொடலானேன். எனது இசைக் கச்சேரிகளில் பாரதியின் புகழ்வாய்ந்த பாடல்கள் இடம்பெற்றாலும், அதிகம் பாடப்பெறாத குயில் பாட்டினை இசை வடிவமாகப் பாடி எல்லோரும் புரிந்து ரசிக்கும்படியான விளக்க உரையுடன் வெளியிட வேண்டும் என்ற வேட்கை என்னுள் அப்போதே எழுந்தது.

அதேவேளையில் தமிழக அரசின் மொழிபெயர்ப்புத் துறையில் முனைவராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் முனைவர் அருள் அவர்களின் குயில் பாட்டு பற்றிய கட்டுரையைப் படித்து நான் வியந்தேன், இசை வடிவத்துக்கு உரை கூற அவரை அணுகினேன்.

அவ்வாறு பிறந்ததே 'குயில் பாட்டுப் பாடுவோம்' என்ற எங்களது இசை, உரைச்சித்திரம். குயில் பாட்டு முழுவதையும் 120 ராகங்களில் மெட்டமைத்து நான் பாட, முனைவர் அருள் அதற்குத் தமிழில் விளக்க உரையும், ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பும் கூற, இன்றைய குழலி (youtube) மொழி இசையில் இன்றைய சூழலுக்கேற்ப 22 அத்தியாயங்களாக வெளியிட்டோம்.

இந்த இசை, உரைத் தொடருக்கு உலகில் பல்வேறு நாடுகளில் உள்ள தமிழ் அன்பர்களிடமிருந்து இன்றும் பாராட்டுதல்கள் குவிந்த வண்ணம் உள்ளது.

இந்தக் 'குயில் பாட்டுப் பாடுவோம்' ஒலிக்குரல் நிகழ்ச்சித் தொடரில் என் அருமை நண்பர் முனைவர் திரு. ஔவை அருள் நடராசன் தமிழிலும், ஆங்கிலத்திலும் வழங்கிய உரைகள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. அத்தனைப் பாடல்களையும் பாரதியின் எண்ண ஓட்டம் சிறிதும் மாறாமல் தமக்கே உரிய சிறப்பான தமிழ், ஆங்கில நடைகளில், கம்பீரக் குரலில் அருள் அவர்கள் விளக்கி உரைத்தது, அம்மகாகவியின் வரிகளுக்கும் எனது இசைக்கும் பெருமை சேர்த்தன.

தமிழ், ஆங்கில ஆர்வலர்களின் முழுமையான வேண்டுகோளுக்கிணங்க அவ்வுரைத் தொகுப்பு ‘குயில் பாட்டுப் பாடுவோம்’ என்ற நூல் வடிவில் வெளிவருவது பெருமகிழ்ச்சிக்குரியது. இதற்கு எனது இனிய நண்பர் திரு. ஔவை அருள் நடராசன் அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வெளியீடு எல்லோரும் படித்து இன்புற வேண்டிய ஒப்பற்ற நூலாகும்.

கலைமாமணி டாக்டர் இரா. சூரியபிரகாஷ்

இசை மேதை – சங்கீத வித்வான்

20 – 1 – 2022

காக்கைச் சிறகினிலே நந்தலாலா – நின்றன்
கரியநிறந் தோன்றுதையே நந்தலாலா

பார்க்கு மரங்கலெல்லாம் நந்தலாலா – நின்றன்
பச்சைநிறந் தோன்றுதையே நந்தலாலா

கேட்கு மொலியிலெல்லாம் நந்தலாலா – நின்றன்
கீத மிசைக்குதடா நந்தலாலா

தீக்குள் விரலைவைத்தால் நந்தலாலா – நின்னைத்
தீண்டுமின்பம்ந் தோன்றுதடா நந்தலாலா,

– மகாகவி பாரதியார்

ஆய்வுரை

பாரதியார் தன் நீண்ட கனவாகப் பாடிய குயில்பாட்டினை அவர் காட்டிய சோலை, குயில், காதல் சொன்ன கதை அத்தனையும் மாலையழகின் மயக்கத்தால் உள்ளத்தே தோன்றியதோர் கற்பனையின் சூழ்ச்சி எனச் சொல்லி விட்டு, இப்பாடலை விரித்துப் பொருளுரைக்கையில் கொஞ்சம் வேதாந்தத்தையும் இணைத்துப் பார்க்கச் சொல்கின்றனார். நுண்ணியலாக அணுகி, வேறு கோணத்தில் பார்ப்பதற்கு, முயல்வது எங்ஙனம் எனக் கொஞ்சம் உள்நோக்கிச் சிந்திப்போம். முதலில் இக்கதையின் பாத்திரங்களை திரும்பத் தெரிந்து கொள்வோம்.

1) பகற்கனவு காணும் பாரதியார்

2) கன்னிக்குயில்

3) வானரமாம் குரங்கு

4) காளை மாடு

5) குயிலின் பிறப்பைக் கூறும் பொதியமலை முனிவர்

6) குயிலின் முற்பிறவித் தந்தை வேடர் தலைவர் வீரமுருகன்

7) குயிலின் தாய்மாமன் மகன் மாடன்

8) குயிலைப் பெண் கேட்டு வரும் தேன்மலை வேடர் தலைவன் மொட்டைப் புலியன்

9) அவனின் மூத்த மகன் நெட்டைக் குரங்கன் (மாப்பிள்ளை கனவில் மிதப்பவன்)

10) சேரமான் மைந்தன். கதாநாயகன் குயில் விரும்பும் கோமகன் இவனே அடுத்த பிறவியில் தொண்டை வள நாட்டு ஆழிக்கரையின் அருகே உள்ள பட்டணத்தில் பிறந்துள்ள மானிடன் (பாரதியார் தான் தான் எனக் குறியீடாக் காட்டப்படுபவன்)

11) மாமன் மகன் மாடனும், மாப்பிள்ளையாக மணமகனாக முடியாமல் இருவரும் வன் பேய்களாகக் காடு, மலை எனச் சுற்றி வருபவர்கள்.

12) குயில் மறுபிறவியிலும், விந்தியகிரிச் சாரலில், ஒரு வேடனுக்கு மகளாகப் பிறந்து, ஊழ்வினையாய், பேய்களின் மாயச் சூழ்ச்சியால் மீண்டும் குயிலாக்கப்பட்டு, பாரதியின் பாடல் முழுதும் மாஞ்சோலையில் இன்னிசை பாடி வரும் இசைப்பறவை.

13) கவிஞர் இக்குயிலைக் கையில் எடுக்க, தேனிசைக்குயில் தெய்விகப் பெண்ணாக உருமாறுதல்.

இப்பாத்திரங்களைக் கொண்டு, புதுச்சேரிப் பூங்காவைக் களமாகக் கொண்டு, மாலை நேரத்தினைக் காலமாகக் கொண்டு கவிதையின் கற்பனையில் நாட்களும், பிறவிகளும் தாண்டி, விலங்கு, பறவை, மானுடன் என்று விரித்தும் பிரித்தும் தொடர்ந்து வரும் காதலைக் கவிப்பொருளாய்க் கொண்டு, ஒப்பற்ற அழகிய தமிழ்க்கவிதையினைக் கதையாய்க் கண் முன்னே நிறுத்துகின்றார்.

குயில் பறவை பெண்ணாக மாறிய பின், இறுதியில், காதல் பெருமயக்கில் சித்தம் மயங்கிச் சில போழ்து பக்கத்து இருந்த பின் பூங்கா அனைத்தும் மறைந்து விட்டன. அவர் அறையில் இருக்கும் பொருட்கள் தெரிய, வீட்டில் தான் உள்ளோம் என உணர்ந்தார்.

காதல் மனதில் இன்னும் நீங்காததால் உள்ளத்தில் தோன்றியது வெறும் கற்பனை, கனவு எனக் கூறாமல் கற்பனையின் சூழ்ச்சி எனச் சொல்கிறார். அவர் பெண்மைதான் தெய்விகம் என எடுத்துரைக்க, ஆசைக் கடலில் அமுதம், அற்புதத்தின் தேசம், தமிழ்ச் சொல்லில் அகப்படாத கவிதை, தூய சுடர் முத்து, பாரின் மிசை நின்றகொடி எனப் பெண்மையின் அழகை ஆராதிக்கின்றார்.

குயில்பாட்டில் அவர் பெண்மையையும் காதலையும் காதல் தாண்டி, பிறவி தோறும் தொடர்ந்து வருவது காதல் அழிவில்லாதது, உருவம் மாறினாலும் உள்ளம் மாறாதது என்பதை யெல்லாம் எடுத்துரைப்பதாகத் தோன்றுகிறது. கதையில் பூர்வ ஜென்மக் கதையின் அமைப்பு நமக்கு வடமொழியில் பாணபட்டர் எழுதிய காதம்பரியை நினைவூட்டுகிறது எனப் "புது நெறி காட்டிய பாரதி" என்ற நூலில் ஆர்.கே. கண்ணன் குறித்துள்ளார். காதலா ! காதலா ! என்ற கேள்வியின் சூழலில் சிக்கித் தத்தளித்துப் பல பிறவிகள் தொடர்ந்து காதல் வெல்லும் எனச் சித்தரித்துக் காட்டும் ஒரு மோகனமான அனுபவம் என அவர் கூறியுள்ளார்.

குயில் பாட்டில் உள்ள மாயமான, மர்மமான, மனோகரமான உட்கருத்துக்கள் 1800ம் ஆண்டுகளில் புகழ் பெற்றிருந்த லண்டன் நகரைச் சேர்ந்த ஜான்கீட்ஸ் எழுதிய குயிலுக்கு ஒரு புகழுரை (ODE TO THE NIGTINGALE) என்ற கவிதையின் தாக்கமாக இருக்குமோ என எண்ணவும் தோன்றுகிறது. அழகு மிகு பொருளெல்லாம் என்றென்றும் களிப்பூட்டுவன என்கிற கூற்றுடன் தொடங்கி, சங்கீதமும், காதலும் தான் உத்தமமான படைப்பு என்ற கருத்தமைப்பைக் காட்டியிருப்பதை, பாரதி தன் குயில்பாட்டில் குட்டிக்கதையாக விளக்கியுள்ளார்.

கீட்ஸின் பாடலிலும், குயில் மரத்துக்கு மரம், காட்டுக்கு காடு என்று தாவிச் சென்றுப் பாடி மறைந்து விடுவதைத் தன் அனுபவத்தின் பிரமையோ? கனவா? நனவா? என்ற வினாவுடன் முடித்திருப்பார். அதே போல் ஷெல்லியும் தன் வானம் பாடிப் பாடலில் கற்பனையும் சிந்தனையும், அனுபவமும் ஒரு மயக்க நிலைக்கு இழுத்துச் செல்வதை விளக்கியிருப்பார். பாரதி தன்னை ஷெல்லிதாசன் எனப் பெருமையுடன் கூறிக் கொள்வதுண்டு.

மாலையழகின் மயக்கத்தில் உள்ளத்தே தோன்றியதோர் கற்பனையின் சூழ்ச்சியைத் தன் கவிச் சொற்களால் படிப்பவரை மாய உலகிற்கு அழைத்துச் செல்கிறார். கண் விழித்துத் தான் கண்டதெல்லாம் பிரமை தானா என கதறி வீழ்கின்றார். பழவினையின் கட்டினால் மீட்டு நின் மேற் காதல் கொள்வான் என்ற எண்ணத்தில் மீள்கிறார்.

இக்கால நவீனக் கவிதைகளில் காணப்படும், மீயதார்த்தமும், மிகைக் கற்பனையும், நம் பழங்கால, புராண இதிகாசங்களையும் போன்று அமைவதை அறியலாம். கேப்ரியல், கார்சியா, மார்க்வஸ் மாரியோ, வரிகாஸ் (GABRIEL CARCIA MARCVEL MARIO VARGAS) போன்றநோபல் பரிசு பெற்ற எழுத்தாளர்களெல்லாம் தங்கள் புனைக் கதைகளில் இத்தகைய கற்பனையைப் பயன்படுத்துவதைக் காண்கிறோம். தன் வசனக் கவிதைகளின் மூலம், தமிழ் இலக்கியத்திற்குப் புதிய பாதை காட்டிய நம் கவிஞர் குயில்பாட்டின் மூலம் சர்ரியலிசம் வழி காட்டியிருக்கிறார்.

கனவுகளைக் கணிப்பதைப் பற்றி உலகப்புகழ் பெற்ற உளவியல் நிபுணர் சிக்மண்டு ப்ராய்டு தன் அரிய ஆய்வு நூலில் (INTERPRETATION OF DREAMS) கனவுகள் முழுமையாகவே மாயை எனக் கூறமுடியாது. கனவில் திருடர்கள் வருவது போன்ற பயம் ஏற்பட்டால், திருடர்களின் உருவங்கள் மாயைகளாக இருக்கலாம். ஆனால் மனதில் ஏற்படும் பயம் உண்மையானது எனக் கூறுகிறார். எனவே பாரதியாரின் குயில்பாட்டில் வரும் மாயத்தோற்றங்கள் பொய்யானாலும், அக்கவிதையும் உள்ளிருக்கும் காதல் சத்தியமானது எனத் தெரிகிறது.

பாரதியின் புதிய அத்வைதம், காக்கையும், குருவியையும் நீள் கடலையும், மலையையும், மானிடத்தோடு இணைக்கிறது. பாரதி பறவைகளை, இறைமையையும் தன் இதயத்தின் ஆழ் நிலையையும் இணைக்கும் உருவகங்களாகக் கொண்டு குயிலோடு

காதல் கொண்டு உறவாடுகிறார். மனித, பறவை இனக்காதல் வேட்கை, பரம்பொருளின் காதல் வேட்கை, முழு வடிவம் பெறுகிறது.

குயிலின் நாதமும் காதலும் இணைக்கப்பட்டுள்ளன என "மீராவின் பாரதியம்" தொகுப்பில் டாக்டர். கே. செல்லப்பன் குறிப்பிடுகிறார். குயிலின் இசையை, வாழ்வுச் சக்தியின் உருவகமான காதல் பிரம்மத்தின் காட்சி நிலையாகப் படைப்புச் சக்தியாகக் காட்டுகிறார். மாயையையும் உண்மையின் நிழல் போல பாரதிப் படைத்துள்ளார்.

இறவாத அழகும், இறவாத காதலும் கற்பனையோடு இணைக்கப்பட்டுப் பறவை மனிதன் இனம் மாறினாலும் பிறவிப்பல கடந்து வந்தாலும் நீங்காமல் நிலைத்து நிற்பது போல் உருவகிக்கிறார். பாரதியிலும், கீத்சின் 'குயிலுக்குப் புகழுரையிலும் கனவுலகமும் நனவுலகமும் மாறி மாறிக் காட்டப்பட்டுள்ளன. பாரதியின் குயில் பாட்டில் ஆன்மாவின் காதல் கவிஞனின் உருவகனம் ஒளிக்கின்றது.

பொன்னென நினைத்த குரல் பொங்கி வரும் இன்ப மொன்றே என பாரதி கூறுவது மேலை நாட்டு மரபான நைட்டிங்கேலின் பாட்டு காதல் துன்பத்தைக் குறிக்கும் என்பதற்கு எதிர்மறையாக எழுதியுள்ளார். எத்தனை கோடி இன்பம் வைத்தாய் என்று தான் நம் கவிஞர் இறைவனுக்கு நன்றி கூறுவார்.

‘கண்ணன் என் கவி’ என்ற சிட்டி எழுதிய நூலில் குயில் பாட்டு பற்றிக் கூறும் பொழுது ஆங்கிலத்தில் கோல்ரிட்ஜின் குப்லாகான் எத்தகையதோ அத்தகையது குயில்பாட்டு என்கிறார். இசை வடிவமாகிய குயில் காதல் என்றும், அது வாழ்க்கையின் உடல் சம்பந்தமற்று இருக்கும் வரை நிலையாது என்றும், வாழ்வின் சேர்க்கை நேர்கையில் துன்பம் தொடங்கி விடுகிறது என்று கவி கூறுகிறாரோ என எழுதியுள்ளார். பாரதியார் தன் குயில் பாட்டைக் காதல் பாட்டாகவே எழுதி வேதப்பொருளைக் கவிதையின் உட்கருவாகக் கொண்டு ஒரு கவிதைக் கடலை நம் முன் காட்டியுள்ளார். பாரதியார் தீந்தமிழ்க் கவிதை இன்னிசைக் குயிலாகக் காட்டித் தன் தமிழ்க் காதலை உருவகப்படுத்தியிருக்கிறார்.

கவித் திறனுக்கு கடையாக இருந்த வறுமை நிலை, விடுதலைப் போராட்டத்தின் இன்னல்கள் மாடனாகவும், குரங்கனாகவும், அவரைத் தமிழகத்திலிருந்து விரட்டியிருப்பதைக் கதையில் எதிராளிகளாக எடுத்துக் காட்ட முயன்றிருக்கலாம். எத்தனை பிறவி எடுத்தாலும் தன் தமிழ்க்காதல் தணியாதது என்பதைக் குயில் பாட்டில் கூறுவதாக நாம் ஏன் கொள்ளலாகாது ?

மகாகவி பாரதியார்

140ஆம் பிறந்த நாள் விழா அழைப்பிதழ்

ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம்

ஸ்ரீராம் நிறுவனங்களின் அங்கம்
சென்னை

பெருந்தகையீர்,

வணக்கம்.

மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழாவைத் தொடர்ந்து 34 ஆண்டுகளாக ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகத்தினர் சிறப்பாக நடத்தி வருகின்றனர். மகாகவியின் 140ஆம் பிறந்தநாள் விழா 23-4-2022 சனிக்கிழமை மாலை 6-00 மணிக்குத் தியாகராய நகர், ஸ்ரீ கிருஷ்ண கான சபா அரங்கில் நடைபெறும்.

தலைமை

இலக்கியத் திலகம் பேராசிரியர் **இரா.இராமன்** எம்.ஏ., பிஎச்டி.,

முதல்வர், மாநிலக் கல்லூரி, சென்னை.

மகாகவி பாரதியார் புகழ் பரப்பி வரும் ஆறு பெருமக்களுக்கு
விருது வழங்கிப் பொற்கிழி அளித்துப் பாராட்டிச் சிறப்பிப்பார்.

முன்னிலை

ஔவை நடராசன்

அமைப்பாளர், ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம்

சிறப்புரை

சொல்வேந்தர் **சுகி சிவம்**

ஜி.சுந்தரேசன்

தலைவர், ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம்

ஸ்ரீராம் நிறுவனங்களுக்காக

நிகழ்ச்சி நிரல்

வரவேற்புரை

ஔவை அருள்

நூல் வெளியீடும் - விருது வழங்கலும்

தலைமையுரை

இலக்கியத் திலகம் பேராசிரியர் **இரா.இராமன்** எம்.ஏ.,பிஎச்டி.,

முதல்வர், மாநிலக் கல்லூரி, சென்னை.

விருது பெறுவோர்

கவிஞர் மெய்ஞானி பிரபாகரபாபு

முனைவர் கலைமாமணி சூரியபிரகாஷ்

உரத்த சிந்தனை உதயம் இராம்

முனைவர் உலகநாயகி பழநி

திருவையாறு சிவகுமார்

நரம்பியல் மருத்துவர் மெய்கண்டான்

சிறப்புரை

சொல்வேந்தர் **சுகி சிவம்**

தலைப்பு

பாரதி நெறி

நிரலுரை

டாக்டர் **பாலசாண்டில்யன்**

ஒளிப்பதிவு

கலைமாமணி **யோகா**

இணைய ஒளியும் - ஒலியும் பதிவு

திரு நம்பி

SCAN ME

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்

பொன்னேரி பிரதாப்

விழா நிறைவில் முனைவர் ஔவை அருள் எழுதிய

குயில் பாட்டு - பாரதியார் நூல்

விலையில்லா விருந்தாக வழங்கப்பெறும்

அரசு வழிகாட்டுதலின்படி அனைவரும் முகக்கவசம் அணிந்து வரவும்

சமூக இடைவெளியைக் கடைபிடிக்கவும்.

குயில் பாட்டு !

பாரதியார் தன் குயில் பாட்டினை ஒரு அழகிய குறும்படம் தொடங்குவது போல், கடலலைகளை நோக்கி இளங்காலைச் சூரியனின் கதிர்கள் செல்வதைக் காட்டி ஆரம்பிக்கின்றார். புலரும் பொழுதின் இளஞ்சூரியனின் ஒளி ரேகைகள் நெருப்புக்கு எதிரில் செல்கின்ற நீலமணி போல் கடல் அலைகளுடன் கைகளைக் கோர்க்கின்றன.

ஓங்காரத்துடன் ஒலி எழுப்பிக் கொண்டு வேதத்தின் உட்பொருளை தினமும் பாடிக்கொண்டு வரும் திரைக் கடலின் கரையில் உள்ளது அழகிய செந்தமிழ் புதுவை நகரம். அந்நகரின் மேற்கே சிறிது தூரத்தில் ஒரு அழகிய மாஞ்சோலை அச்சோலையே, அருகிலுள்ள கிராமங்களிலிருந்து நான்கு திசைகளிலும் வேடர்கள் வந்து சுடுவதற்கு வசதியாக நடுவில் அமைந்துள்ளது. கதை தொடங்கும் இந்தக் காலையில் இதுவரை வேடர் யாரும் வரவில்லை. மேடைக்குயில் ஒன்று மட்டும் ஒரு உயர்ந்த மரக்கிளையில் அமர்ந்துள்ளது.

மனதை மயக்கும் குரலால் இன்னிசை கீதம் இசைக்கிறது. ஆண் குயில்கள் மேனி எல்லாம் புல்லரிக்கின்றன. ஆற்றல் அழிவுறுகிறது; உள்ளத்தில் காதல் நெருப்பு சுடர் விடுகிறது. மற்ற சோலைப் பறவைகள் அனைத்தும் தங்கள் காலைக் கடனை எல்லாம் மறந்து சொக்கிப் போய்ப் பரவச நிலையில் பறக்காமல் கேட்டு அமர்ந்துள்ளன.

மின்னலை எடுத்துக் கன்னல் சுவை தருவதுபோல் வானத்து மோகினி குயில் உருவாய் வந்ததுவோ என்பது போலத் தோன்றியது. இன்னிசைத் தீம் பாடல் எங்கும் பரவுகிறது. கலைஞர்களுக்குக் கவிதை வெறி எழுகின்றது. பாரதியும் படைப்பைத் தொடங்குகிறார். நீண்டதோர் கனவு போன்றுதான் கண்டதைக் கூறுகிறார். எனக்கு மனித உரு நீங்க வேண்டும் ; ஆண் குயிலாய் மாற வேண்டும்.

இப்பெண் குயிலை என்றும் பிரியாமல் காதலிக்க வேண்டும்; நீங்கள் களிப்புடன் வாழ வேண்டும் அல்லது இந்த இசைத்தீயில் வெந்து போய்விட வேண்டும் என பாரதி எண்ணி, எண்ணி ஏங்குகிறார் அய்யோ! யாராவது தேவர் யாரும் இவ்வாண் மங்கைக் குயில் குரலைக் கேட்டு விடுவாரோ? குக்குக்கூ எனும் இப்பாட்டில் ஒளிந்திருக்கும் உட்பொருளை என் அறிவிற்கு எட்டியவரை இந்த அவணிக்கு எடுத்துரைப்பேன் எனத் தொடங்குகிறார்.

1. குயில் பாட்டு

குயில் பாட்டுப் பாடுவோம் – இயல் – 1

ராகமாலிகை

விருத்தம்

ராகம் : பௌளி

காலை யிளம்பரிதி வீசுங் கதிர்களிலே
நீலக் கடலோர் நெருப்பெதிரே சேர்மணிபோல்
மோகனமாஞ் சோதி பொருந்தி முறைதவறா
வேகத் திரைகளினால் வேதப் பொருள்பாடி

ராகம் : பீம்பிளாஸ்

தாளம் : ஆதி

வந்து தழுவும் வளஞ்சார் கரையுடைய
செந்தமிழ்த் தென்புதுவை யென்னுந் திருநகரின்
மேற்கே, சிறுதொலைவில் மேவுமொரு மாஞ்சோலை,
நாற்கோணத் துள்ளபல நத்தத்து வேடர்களும்
வந்து பறவைசுட வாய்ந்த பெருஞ்சோலை,–
(தொகையறா)

ராகம் : பௌளி

அந்தமாஞ் சோலை யதனிலோர் காலையிலே,

அருளின் குரல் வரிகள்:—

நம்முடைய தமிழ்க் கவிஞர்கள் அனைவருக்கும் எங்கு எப்பொழுது சென்றாலும், குயிலைப் பார்த்து பாடுவது என்பது நமக்குத் தெரிந்து ஒரு பெரிய செயலாகும். கூவாய் கருங்குயிலே! என்று சொல்லிப் பாடுகின்ற இயல்புதான் நம் தமிழ்க் கவிஞர்களிடம் உள்ளது. அதுபோல பாரதியார் 1908 முதல் 1918 வரை பத்து ஆண்டுகள் புதுவையில் வாழ்ந்தார். புதுவையில் இருந்த போது அவருக்கு பல எண்ணங்கள் வளர்ந்த இடமாகும். அவர் சென்ற தோப்பு தலை சிறந்த தோப்பாகும். பாரதியாருடன் அரவிந்தர் வந்து பேசுவார். வா.வே.சு. அய்யர் வந்து பேசி செல்லும் இடம் அந்தத் குயில் தோப்பு. அந்த தோப்பில் பாரதிக்கு ஒரு நீண்ட கனவு. அந்தக் கனவுதான் குயில்பாட்டாக மலருகிறது. குயில்பாட்டு 744 அடிகளில் படைக்கப்பட்ட காப்பியம். இந்தக்குயில் படைப்பு ஒன்பது பகுதிகளாக விரிகிறது. குயிலின் பாட்டாக இடையிடையே வருகின்ற பகுதிகளைத் தவிர எஞ்சியுள்ள பகுதிகள் அனைத்தும் வெண்பா யாப்பில் அமைந்திருக்கின்றன. முப்பெரும் காப்பியங்களுள் இந்த காப்பியமான குயில்பாட்டு மட்டும் சங்க காலப் பத்துப்பாட்டுகளை ஏதோ ஒரு வகையில் நினைவூட்டுவதாகவே அமைந்துள்ளது. குக்கூ என்ற குரலில் காதல், அருள், இன்பம், நாதம், தாளம், பண், புகழ், உறுதி, கூடல், சூழல் ஆகிய பத்து பொருண்மைகளையும் ஒளியாளும், சூழலாகும் குரல் வெளிப்பட்ட முறையாலும் பாரதியார் உணருகிறார். குயில் பாட்டில் மக்கள் மட்டும் பாத்திரங்களாக வரவில்லை. பேய், பிசாசு, விலங்கு, புல் ஆகியனவும் பாத்திரங்களாகின்றன. எல்லா உயிர்களுக்கும் உள்ள காதல் உணர்ச்சி இங்கே புதிய முறையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

Where the Sea as sapphire heap aglow by fire in the dazzle of the Morning without any tire does with the speedy billows sing the lore of the Vedas and clasps the palmy Puduvai shore O honeyed tamils southern Puduvai shore not far to the west doth nestle a Mango grove where fowlers from the neighbouring hamlets love to shoot their feathery game...

இந்தக் காப்பியப் பாடல்களை இதுவரை எந்த தமிழ்ப் பாடகர்களும் முறையாக எடுத்துப் பாடியதில்லை.

****

குயில் பாட்டுப் பாடுவோம் - பகுதி - 2

குயில் பாட்டுப் பாடுவோம் – இயல் – 2

ராகம் : பிலஹரி
தாளம் : ஆதி

வேடர் வாராத விருந்துத் திருநாளில்,
பேடைக் குயிலொன்று பெட்புறவோர் வான்கிளையில்
வீற்றிருந்தே, ஆண்குயில்கள் மேனி புளகமுற
அற்றலழிவுபெற, உள்ளத் தனல் பெருக,
சோலைப் பறவையெல்லாம் சூழ்ந்து பரவசமாய்க்

காலைக் கடனிற் கருத்தின்றிக் கேட்டிருக்க,
இன்னமுதைக் காற்றினிடை எங்குங் கலந்ததுபோல்,

(தொகையறா)

மின்னற் சுவைதான் மெலிதாய் மிகவினிதாய்
வந்து பரவுதல்போல், வானத்து மோகினியாள்
இந்தவுரு வெய்தித்தன் ஏற்றம் விளக்குதல்போல்

அருளின் குரல் வரிகள்

குயில் பாட்டு பாரதியாரின் உயிர்ப்பாட்டு என்று சொல்லலாம்.

குயில் கூவுகிறதாம். கூவுகிற குயிலின் ஓசை எத்தனை விதமாய்ப் புனைந்து காட்டலாம் என்பதைத் தமிழ் உலகத்தில் ஏற்றம் பெறச் செய்த பொன்வரிகளைத்தான் குயிலின் குரலாகப் பாரதியார் கூறுகிறார்.

குயில் தன்னுடைய கதையைச் சொல்லத் தொடங்குகிறது. குயில் பேசுகிற அந்தக் குரல் இன்பத்தில் கனல் ஏற்றுவதாக மின்னொளியைக் கன்னலில் கலப்பது போல சொல்ல முடியாத சுவையோடு சூழ்ந்திருக்கும் அவ்வளவு பேரும் சொக்கிப் போகப் பாடத் தொடங்கி, தன் கதையைத் தொடங்குகிறது.

தமிழில் முன்னெல்லாம் கோகிலம் என்பார்கள். அதனால்தான் தம் அருமைத் திருமகளின் குரலுக்கு வசந்த கோகிலம் என்றே பெயரிட்டார்கள். கோகிலம் என்பது குயில் ஆகும். அதனால்தான் இசை அரசிக்குக் கோகிலவாணி என்று பெயரிட்டார்கள்.

கோகிலக் குரல் வேந்தராகச் சூரியப்பிரகாஷ் அவர்கள் சுடச்சுட இசையின் திறன்கள் படப்பட இப்போது பாடுவதைக் கேட்போம்.

****

குயில் பாட்டுப் பாடுவோம் - பகுதி - 3

குயில் பாட்டுப் பாடுவோம் – இயல் – 3
ராகமாலிகை

ராகம் : சுமனேச ரஞ்சனி

தாளம் : ஆதி

இன்னிசைத் தீம்பாடல் இசைத்திருக்கும் விந்தைகளை
முன்னிக் கவிதைவெறி மூண்ட நனவழியப்
பட்டப் பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம்
நெட்டைக் கனவின் நிகழ்ச்சியிலே – கண்டன் யான்.

(தொகையறா) ராகம் . சுமனேச ரஞ்சனி
கன்னிக் குயிலொன்று காவிடத்தே பாடியதோர்
(தொகையறா) ராகம் . நாட்டக்குறிஞ்சி
இன்னிசைப் பாட்டினிலே யானும் பரவசமாய்,

ராகம் : நாட்டக்குறிஞ்சி
தாளம் : ஆதி

"மனிதவுரு நீங்கிக் குயிலுருவம் வாராதோ?
இனிதிக் குயிற்பேட்டை என்றும் பிரியாமல்,
காதலித்துக் கூடிக் களியுடனே வாழாமோ?
நாதக் கனலிலே நம்முயிரைப் போக்கோமோ?"

ராகம் : குயில் குறிஞ்சி (சூரியப்பிரகாஷின் படைப்பு)
தாளம் : ஆதி

என்றுபல வெண்ணி ஏக்கமுறப் பாடிற்றால்,
அன்றுநான் கேட்டது, அமரர்தாங் கேட்பாரோ?
குக்குக்கூ வென்று குயில்பாடும் பாட்டினிலே
தொக்க பொருளெல்லாம் தோன்றியதென் சிந்தைக்கே,

(தொகையறா) ராகம் . குயில் குறிஞ்சி
அந்தப் பொருளை அவனிக் குரைத்திடுவேன்,
விந்தைக் குரலுக்கு, மேதினியீர், என்செய்கேன்!

அருளின் குரல் வரிகள்:–

கற்பனையும், கதையுமாக எழுதப்பட்ட கவிதைப் பகுதி இது. கதையின் துவக்கமாக அதன் பாத்திரங்களை அறிமுகப்படுத்தும் நோக்கில், முதலில் இக்கதையின் கதாநாயகியான குயிலி, குயிலைப் பற்றிக் கூறுகிறாள்.

அவர் காட்டும் முதல் காட்சி, ஒரு மாஞ்சோலை என்றும், வேடர்கள் வந்து பறவைகளைச் சுடும் ஒரு சோலை என்றும், வேடர் வராத ஒரு நாள் என ஒரு திகில் கதையைப் போலத் தொடங்குகிறார்.

பெண் குயிலொன்று, கிளையில் அமர்ந்துள்ளது. அதைப்பார்த்து, பரவசமுற்று பல ஆண் குயில்கள் அதனருகில் வருகின்றன. பெண் குயிலின் குரலில், ஆண் குயில்கள் அறிவிழந்து அமர்ந்துள்ளன. காலைக் கடன்களை மறந்து மயங்கியுள்ளன. குயிலின் குரல், காற்றில் கலந்த அமுதம். மின்னலைக் குரலில் சேர்த்துக் கூவும் குயிலின் குழலிசையில் தம்மை இழந்துள்ளன.

வானத்து தேவதைப் பெண்தான் இந்தக் குயிலுருவில் வந்து இருக்கிறாளோ என வியந்து திகைத்துள்ளன. பூவுலகம் வந்து, தேனாய் தன் குரலில் இசைக்கும் விந்தை இதுவோ என வியக்க வைக்கும் குயிலின் குரல். இதில், ஆண் குயில்கள் மட்டுமின்றி, பாரதியார் தன்னையும் ஒரு ஆண் குயிலாக எண்ணுகிறார். பட்டப்பகலிலேயே கவிதை வெறி உண்டாகி, நினைவிழந்து நீண்ட கனவு ஒன்றைக் காண்பதாகக் கவி பாடுகிறார்.

தன் மனித உருவம் நீங்க வேண்டும். தன் முன்னுள்ள பெண் குயிலுடன் காதலித்துக் களிக்க வேண்டும். தானும் ஒரு ஆண் குயிலாக மாறவேண்டும். பாட்டின் தீயிலே பொசுங்கி விட வேண்டும் என்றெல்லாம் எண்ணுகிறார். இப்படி அந்தத் தேவர்கள்கூட வினவுவார்களோ என ஐயமுறுகிறார்.

'குக்கூ' என்று குயில் பாடும் இந்தப் பாட்டில் என் சிந்தையை பறிகொடுத்தேன். பல கற்பனை எண்ணங்கள் எனக்குள் தோன்றுவதை இந்த உலகிற்கு உரைக்கப் போகிறேன். குயிலின் குரல் இன்பத்தேன் வந்து காதில் விழுந்ததால், வந்த போதையில் செய்வதறியாது இனி என் எண்ணங்களை வடிக்கப் போகிறேன் என முதல் அத்தியாயத்தை முடிக்கிறார்.

The winds that blew or sweets of lightning hid
In clouds all softly thinly spreading over
Or like a beauteous maiden from the bower
Of heaven, singing in this guise her tale
Such heavenly symphony and song did spell
My ears and I began to dream outright
Of glorious visions with a poets might
O bliss ! that I were changed into a koel
To woo her and enjoy her bosom still
And lose myself in her fiery flood of song
Such pining thoughts the shady trees among
She with her song inspired, O rarely heard
By Devas even,At the Ku Ku song of the bird
A world of thoughts up rose which I would fain
Lay bare, but a heavenly voice I seek in vain...

****

குயில் பாட்டுப் பாடுவோம் – இயல் – 4
நவராகமாலிகை சிட்டைஸ்வரங்களுடன்

2. குயிலின் பாட்டு

நவராகமாலிகை
தாளம் : ஆதி
பல்லவி
ராகம் – நளினகாந்தி

காதல், காதல், காதல்,
காதல் போயிற் காதல் போயிற்
சாதல், சாதல், சாதல். (காதல்)

சரணங்கள்

ராகம் : சூர்யா

1. அருளே யாநல் லொளியே,
ஒளிபோ மாயின், ஒளிபோ மாயின்,
இருளே, இருளே, இருளே. (காதல்)

ராகம் : சிம்மேந்திரமத்தியமம்

2. இன்பம், இன்பம், இன்பம்,
இன்பத் திற்கோ ரெல்லை காணில்,
துன்பம், துன்பம், துன்பம். (காதல்)

ராகம் : ஆரபி

3. நாதம், நாதம், நாதம்,
நாதத் தேயோர் நலிவுண் டாயின்,
சேதம், சேதம், சேதம். (காதல்)

ராகம் : ஷட்விதமார்கிணி

4. தாளம், தாளம், தாளம்,
தாளத் திற்கோர் தடையுண் டாயின்,
கூளம், கூளம், கூளம். (காதல்)

ராகம் : கேதாரகௌளை

5. பண்ணே, பண்ணே, பண்ணே,
பண்ணிற் கேயோர் பழுதுண் டாயின்,
மண்ணே, மண்ணே, மண்ணே. (காதல்)

ராகம் : பாகேஸ்ரீ

6. புகழே, புகழே, புகழே,
புகழுக் கேயோர் புரையுண் டாயின்
இகழே, இகழே, இகழே. (காதல்)

ராகம் : சங்கராபரணம்

7. உறுதி, உறுதி, உறுதி,
உறுதிக் கேயோர் உடைவுண் டாயின்,
இறுதி, இறுதி, இறுதி. (காதல்)

ராகம் : கல்யாணவசந்தம்

8. கூடல், கூடல், கூடல்,
கூடிப் பின்னே குமரன் போயின்,
வாடல், வாடல், வாடல். (காதல்)

ராகம் : சிந்துபைரவி

9. குழலே, குழலே, குழலே,
குழலிற் கீறல் கூடுங்காலை,
விழலே, விழலே, விழலே. (காதல்)

அருளின் குரல் வரிகள்:–

பெருமக்களே.

குயில்பாட்டின் இரண்டாம் இயல் தொடங்கியது. மிக அற்புதமாக நம்முடைய கலைமாமணி சூரியபிரகாஷ் தொடக்கத்திலிருந்து இதை மிக அழகாக “காதல், காதல், காதல் அது போயிற் சாதல், சாதல், சாதல்” என்று அந்த வரிகள்தான் இப்போது இந்தப் பாடலினுடைய உயிராக அமைகிறது. இந்த வரிகள் வைரவரிகள்; சாதனை வரிகள்; கல்வெட்டு வரிகள்.

சாசனவரிகள், இளையோரின் இதய கீதம்.

உலகெங்கும் உள்ளவர்கள் அனைவருக்கும் தெரிந்த தேன் வரிகள். இந்த வரிகளைப் பாரதியார் சொல்லும்போதே அவருக்குத் திருவள்ளுவருடைய இன்பத்துப்பால் தான் நினைவில் நின்றது.

அமுதம் போல் இருந்த அந்தப் பெண்ணை நான் தொட்ட பொழுதே எனக்கு இன்னுயிர் மலர்ந்தது என்ற குறட்பாக்களை எண்ணிக் கொண்டுதான்

‘வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிலை சாதல்

அதற்கன்னள் நீங்குமிடத்து’.

‘உறுதோறு உயிர் தளிர்ப்பத்தீண்டலால் பேதைக்கு அமிழ்தின் இயன்றன தோள்’

இந்தப் பாடல் வரிகளே வந்திருக்கும் என்று நாம் எண்ணத் தோன்றுகிற அளவுக்கு வரலாற்று வரிகளைப் பாடிச் சிறப்பித்த கலைமாமணி சூரியபிரகாஷை என்னென்று புகழ்வது !

பாரதியார் தன்னுடைய குயில்பாட்டு 2ஆம் அத்தியாயத்தைக் ‘குயிலின் பாட்டு’ என்று இசைப்பாடலாக வடிக்கிறார். ‘காதல் போயிற் சாதல்’ என்று பல்லவியாகத் தொடங்குகிறார். அதனை அடி நாதமாகக் கொண்டு குயில் கூவுவது போல் அடுக்கடுக்காகக் காதல் எத்தகையது என்றும், அது அழிந்து போனால் உயிரும் அங்கே உடலை விட்டு நீங்கி விடும் எனத் தொடங்குகிறார்.

ஒளி போனால் இருள் போகும் என்று நேரடியாகச் சொன்னவர், இன்பம் இல்லையேல் துன்பம் வரும் என நேரடியாகக் கூறாமல், நம்மைச் சற்றுச் சிந்திக்க வைக்கிறார். இன்பத்திற்கோர் எல்லை காணின் துன்பம் என்ற ஒரு கருத்தினை வலியுறுத்துகிறார். இன்பமும் துன்பமும், கடலும் நிலவும் ஒன்றையொன்று தொட்டுக் கொண்டுள்ளது போலவும், கடலின் கரையில் நீள் உலகம் நிற்பது போலவும், இன்பத்தின் எல்லையாகத் துன்பமும், துன்பத்தின் எல்லையில் இன்பமும் ஒன்றையொன்று தொட்டுக் கொண்டு எல்லையாக உள்ளன எனவும் எடுத்துக் காட்டுகிறார்.

அதையேதான் இன்பத்திற்கோர் எல்லை காணின் துன்பம்தான் முடிவு என எழுதுகிறார். இன்பத்தையும் அளவிற்கு மீறி எல்லைக்குச் சென்றால் துன்பம் வந்து சேரும் என எடுத்துரைக்கிறார். அடுத்த அடியில், பாரதியார் குயிலுக்குத் தெரிந்த இன்ப உணர்வு நாதத்தில்தானே உள்ளது என்று ‘நாதத்தில் ஓர் நலிவு உண்டாயின் சேதமாகிவிடும்’ எனக் கூறுகிறார்.

சுரம் பாடுகையில், ஒரு ஒலிக்குறிப்பு மாறினாலும், அந்த இராகம் அழிந்து விடும் என்று இசையறிஞர்கள் கூறுவர். அதை ஓர் ஆணித்தரமான கருத்தாகவும் கொள்வர். சங்கராபரணம் கொஞ்சம் தடம் மாறினால் கல்யாணி இராகமாகி விடும் என்பர். குயில் அவ்வாறு கூறுவது மிகப் பொருத்தம் தானே? இராகம் குறிப்பிடும்போது தாளம் தானாகவே வரும். சுதி மாதா என்றால், இலயம் பிதா என்று சொல்வர். எனவேதான் 'தாளத்திற்கு ஓர் தடையுண்டாயின் கூளமாகிவிடும்' எனத் தவறிய தாளம் குப்பையாகி விடுகிறது என எடுத்துக் காட்டுகிறார்.

தப்புத்தாளங்கள் வெறும் ஒலிக்கூட்டங்கள். அவை வெறும் சத்தங்கள் ; இனிமையை இழந்த இரைச்சல்கள்; குப்பையாகிப் போன கூச்சல்கள்; களையிழந்து போன கதறல்கள்; தாளமிட்டு நளினமான ஒலியில் நர்த்தனமாகி வருகின்ற தாளங்கள்தான் நாதத்தின் உயிர் என்பது குயில் கூறும் இசை இலக்கணமாகும் என்று பாரதியார் இப்பாடலில் கூறுகிறார்.

இசையும் தாளமும் சேர்ந்தது தான் பண்ணாகும். குயிலின் குரல் பண்ணாகி, பாரெங்கும் காற்றில் பரவி, சோலையனைத்தையும் இசை மழையில் நனைக்கிறது. அதே பண்ணிற்குப் பழுது ஏற்பட்டு விட்டால் அது மண்ணாகிவிடும். 'காதல் போயிற் சாதல் என்பதும் அதுவேதான்.' கண்ணைக் காக்கும் இரண்டு இமைகள் போலவே காதலைக் காத்திடுவோம். உயிர்த் தீயில் வளர் ஜோதி இந்தக் காதல். அது நெஞ்சுக்கு இனிய அமுதாகும். துயர் நீங்கி உள்ளம் சுடர் விடச் செய்யும். காதல் ஒளியாகவும், பண்ணாகவும், தாளமாகவும், நாதமாகவும் உலகில் உலவும் உயிர்ப்பொருள்.

இவை இல்லையேல் மரணமே கிட்டும் எனத் தன் மனம் நெகிழ்ந்து குயிலின் பாட்டு மூலம் பாரதியார் அன்பின் மகத்துவத்தை அழகாக எடுத்துரைக்கிறார்.

குயில் மேலும் கூவுகிறது; காதல் புகழ் தரும்; உறுதி தரும்; உணர்வு தரும் எனக் காதல் குறித்து எடுத்துரைக்கிறது. புகழில் இழுக்கு நேர்கையில், இகழ்ச்சி அடைவதற்கு வாய்ப்புண்டு. 'புகழுக்கு ஓர் புரையுண்டாயின் இகழே இகழே இகழே' எனப் புகழ்கிறது அந்தக் குயில். புரை என்பது புண்ணாவதைக் குறிக்கும். காதல் புகழடைவதற்குத் தியாகம் தேவை. தியாகமும், சமர்ப்பணமும் விட்டுக் கொடுத்தலும் புரிதலும் ஒன்று சேர்ந்து காதலைப் புகழின் உச்சிக்கு எடுத்துச் செல்லும். காதலில் உறுதி சேர்ந்தால்தான் உண்மையான வெற்றியும் கீர்த்தியும் வெல்ல முடியும்.

'ஒன்றா உலகத்து உயர்ந்த புகழினைப் பெறுவதற்கு உண்மையும், அறமும் உறுதுணையாதல் வேண்டும். அவற்றிலிருந்து பாதை விலகும்போது இகழ்ச்சிக்கு வழி வகுத்துத் தீமையும், கேடும் சூழ்ந்து கொள்ளும்' என்று குயில் பாடுகிறது.

காதல் பாதையில் புகழுடனும், உறுதியுடனும் செல்கையில் உள்ளம் நிலை குலைந்தாலோ, பலவீனமடைந்தாலோ அதுவே இறுதிக்கும், இயலாமைக்கும் அழைத்துச் சென்றுவிடும். திண்ணிய நெஞ்சமும், திடமான எண்ணமுமே உறுதியை உள்ளத்தில் உட்கார வைக்கும். அவை உடையாமல் பார்த்துக் கொள்ளும் மனப்பக்குவமே மாண்பையும், மன மகிழ்ச்சியையும் அளிக்கும்.

காதல், வாழ்வின் புகழும், உறுதியும் கூடலுக்கு வழி வகுக்கும். கூடிக்குடும்பமாக இருந்து குதூகலமாக வாழ்வது இயற்கை தரும் வரப்பிரசாதமாகும். குமரியும், குமரனும் ஒற்றுமையாக வாழ்வதற்கு அன்பும், கருணையும் ஒளிமயமாய் இணைந்து இருக்கையில் இன்பமும், இசையுமாய் வாழலாம். கூடலில் பிரிவினை ஏற்பட்டால், குமரன் வெளிச் செல்வான் என்றால் வாழ்வெனும் பயிர் வாடிவிடும். வாழ்வில் களையிழந்து வலுவின்றி, வருந்த நேரிடும் என்று குயில் நடக்கப் போவதை இங்கு குறிப்பாகப் பாடுகிறது.

வாழ்வின் இசை, குழலின் நாதமாய் இருக்கையில், புல்லாங்குழலில் கீறல் விழுந்தால், இசை அழிந்துவிடும். விழலுக்கு இறைத்த நீராகும். குழலில் நுழைந்து செல்லும் காற்று, வெறும் காற்றாகவே செல்லும். பிரிவும், கீறலும் வாழ்வைப் பாதித்து விடாமல் பாதுகாக்கக் காதல் வாழ்க்கையில் ஒற்றுமை அவசியம். பின் நடக்கப் போகும் சோகத்திற்குக் குயில் முன்னதாகவே படிப்பவருக்கு எடுத்துக் காட்டித் தம் இரண்டாவது அத்தியாயத்தைத் திகில் கருவை உள்ளடக்கி முடிக்கிறார் பாரதியார்.

Love! Love! Love!
When love is lost, when love is lost,
Death! Death! Death!
Grace! O, gracious light!
If the light of grace, O, be effaced
This night, O, endless night!
Joy! Joy! Joy!
If bound of Joy were to be found,
This grief, O, endless grief
Music! Music! Music!
If music fails, O, music fails,
This waste, O, endless waste!
Measure, O, musical measure!
If there be blemished in the measure!
This rubbish beyond measure!
Melody! Melody! Melody!
If blemish creeps in melody,
This dust, O, useless dust!
Fame! Fame! Fame!
If blame attaches to one's fame,
This shame, O, endless shame!

Strength of will, O, will,

From strength of will, if there be spill,

This death, O, certain death

Sweet, O, lovers meet

But after the meet for lovers to park,

This pain, O, endless pain!

Flute! Flute! Flute!

A rift in the flute, O rift in the flute,

Turns it a reed-a useless reed.

****

குயில் பாட்டுப் பாடுவோம் – இயல் – 5
ராகமாலிகை

3. குயிலின் காதற் கதை
ராகம் : மோகனம்

(தொகையறா)
மோகனப் பாட்டு...
ராகம் : மோகனம்
தாளம் : ஆதி

மோகனப் பாட்டு முடிவுபெறப் பாரெங்கும்
ஏக மவுன மியன்றதுகாண், மற்றதிலோர்
இன்ப வெறியுந் துயரும் இணைந்தனவால்
பின்புநான் பார்க்கப் பெடைக்குயிலஃ தொன்றல்லால்
மற்றைப் பறவை மறைந்தெங்கோ போகவும் (இவ்)

ராகம் : அசாவேரி
தாளம் : ஆதி

(இவ்)

ஒற்றைக் குயில் சோக முற்றுத் தலைகுனிந்து
வாடுவது கண்டேன் மரத்தருகே போய் நின்று,
“பேடே! திரவியமே! பேரின்பப் பாட்டுடையாய்!
ஏழுலகம் இன்பத்தீ ஏற்றுந் திறனுடையாய்!
பீழையுனக் கெய்தியதென்? பேசாய்!” எனக்கேட்டேன்.

ராகம் : ராகேஸ்ரீ
தாளம் : ஆதி

மாயக் குயிலதுதான் மானுடவர் பேச்சினிலோர்
மாயச்சொல் கூறமனந் தீயுறநின்றேன்.
“காதலை வேண்டிக் கரைகின்றேன், இல்லை யெனில்
சாதலை வேண்டித் தவிக்கின்றேன்” என்றதுவால்.

ராகம் : அசாவேரி
தாளம் : ஆதி

“வானத்துப் புள்ளெல்லாம் மையலுறப் பாடுகிறாய்,
ஞானத்திற் புட்களிலும் நன்கு சிறந்துள்ளாய்.
காதலர்நீ யெய்துகிலாக் காரணந்தான் யா”
தென்றேன்.

ராகம் : ராகேஸ்ரீ
தாளம் : ஆதி

வேதனையும் நாணும் மிகுந்த குரலினிலே
கானக் குயிலிக் கதைசொல்ல லாயிற்று–

அருளின் குரல் வரிகள்:–

இசைவாணர் சூரியபிரகாஷின் இசை மழை மிக உன்னதமான மாமழையாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. கடந்த மூன்று வாரங்களாகப் பாரதியாரின் உயிர்ப்பாட்டான குயில் பாட்டை ஊன் உருக அவர் இசைத்துக் காட்டியிருக்கிறார். அலைபுரளக் கரைபுரள இராகங்கள் அவர் குரலில் வழிந்தன. இது குறித்து, உலகிலிருந்து பல்வேறு பெருமக்கள் எல்லாம் என்னை அழைத்துக் குயில் பாட்டை இப்படி உருக்கமாகப் பாடுகிறாரே,

கலைமாமணி சூரியபிரகாஷ், அவரை என்னென்று புகழ்வது? என்னென்று புகழ்வது? என்றுதான் என்னிடம் நண்பர்கள் பலர் தொலைபேசியில் அழைத்துச் சொல்கிறார்கள்.

நண்பர்களே !

பாரதியாரின் குயில் பாட்டின் கதை மிக அழகாகத் தொடங்கியுள்ளது. இந்த இடத்தில் ஒரு கருத்தைச் சொல்கிறேன். ஆங்கிலப் பேரறிஞர் வால்டர் பேட்டர் ஒரு முறை சொன்னார்.

"All art constantly aspire to the condition of music" என்று சொல்லிக் காட்டுகிறார்.

உலகில் உள்ள கலைகள் யாவும் இசையின் உயர்ந்த நிலையை அடையவே தாமும் ஆசைப்பட்டு அதனை அளாவி நிற்கும் நிலையில் இசைக்கு என்ன குறை கூறமுடியும் ? என்றார் வால்டர் பேட்டர்.

எந்தவொரு படைப்பையும் இசையாக மாற்றிக் காட்டுகிற அந்த விதம், அந்த இசைக்கும், அந்தப் பாட்டுக்கும், அந்தக் கருத்துக்கும் ஒரு மாபெரும் சிறப்பு என்று கூறினார். அந்தச் சிறப்பு, இந்த குயில் பாட்டில் பொதிந்து கிடக்கிறது. குயில்பாட்டை இசைப்பாட்டாகவே பாடிக் காட்டிய பெருமை சூரியபிரகாஷையே சாரும்.

பாரதியார், மிக நுட்பமாக, குயிலுடன் தன்னுடைய தோழருடன் பேசுவதைப் போலவே பேசிக்காட்டுகிறார். குயிலே, என்னுடைய திரவியமே! என்றெல்லாம் ஒரு குயிலைப் பார்த்து எவ்வளவு பெருமையாக ஒரு

கவிஞராம், ஒரே தமிழ்க்கவிஞராம் பாரதியாரால் மட்டும்தான் பேசிக் காட்டி வென்று காட்ட முடிந்தது.

குயில் பாட்டு ஆழங்காண முடியாத கடலாக, பல்வேறு விளக்கங்களைக் கொண்ட விடுகதையாக, புதிர்க்கதையாக, பொற்குவியலாக அமைந்திருக்கிறது.

குயிலின் காதல் கதை

பாரதியார் தன் குயில் பாட்டில் குயிலை அறிமுகப்படுத்தி, அதன் குரலிசையை வழிமொழிந்த பின் குயிலின் காதல் கதையை எடுத்துரைக்கத் தொடங்குகிறார்.

குயிலின் இனிமையான குரல் வழி வந்த காதல் போயிற் சாதல் என்ற மோகனப் பாட்டு முடிந்ததும் எங்கும் ஓர் அமைதி. மாஞ்சோலை முழுவதும் ஒரு மௌனம். இன்பமும் துன்பமும் இணைந்து நிரம்பியது அக்கணம்.

சோகமே வடிவாக ஒரு பெண் குயில் மட்டும் தனித்திருக்க, மற்றொரு பறவை மகிழ்ந்து எங்கோ பறந்து சென்று விட்டதால் அது சோகமாகத் தலை குனிந்து வாட்டத்துடன் வலிவிழந்து வாடியிருப்பதாகப் பாரதியார் காண்கிறார்.

மரத்தருகே சென்று கேட்கிறார். "ஏய் பெண்ணே, கலைச்செல்வமே! காதில் இன்ப ஊற்றாகப் பாடலைப் பாடும் பறவையே, இவ்வுலகமனைத்தும் உன் இசை கேட்டு மகிழுமே! ஆனால், நீ மட்டும் ஏன் சோகமாக அவலமுற்றது போல் அமர்ந்துள்ளாய்? என்ன காரணம் என்று கூறமாட்டாயா? என்று கேட்கிறார்.

அக்குயிலும் மனிதர் பேசும் மொழியிலேயே கேட்பவர் மனத்தின் கனம் கூடுமாறு, வேதனைத் தீ மூளுமாறு சொல்கிறது. “என் காதலுக்காகக் குரல் எழுப்புகிறேன்; அழுது புலம்புகிறேன்; இல்லையேல் நான் இறந்து விட வேண்டும் என மனமுருகும் வார்த்தைகளாகக் கொட்டியது அக்குயில். பாரதியின் உள்ளம் துணுக்குற்றது. குயிலே நீ இப்படிக் கூறலாமா? பிற பறவைகள் மனம் மகிழும்படி பாடக் கூடிய வல்லமை படைத்தவள் நீ. உனக்குக் காதலன் கிடைக்கவில்லை என்பது அதிசயமாக உள்ளதே என்ன காரணம் ? எனக் கேட்கிறார்.

அதற்கு அந்தச் சோலைக்குயில்,

மெதுவாக வெட்கமும் வேதனையும் கலந்த குரலில் தன் கதையைச் சொல்லத் தொடங்குகிறது.

The Koel ended her song of love and soft.
A quiet spread. Mad love and sorrow swift
Now weighed me down. The birds had taken flight
But the koel all along in a piteous flight
Sat pining for love. Nearing the tree, O Bird,
My treasure, sweetest singer of songs which could
The seven world's set on fiery love,
What sorrow deep afflicts thee here now?
Tell me! I asked. O thrilled to hear her speak
The tongue of man! O novelty! all meek
I stood. I pine for love, if not for death!
She said. Thou song bird of the blue enchanted
In wisdom all the bird excelled! in vain
How could you seek a lover meet? with pain
And shame full rampant in her voice she went
To tell her tale of love, O sweet! and thus the story ran.

****

குயில் பாட்டுப் பாடுவோம் – இயல் – 6
ராகதாளமாலிகை

ராகம் : ஹிந்தோளம்
(விருத்தம்)

"மானக் குலையும் வருத்தமுநான் பார்க்காமல்

உண்மை முழுதும் உரைத்திடுவேன் மேற்குலத்தீர்!
பெண்மைக் கிரங்கிப் பிழைபொறுத்தல் கேட்கின்றேன்.
அறிவும் வடிவுங் குறுகி அவனியிலே
சிறியதொரு புல்லாய்ச் சிறியேன் பிறந்திடினும்,
தேவர் கருணையிலோ தெய்வச் சினத்தாலோ

தாளம் . மிஸ்ர ஜம்பை

யாவர் மொழியும் எளிதுணரும் பேறு பெற்றேன்.
மானுடவர்நெஞ்ச வழக்கெல்லாந் தேர்ந்திட்டேன்,
கானப் பறவை கலகலெனும் ஓசையிலும்,
காற்று மரங்களிடைக் காட்டும் இசைகளிலும்,
ஆற்றுநீ ரோசை அருவி யொலியினிலும்

ராகம் : பந்துவராளி
தாளம் : மிஸ்ர ஜம்பை

நீலப் பெருங்கடலெந் நேரமுமே தானிசைக்கும்
ஓலத் திடையே உதிக்கும் இசையினிலும்,
மானுடப் பெண் வளருமொரு காதலினால்
ஊனுருகப் பாடுவதில் ஊறிடுந்தேன் வாரியிலும்,
ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும்,

ராகம் : மாண்ட்
தாளம் : சங்கீர்ண ஜம்பை

நெல்லிடிக்குங் கொற்றொடியார் குக்குவெனக்
கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ண மிடிப்பார்தஞ் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகு பல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்

ராகம் : ரசிகப்ரியா
தாளம் : ஆதி

வேயின் குழலோடு வீணைமுதலா மனிதர்
வாயினிலுங் கையாலும் வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலுங் காட்டினிலும் நாளெல்லாம்
நன்றொலிக்கும்
பாட்டினிலும், நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்.

ராகம் : பைரவி
தாளம் : ஆதி

நாவும் மொழிய நடுக்கமுறும் வார்த்தைகளைப்
பாவிமனந் தானிறுகப் பற்றிநிற்ப தென்னேயோ?
நெஞ்சத்தே தைக்க நெடுநோக்கு நோக்கிடுவீர்.
மஞ்சரே, என்றன் மனநிகழ்ச்சி காணீரோ?

(தொகையறா)

காதலை வேண்டிக் கரைகின்றேன், இல்லையெனில்,
சாதலை வேண்டித் தவிக்கின்றேன்" என்றதுவே.

அருளின் குரல் வரிகள்:–

அந்தச் சோலைக் குயில் தன் சோகக் கதையைச் சொல்லத் தொடங்குகிறது.

என் மானத்திற்கு ஏற்பட்ட சோதனையையும், துன்பத்தையும் பார்க்காமல் உண்மை முழுவதையும் சொல்லி விடுகிறேன்.

உயர் குலத்தோரே கேளுங்கள்! நானும் பெண் என்பதால் நான் கூற இருப்பதைச் சிறிது மனமிரங்கிச் செவி மடுப்பீர்.

இந்த உலகில், உருவத்திலும் அறிவிலும் சிறிய வடிவிலான பறவையாக நான் பிறந்திருந்தாலும், இறைவன் அருளாலோ அல்லது தேவர்களின் கோபத்தினாலோ நான் அனைத்து உயிர்களின் மொழிகளையும் புரிந்து கொள்ளும் சக்தி பெற்றேன். மனிதர்களின் மனத்தில் ஓடும் எண்ணங்களையும் புரிந்து கொள்ளும் சக்தி கிடைத்தது.

காட்டில் பறக்கும் பறவைகளின் கலகலவென்ற மகிழ்ச்சியின் ஓசையிலும், மரங்களின் இலைகளை அசைத்து காற்று இசை பாடுவதிலும், ஓடும் நதியின் ஒலியிலும் ஆர்ப்பரித்து விழும் நதியின் ஆரவாரத்திலும், கடல் அலை எழுந்து கரையைத் தொட்டு ஓடும் ஓயாத ஒலியிலும் என் மனத்தைப் பறிகொடுத்தவள் நான்.

அதுமட்டுமல்ல, மனித குலப் பெண்கள், காதலாகிக் கசிந்துருகிப் பாடும் தேன் மழைப் பாட்டிசையிலும், ஏத்தம் இறைக்கையில் எழுந்து வரும் இசைப்பாட்டிலும், உரலில் நெல்லைப் போட்டு உலக்கையினால்

மூச்சிறைக்கும் வேளையிலும் குக்கூ என்று கொஞ்சுமொழி தெறிக்கும் இராகத்திலும், வெற்றிலை போட சுண்ணாம்பு இடிக்கையில் தாள இலயத்துடன் வரும் பாட்டொலியிலும், வயல் வெளியில் பெண்கள் இசைக்கும் பல்வேறு கானத்திலும், பெண்கள் கூடி வட்டமிட்டு நின்று கும்மி பாடும் இன்னிசையிலும், புல்லாங்குழல், வீணை, இசைக்கருவிகள் மூலம் மனிதர்கள் விரலிலும் குரலிலும் இசைக்கும் பாட்டிலும், வீட்டிலும், வெளியிலும், நாட்டிலும், காட்டிலும் என எங்கெல்லாம் இசை என்னும் இன்ப ஒலி கேட்கின்றதோ, அந்த பாட்டில் என் நெஞ்சை பறிகொடுத்த பாவி நான் என்கிறது அந்தக் குயில்.

O high born,shedding shame and sorrowing
I will all truth lay bare.And thou,bear
With a maidens faults and me pardoned,On earth
A bird though born,with knowledge nothing worth,
By love of Devas or great heavens ire,
I know with ease the tongues of men entire
I am, O strange,their thoughts and dreams versed in
In the chirpy sounds
Of the songbirds calls
The music of the breeze
Blowing through the trees
The soothing gurgling tunes
Of gushing streams and tumbling falls
The eternal cadence
Of the waves of the blue seas,
The honey sweet melody
Of young women in love
The waterwheel movements
And songs matching their move
The giggle of the slender women
while pounding paddy

The lilt of the songs
of lime crushers in the quarry,
The energising ballads
Sung by farming women,
The beat of the kummi dancers
With the tinkle of their bangles
The grace in their moves
As they glide around in circles,
The magical flow of music
Played, strung or beat
In flute, Veena or like,
Strike a chord very deep
Stir me from deep within,
Anytime anywhere, anyway,
I lose myself in all these
And get carried far, far, away.

****

குயில் பாட்டுப் பாடுவோம் – இயல் – 7
ராகதாளமாலிகை

ராகம் : ஈசேனி
தாளம் : ஆதி

சின்னக் குயிலிதனைச் செப்பியவப் போழ்தினிலே,
என்னைப் புதியதோர் இன்பச் சுரங்கவர,
உள்ளத் திடையும் உயிரிடையும் ஆங்கந்தப்
பிள்ளைக் குயிலினதோர் பேச்சின்றி வேறற்றேன்,
“காதலோ காதலினிக் காதல் கிடைத்திலதேல்
சாதலோ சாதல்“

ராகம் : ரஞ்சனி
தாளம் : கண்ட சாபு

எனச் சாற்றுமொரு பல்லவியென்
உள்ளமாம் வீணைதனில், உள்ளவீ டத்தனையும்
விள்ள ஒலிப்பதலால் வேறொர் ஒலியில்லை,
சித்தம் மயங்கித் திகைப்பொடுதான் நின்றிடவும்,
அத்தருணத் தேபறவை யத்தனையுந் தாந்திரும்பிச்

ராகம் . பேகடா

தாளம் . மிஸ்ர ஜம்பை

சோலைக் கிளையிலெலாந் தோன்றி யொலித்தனவால்,
நீலக் குயிலும் நெடிதுயிர்த்தாங் கிஒதுரைக்கும்,
“காதல் வழிதான் கரடுமுர டாமென்பர்,
சோதித் திருவிழியீர்! துன்பக் கடலினிலிலே
நல்லுறுதி கொண்டதோர் நாவாய்போல் வந்திட்டீர்,

ராகம் . தர்பாரி கானடா
தாளம் . மிஸ்ர ஜம்பை

அல்லலறநும்மோ டளவளாய் நான்பெறுமிவ்
வின்பத் தினுக்கும் இடையூறு மூண்டதுவே,
அன்பொடு நீரிங்கே அடுத்தநான் காநாளில்
வந்தருளல் வேண்டும், மறவாதீர், மேற்குலத்தீர்!
சிந்தை பறிகொண்டு செல்கின்றீர் வாரீரேல்.

ராகம் . ஆஹிரி
தாளம் . ஆதி

ஆவி தரியேன் அறிந்திடுவீர், நான் காநாள்,
பாவியிந்த நான்குநாள் பத்துயுகமாக் கழிப்பேன்.
சென்று வருவீர், என் சிந்தை கொடுபோகின்றீர்,
சென்று வருவீர்" எனத் தேறாப் பெருந்துயரங்
கொண்டு சிறுகுயிலுங் கூறி மறைந்ததுகாண்.

அருளின் குரல் வரிகள்:–

குயில் மேலும் கூறுகிறது. என் நா தழுதழுக்கிறது. வார்த்தைகள் நடுங்குகின்றன. மனம் பதறுகிறது. தொலைநோக்குப் பார்வை கொண்டால், என் நெஞ்சத்தைப் புரிந்து கொள்வீர்கள் நீங்கள். என் நண்பரே, என் சிந்தனைக் காட்சி சிறிதும் புரியவில்லையா? காதலுக்காகக் கதறுகிறேன். கண்ணீர் விடுகிறேன். இல்லையேல் என் சாதலைக் காணத் தவிக்கிறேன் என்று குயில் கூற, துணுக்குற்றது கவிஞர் மனம்.

நான் உனக்குக் காதலனா? சின்னக்குயிலின் மதுர மொழியில் உள்ளம் கவர்ந்தவராய் உரைக்கப்பட்டதால் உள்ளமும், உயிரும் உருகி நிற்க, பேச்சின்றிச் சிலையானார்.

குயில் கூறிக் கதறிய வார்த்தை, இவரைக் குழப்பியது. காதல் இல்லையேல் இறந்து விடுவேன் என்று சொல்லும் சொல், உள்ள வீணையில் உட்கார்ந்து சோக கீதம் பாடியது.

குழம்பிய நிலையில், நம் கவிஞர் நின்றார். மயக்கமுற்று, திகைப்படைந்து நின்றேன் என்று கூறுகிறார்.

அவர்களின் தனிமையைக் கெடுக்க, அந்த நேரத்தில், எல்லாப் பறவைகளும் ஒன்று கூடி, கிளைமேல் அமர்ந்து, ஒலியெழுப்பின.

காதல் குயில் பெருமூச்சு விட்டு மேலும் கூறியது, காதலின் வழி கரடுமுரடானது என்று கேள்விப்பட்டுள்ளேன். ஒளி படைத்த என் கண்ணனே, துன்பக் கடலில் தத்தளிக்கும் நேரத்தில், என்னைக் காக்க ஒரு கப்பல் போல் நீவிர் வந்தீர். என் கவலை தீர, தங்களிடம் அளவளாவ விரும்பியவருக்குத் தடை வந்துவிட்டது. நான் தம் தனிமையைக் கெடுக்க. ஆனால் ஒரே ஒரு செய்தி, இன்றிலிருந்து நான்காம் நாள், மீண்டும் இங்கேயே நாம் சந்திப்போம். மறந்து விடாதீர்கள் என் மன்னனே. என் சிந்தனை அனைத்தும் உங்களிடம் பறிகொடுத்துள்ளேன். மறவாமல் வந்து விடுங்கள். வரவில்லையேல் எனக்கு மரணம் நிச்சயம். நான்காம் நாள் என்று அக்குயில் மீண்டும் நினைவூட்டியது.

காத்திருக்கும் நான்கு நாட்களும், பத்து யுகங்களாகும் எனக்கு. இப்பொழுது சென்று வாருங்கள் எனக் கூறிய அந்தக் குயில், பறந்து மறைந்து விடுகிறது எனப் பாட்டுடைத் தலைவர் இந்தப் பகுதியை முடிக்கிறார்.

The Koels love refrain,I pine for love or else for death,

Like the cooing of love

Played on the guitar of my heart and filled the spaces of my soul entire and thrilled

As soul enchanted there I stood, on the mangrove.

Rang wild again with song on every bough

For all the birds had now returned, Alas said the koel with a sigh they say, the course of love is rugged

You bright eyes in your prime came to me as a life boat floating in correct time.

For one fast drowning in a sea of grief

For my sweet enjoyment

I as it is but brief

Of your loving company, a hindrance sore

Had clouding spread, O lord that I adore

I beg you come again four mornings hence

O fail not, born high who had robbed me since my heart

If failed to return back I will die

Remember 4 days from now on, each day will lie full heavily on me as 4 yuga's ten

O please do return, the loveliest of all men...

There are 4 yugas

Krudayugam 17,28,000 years

Threthayugam 92,96,000 years

Thwapurayugam8,64,000years

Kali yugam 4,32,000 years duration

****

குயில் பாட்டுப் பாடுவோம் – இயல் – 8
ராகதாளமாலிகை

4. காதலோ காதல்

ராகம் : பிஆர்க்
தாளம் : ஆதி

கண்டதொரு காட்சி கனவுநன வென்றறியேன்,
எண்ணுதலுஞ் செய்யேன், இருபது பேய் கொண்டவன்போல்
கண்ணும் முகமும் களியேறிக் காமனார்
அம்பு துளிகள் அகத்தே அமிழ்ந்திருக்க,
கொம்புக் குயிலுருவங் கோடிபல கோடியாய்

ராகம் : நாடகப்ரியா
தாளம் : சங்கீர்ண சாபு

ஒன்றேயதுவாய் உலகமெலாந் தோற்றமுற
சென்றே மனைபோந்து சித்தந் தனதின்றி,
நாளொன்று போவதற்கு நான்பட்ட பாடனைத்தும்
தாளம் படுமோ? தறிபடுமோ? யார் படுவார்?
நாளொன்று போயினது, நானு மெனதுயிரும்,

ராகம் : சூரிய வசந்தா (சூரியபிரகாஷின் படைப்பு)
தாளம் : ஆதி

நீளச்சிலை கொண்டு நின்றதொரு மன்மதனும்,
மாயக் குயிலுமதன் மாமாயத் தீம்பாட்டும்,
சாயைபோ லிந்திரமா சாலம்போல் வையமுமா
மிஞ்சி நின்றோம். ஆங்கு மறுநாள் விடிந்தவுடன்,
(வஞ்சனை நான் கூறவில்லை) மன்மதனார் விந்தையால்

ராகம் : சண்முகப்ரியா

தாளம் : கண்ட எகம் திஸ்ர நடை

புத்திமனஞ் சித்தம் புலனொன் றறியாமல்,
வித்தைசெயுஞ் சூத்திரத்தின் மேவுமொரு
பொம்மையென
காலிரண்டுங் கொண்டு கடுகவுநான் சோலையிலே
நீலிதனைக் காண வந்தேன், நீண்ட வழியினிலே
நின்றபொருள் கண்ட நினைவில்லை. சோலையிடைச்

ராகம் : மலையமாருதம்

தாளம் : ஆதி

சென்றுநான் பார்க்கையிலே செஞ்ஞாயிற்
றொண்கதிரால்
பச்சைமர மெல்லாம் பளபளென என்னுளத்தின்
இச்சை யுணர்ந்தனபோல் ஈண்டும் பறவையெலாம்
வேறெங்கோ போயிருப்ப வெம்மைக் கொடுங்காதல்

(தொகையறா)

மீறவெனைத் தான்புரிந்த விந்தைச் சிறுகுயிலைக்
காணநான் வேண்டிக் கரைகடந்த வேட்கையுடன்
கோணமெலாஞ் சுற்றிமரக் கொம்பையெலாம் நோக்கி
வந்தேன்.

அருளின் குரல் வரிகள்:–

காதலோ காதல். பாரதியார் குயிலின் காதல் கதையைத் தொடர்கிறார். நான்கு நாட்கள் கழித்து சந்திப்பதாகச் சொல்லி குயில் மறைந்ததும் பாரதியாரின் மனம் பேதலித்தது. தான் கண்ட காட்சி கனவா இல்லை நினைவா என்று குழம்பியது. நினைவிழந்தவராக நின்றார். ஒரு பேயின் உருவத்தைப் பார்த்தாலே உள்ளம் நடுங்கி, உடல் வியர்க்கும் அல்லவா? இருபது பேய்களை ஒன்றாகப் பார்த்தால் எப்படி இருக்கும்? அந்த அதீத நிலையைப் பாரதியார் பெறுகிறார்.

பயத்தில் கலக்கமும், காதல் மயக்கமும் உடன் கூட, முகமும் விழிகளும் உள்ளக்கிளர்ச்சியின் சிகரத்தைத் தொட்டன. காணும் கரிய உருவமெல்லாம் காதல் குயிலாய்க் காட்சியளித்தன. உலகமெல்லாம் உள்ளக்கிடக்கையின் குயில் உருவமாக நின்று சித்தத்தைச் சீர்குலைக்கிறது.

நாட்கள் சென்றன. ஒரு நாள் போவதற்குள் அவர் மனம், மத்தளம் போன்றும், மரத்தடி போன்றும் அடிபட்டு, இடிபட்டு ஏக்கத்தில் துயில் இழந்தார். உயிர் துறந்தது போலானார். மன்மதன் வில்லைத் தோளில் சாய்த்து, எதிரில் நின்றான். மனத்தில் மயக்கும் குயில் வந்து வந்து செல்கிறது. குயிலின் குரல், இந்திரலோக இசையானது. மந்திர சக்தியாய், மாயப்பாடலாய் எங்கும் பரவியது. புத்தியும் மனமும் புகலிடம் இன்றிப் புரண்டன. சித்தம் கலங்கியது.

ஆவியைத் தொட்ட காதல் மாயையால் சாவியிட்ட பொம்மையானார். கால் கடுக்கச் சோலைக்குள் செல்கிறார். நீலிக்குயிலின் வேட்கை வேகம் தருகிறது. எந்த ஒரு பொருளும் வழியில் தெரியவில்லை. அவ்வேளையில், கதிரொளி பச்சை இலைகள் தோறும் பட்டுத் தெறிக்கிறது.

பாரதியாரின் காதல் மனத்தை இயற்கையே உணர்ந்தது போல் இருக்கும் பறவையெல்லாம் எங்கோ சென்று விட்டன. கவிஞரோ கானக்குயிலைத் தேடுகிறார். கோணமெல்லாம் பார்வையைச் சுழல விடுகிறார். கொடுங்காதல் மனம் கொண்டு மரக்கொம்பையெல்லாம் உற்று உற்று நோக்குகிறார்.

You robbed me of my heart, please do return
Implored the koel engulfed in grief.
Ah, turn the walked steps,fond lover,
Koel left the mangrove in a gloom
O blissful vision,was it a dream or thought

I know not,nor I will think about it,
For caught in a whirl of devils did I seem
My eyes and checks are flushed
For in my bosom lies
The shaft of Cupid,God of love, manmathan
Myriad fold the form
Of the koel multiplied and in the home
Of the world she seemed the only occupant
Reeling with thoughts as these and in a ferment
I staggered home.
The day dragged heavily along
I suffered untold misery
As never loom or cymbal.
Passed a day
My soul and I with cupid, god of love, manmathan bow

held by

And the mysterious koel with her

Trancing lay swelled as the shades and fruits of the magic way upon the world.

Now when tomorrow, I tell no lies with cupid, god of

love, manmathan spell

In a frame of mind that know not what was what.

Such as a doll in jugglery, to find my lass

I rushed, that which I saw the path along

I remembered not.

When I walked the trees among

I saw them glittering in the sun all gold.

The birds as if they knew my love untold

Left the man grove,

With passion all over me

I peered each bush and tree

The Koel had left the forest she was not to be seen

With tremor in my heart I searched for it...

****

குயில் பாட்டுப் பாடுவோம் – இயல் – 9
ராகதாளமாலிகை

5. குயிலும் குரங்கும்

ராகம் : சுத்த தன்யாசி
தாளம் : ஆதி

மற்றைநாட் கண்ட மரத்தே குயிலில்லை,
சுற்றுமுற்றும் பார்த்துத் துடித்து வருகையிலே–
வஞ்சனையே! பெண்மையே! மன்மதனாம்
பொய்த்தவே!
நெஞ்சகமே! தொல்விதியின் நீதியே! பாழுலகே!
கண்ணாலே நான்கண்ட காட்சிதனை
என்னுரைப்பேன்!

ராகம் : அமீர் கல்யாணி
தாளம் : ஆதி

பெண்ணால் அறிவிழக்கும் பித்தரெல்லாம்
கேண்மினோ!
காதலினைப் போற்றுங் கவிஞரெலாங் கேண்மினோ!
மாதரெலாங் கேண்மினோ! வல்விதியே கேளாய் நீ!
மாயக் குயிலோர் மரக்கிளையில் வீற்றிருந்தே
பாயும் விழிநீர் பதைக்குஞ் சிறியவுடல்

ராகம் : நாகஸ்வராவளி
தாளம் : சதுஸ்ர எகம் கண்ட நடை

விம்மிப் பரிந்து சொலும் வெந்துயர்ச்சொல்
கொண்டதுவாய்

அம்மாவோ! மற்றாங்கோர் ஆண்குரங்கு தன்னுடனே
ஏதேதோ கூறி இரங்கும் நிலைகண்டேன்.
தீதேது? நன்றேது? செய்கைத் தெளிவேது?

ராகம் : அடாணா
தாளம் : சதுஸ்ர எகம் கண்ட நடை

அந்தக் கணமே அதையுங் குரங்கினையும்
சிந்தக் கருதி உடைவாளிற் கைசேர்த்தேன்.

தாளம் : கண்ட எகம்

(அந்தக் கணமே அதையுங் குரங்கினையும்
சிந்தக் கருதி உடைவாளிற் கைசேர்த்தேன்).

கொன்றுவிடு முன்னே குயிலுரைக்கும் வார்த்தைகளை
நின்று சற்றே கேட்பதற்கென் நெஞ்சம் விரும்பிடவும்,
ஆங்கவற்றின் கண்ணில் அகப்படா வாறருகே
ஓங்கு மரத்தின்பால் ஒளிந்துநின்று கேட்கையிலே

ராகம் : கரஆரப்ரியா (நாட்டுப்புறபாணி)
தாளம் : சதுஸ்ர எகம் திஸ்ர நடை

குக்குக்கூ! குக்குக்கூ!
வானரரே! வானரரே!
வானரரே! வானரரே!

பேடைக் குயிலிதனைப் பேசியது.—"வானரரே!
இடறியா மேன்மையழ கேய்ந்தவரே! பெண்மைதான்
எப்பிறப்புக் கொண்டாலும், ஏந்தலே! நின்னழகைத்
தப்புமோ? மையல் தடுக்குந் தரமாமோ?

செஞ்சுருட்டி (காவடிச்சிந்து)
(தொகையறா)

மண்ணிலுயிர்க் கெல்லாந் தலைவரென மானிடரே
எண்ணிநின்றார்தம்மை, எழிலொருகால்

தாளம் : சதுஸ்ர எகம் கண்ட நடை உர்வகுத்தல்,
கோயில், அரசு, குடிவகுப்புப் போன்றசில
வாயிலிலே, அந்த மனிதர் உயர்வெனலாம்.
மேனி யழகினிலும், விண்டுரைக்கும் வார்த்தையிலும்
கூனி யிருக்கும் கொலுநேர்த்தி தன்னிலுமே
வானரர்தஞ் சாதிக்கு மாந்தர் நிக ராவாரோ?

ராகம் . கதனகுதூஆலம்
தாளம் . சதுஸ்ர எகம் திஸ்ர நடை

வானரர்தஞ் சாதிக்கு மாந்தர் நிக ராவாரோ?
ஆன வரையும் அவர்முயன்று பார்த்தாலும்,
பட்டுமயிர் மூடப் படாத தமதுடலை
எட்டுடையால் மூடி எதிருமக்கு வந்தாலும்,
மீசையையும் தாடியையும் விந்தை செய்து வானரர்தம்

ஆசை முகத்தினைப்போ லாக்க முயன்றிடினும்
ஆடிக் குதிக்கும் அழகிலுமை நேர்வதற்கே
கூடிக் குடித்துக் குதித்தாலும், கோபுரத்தில்
ஏறத் தெரியாமல் ஏணிவைத்துச் சென்றாலும்,
வேறெதைச் செய்தாலும், வேகமுறப் பாய்வதிலே

ராகம் . பூர்ணசந்திரிகா
தாளம் . ஆதி

வானரர்போ லாவரோ? வாலுக்குப் போவதெங்கே?
ஈனமுறுங் கச்சை இதற்கு நிகராமோ?
பாகையிலே வாலிருக்கப் பார்த்ததுண்டு, கந்தைபோல்,
வேகமுறத் தாவுகையில் வீசி எழுவதற்கே
தெய்வங் கொடுத்த திருவாலைப் போலாமோ?

ராகம் . ஜோன்புரி
தாளம் . ஆதி

சைவசுத்த போசனமும் சாதுரியப் பார்வைகளும்—
வானரர்போற் சாதியொன்று மண்ணுலகின் மீதுளதோ?
வானரர் தம்முள்ளே மணிபோல் உமையடைந்தேன்,
பிச்சைப் பறவைப் பிறப்பிலே தோன்றிடினும்,
நிச்சயமா முன்புரிந்த நேமத் தவங்களினால்

(தொகையறா)

தேவரீர் காதல்பெறுஞ் சீர்த்திகொண்டன், தம்மிடத்தே
ஆவலினாற் பாடுகின்றேன், ஆரியரே கேட்டருள்வீர்!"
(வானரப் பேச்சினிலே மைக்குயிலி பேசியதை
யானறிந்து கொண்டுவிட்டேன், யாதோ ஒரு
திறத்தால்)

அருளின் குரல் வரிகள்:-

சென்றவாரம், கலைமாமணி சூரியபிரகாஷ் பாடிய அந்த உருக்கமான பாடலின் இராகம் என்ன என்று என்னிடம் பலர் கேட்டனர். கலைமாமணி சூரிய பிரகாஷே தானே புனைந்த சூரிய வசந்தம் என்ற இராகத்தில் மிக

மிடுக்காக அவர் பாடியதும். அவருடைய தோற்றப் பொலிவும், அவர் பாடிய அந்த நயத்தைக் கேட்டு உலகமே சுருண்டது என்று சொன்னால் மிகையாகாது.

முன்பு பார்த்த மரத்தில் இப்போது அந்தக் குயிலைக் காணவில்லை. சுற்றும் முற்றும் பார்த்துக் கவலைப்படுகிறார் கவிஞர். குயிலைக் காணாமல் புலம்புகிறார். ஏ! பெண் குயிலே! என்னை வஞ்சித்து விட்டாயே. மன்மதனின் பொய்மை வடிவமே எனத் தன் விதியை நொந்து இந்த உலகமே பாழாகி விட்டதாகப் புலம்புகிறார். மேலே பார்க்கிறார். அவர் கண்ட காட்சி, அவரைப் பித்தனாக்கியது.

ஆ! என்ன இது? பெண்ணால் அறிவிழக்கும் பேதைகளே, காதலைப் புகழ்ந்து பாடும் மேதைகளே! பெண்களே! இங்கே பாருங்கள். என்னைக் காதலிப்பதாக அழுத அந்த நீலிக்குயில், இப்போது ஒரு ஆண் குரங்குடன் உட்கார்ந்து ஏதோ நேசமாய் கொஞ்சிக் கொண்டிருக்கிறதே என்று கதறுகிறார். பாரதியாருக்குக் கோபம் வந்தது. எது நல்லது, எது கெட்டது, என்ன செய்வது எனப் புரியாமல் இருவரையும் கொன்று விட உடைவாளை எடுக்க ஒரு கணம் யோசித்தார்.

அவர்களைக் கொல்வதற்கு முன்னே அந்தக் கள்ளத்தனமான இணையர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் எனத் தெரிந்து கொள்ள விழைந்தார். அவர்களின் கண்களுக்குத் தெரியாமல் ஒரு மரத்தின் கீழ் நின்று ஒளிந்து நின்று கேட்கலானார்.

பெண் குயில் பேசிக் கொண்டிருந்தது. வானரமே! என் அழகிய ஆண் மகனே! எத்தனை பிறவி எடுத்தாலும் உன் அழகை விஞ்ச முடியுமோ! இந்த மனிதர்கள் எவ்வளவு தவறாகத் தங்களை உலகின் தலைவர்களாக எண்ணுகிறார்கள். ஒரு வேலை, வீடு, கோயில், நகரம் என அமைத்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அரசு, மக்கள் குடிவாழ்வு என்று வேண்டுமானால் அவர்கள் உயர்ந்துள்ளதாக மமதை கொள்ளலாம். ஆனால், குரங்கு இனத்திற்கு மனிதர்கள் நிகராக முடியுமா? அவர்களுக்குக் குரங்கினைப் போல் பட்டு முடியால் மேனி முழுவதும் மூடி இருக்குமா? அவர்களின் மழித்த உடலை எட்டுத் துணி கொண்டு மறைத்தாலும் தாடி, மீசை வளர்த்துக் கொண்டு குரங்குக்குப் போட்டியாக ஒப்பனை செய்து கொண்டாலும், உங்களைப் போல் வேகமாக ஓடி, ஆடிக் குதிக்க முடியுமா? அப்படியே குதித்தாலும் கோபுரத்தில் ஏறுவதற்கு மனிதருக்கு ஏணி தேவையே.

உங்களைப் போல் மனிதன் எத்தனையோ செய்ய எத்தனித்தாலும் வேகமாகப் பாய முடியுமா? சரி விடுங்கள்... அவர்களுக்கு உங்களைப் போல் அழகான வால் உண்டா? தலைப்பாகையில் வேண்டுமானால் அவர்கள் வால் வைத்துக் கொள்ளலாம்... இடுப்பில் இருக்கத் துணி இறுக்கிக் கொண்டிருக்கலாம். இவையெல்லாம் நீங்கள் குதித்து எழுகையில் வீறு கொண்ட வாலுக்குச் சமமாகுமா?

இந்தக் குரங்குக் கூட்டத்தில் என் கண்மணியாய் நீ அமைந்தாய். உருவத்தில் சிறிய தாழ்வான இந்தப் பறவையாய் நான் பிறந்திருந்தாலும், முன் செய்த தவத்தினால், தங்களின் காதல், அன்பு பெற நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

தலைவரே! தங்களின் மேல் கொண்ட ஆவலினால், நான் பாடுகிறேன்... நீங்கள் கேளுங்கள்... எனச் சொல்லிக் கொண்டு இருந்ததைக் கவிஞர் கேட்கிறார். ஏதோ ஒரு திறம் வந்ததால், குயிலின் பேச்சும், குரங்கின் ஒலியும் புலவருக்கு இப்போது புரிந்து வருகிறது. இப்போது, பாரதியாருக்கு அந்த நேசக் குயில். நீசக்குயிலாகத் தெரிகிறது. அதன் அழகான குரல், இப்போது அனலாய் உள்ளது. குயிலோ, குரங்கினைப் பார்த்து, குதூகலமாய்ப் பாடிக் கொண்டிருக்கிறது. அதே பாடல்,

காதல் காதல் காதல் – காதல் போயிற்

சாதல் சாதல் சாதல்.

இசையை விலங்கறியும், மழலை அறியும், பாம்பும் கேட்டுப் படமெடுக்கும் என்றெல்லாம் பசப்பு மொழியில் பாட, குரங்கு மதிமயங்கி, வெறி கொண்டு தாவிக் குதிக்கிறது, தாளம் போடுகிறது.

உருகுதே! ஆகா உருகுதே!

ஆவி உருகுதே!

எனக் கண்ணைச் சிமிட்டுகிறது. மண்ணை வாரி இறைக்கிறது. ஆசைக்குயிலே, என் தேவதையே, உன் மேல் நானும் காதல் கொண்டு விட்டேன். எனக்காகக் காதல் இல்லையேல் இறந்து விடுவதாகக் கூறினாயே! உன்னைப் பிரிய மனம் வருமா? அருகில் வா. உனக்கொரு ஆசை முத்தம் தருகிறேன் எனக் காதல் மொழி பேசுவதைக் கவிஞர் கேட்டு கொதித்தெழுகிறார். கைவாளை எடுத்துக் குரங்கின் மேல் வீச, கனவா அல்லது நனவா? குரங்கின் நல்ல நேரம் வாளுக்குத் தப்பி முகத்தைச் சுளித்துக் காட்டி விட்டு, அங்கிருந்து தப்பி ஓடி விடுகிறது. அந்த மாயக்காரி கருங்குயிலும் எங்கோ மறைந்து விடுகிறது. அந்தச் சோலையில், அனைத்துப் பறவைகளும் மொத்தமாய் ஒலியெழுப்ப மேலே என்ன செய்வது என புரியாது தட்டுத் தடுமாறுகிறார் பாரதியார். எட்டி எட்டித் தேடுகிறார். அந்தக் குட்டிப் பிசாசுக் குயில், கும்மிருட்டில் மறைந்து விடுகிறது.

O treachery, weak womanhood
O false love god, O heart the source of all the ills of man
O ruinous world how can I tell
That which I saw,
Fond men caught in the spell
Of maddening womankind,O hear
The treacherous Koel with tears
A trembling sat on the bough,
Ah, now one hears her sighs and words of love to a monkey by
Does good or evil, a sense of virtue high
Prevail, forthwith to smile her and her lover
I laid my hand on sword,but fond to hear
Her tale of love again,I his by a tree and listened.
Said koel to the monkey free,
O lover beautiful without compare
Whatsoever life the weaker sex doth bear
O noble lord, could she escape the charm
Is love to be rebuffed and suffer harm
Man in his pride does think himself the king of gods creation.
Temples, cities, sprang from his hands.
In sovereignty and caste and creed
And things as these, the might be great,
But need he be told he could not ever aspire to reach

The height of beauty of the form and speech and binding graces.
Let him try as best he can
And in fold on fold of clothes full dressed
Can he excel thee in thy silken hair
Let shave his face as smooth he can and fair
To thee surpass and drink his fill with friends
And dance and leap and for the help it lends
The ladder scale and climb pagodas high
Of no avail are these attempts to view with thee, for where to seek the tail they lack
Could loin cloth with thy tail compare
At back of hood through slips a rag how could it aid
A speedy leap, as tail that never failed
Thy beauteous tail god given
With graceful look and vegetarian to the core
Thou could not brook
Compare with any other on earth
I seek rare gem of the race
The love a bird all meek
A beggar bird that by the goodly act of former birth aspiring for thy shaft of love
I sing love bidden, hear, O hear
By some strange accident, perchance of a year
Gone by, I knew koels amorous talk to the monkey in the language of that stock

****

குயில் பாட்டுப் பாடுவோம் – இயல் – 10
ராகதாளமாலிகை

ராகம் : மோகனகல்யாணி
தாளம் : ஆதி

காதல், காதல், காதல்,
காதல் போயிற் காதல் போயிற்
சாதல், சாதல், சாதல்.

(தொகையறா)

முதலியன (குயலின் பாட்டு)
நீசக்குயிலும் நெருப்புச் சுவைக்குரலில்

ஆசை ததும்பி அமுதூறப் பாடியதே.–
காட்டில் விலங்கறியும், கைக்குழந்தை தானறியும்,
பாட்டின் சுவையதனைப் பாம்பறியும் என்றுரைப்பார்.
வற்றற் குரங்கு மதிமயங்கிக் கள்ளினிலே
முற்றும் வெறிபோல் முழுவெறிகொண்டாங்ஙனே

ராகம் : தன்யாசி
(தொகையறா)
(முற்றும் வெறிபோல் முழுவெறிகொண் டாங்ஙனே)

ராகம் : தன்யாசி
தாளம் : ஆதி

தாவிக் குதிப்பதுவுந் தாளங்கள் போடுவதும்
“ஆவி யுருகுதடி, ஆஹா ஹா!” என்பதுவும்,
கண்ணைச் சிமிட்டுவதும், காலாலுங் கையாலும்
மண்ணைப் பிறாண்டியெங்கும் வாரி யிறைப்பதுவும்,
“ஆசைக் குயிலே! அரும் பொருளே! தெய்வதமே!

ராகம் : காங்கேயபூஷணி
தாளம் : ஆதி

பேச முடியாப் பெருங்காதல் கொண்டு விட்டேன்,
காதலில்லை யானாற் கணத்திலே சாதலென்றாய்,
காதலினாற் சாகுங் கதியினிலே என்னை வைத்தாய்,
எப்பொழுதும் நின்னை இனிப்பிரிவ தாற்றுகிலேன்,
இப்பொழுதுதே நின்னை முத்தமிட்டுக் களியுறுவேன்”

ராகம் : கருடத்வனி
தாளம் : ஆதி

என்றுபல பேசுவதும் என்னுயிரைப் புண்செயவே,
கொன்றுவிட எண்ணிக் குரங்கின்மேல் வீசினேன்
கைவாளை யாங்கே! கனவோ? நனவுகொலோ?
தெய்வ வலியோ? சிறு குரங்கென் வாளுக்குத்
தப்பி முகஞ்சுளித்துத் தாவி யொளிந்திடவும்

ராகம் : சாலகபைரவி
தாளம் : ஆதி திஸ்ர நடை

ஒப்பிலா மாயத் தொருகுயிலுந் தான்மறைய,
சோலைப் பறவை தொகைதொகையாத் தாமொலிக்க,
மேலைச் செயலறியா வெள்ளறிவிற் பேதையேன்
தட்டுத் தடுமாறிச் சார்பனைத்துந் தேடியுமே,
குட்டிப் பிசாசக் குயிலையெங்கும் காணவில்லை
எங்கும் காணவில்லை..

அருளின் குரல் வரிகள்:–

சென்றவாரம் கலைமாமணி சூரியபிரகாஷ் பாடிக் காட்டிய அந்த விதத்தைக் கண்டு பலர் மகிழ்ந்தனர். மகிழ்ச்சியில் விம்மினர். இன்பத்திலே துள்ளினர். பாட்டு என்பது இப்படித்தான் பாட வேண்டும் என்பதற்கு ஒரு வரையறையை நாம் அமைத்துக் கொள்ள வேண்டும் என்றால், கலைமாமணி சூரியபிரகாஷ் போல பாடவேண்டும் என்று இலண்டனிலிருந்து என் நண்பர் புதுயுகன் தன்னுடைய மகனுக்குச் சொன்னதாகத் தொலைபேசியில் பேசி மகிழ்ந்தார்.

நண்பர்களே, குயில் பாட்டு எவ்வளவு அழகாக ஒவ்வொரு கட்டத்தையும் தாண்டி வருகிறது. இந்த முறை ஏதோ ஒரு திறம் வந்ததால், குயிலின் பேச்சும், குரங்கின் ஒலியும் புலவருக்கு இப்போது புரிந்து வருகிறது.

இப்போது பாரதியாருக்கு அந்த நேசக் குயில், நீசக்குயிலாகத் தெரிகிறது. அதன் அழகான குரல். இப்போது அனலாய் உள்ளது. குயிலோ, குரங்கினைப் பார்த்து குதூகலமாகப் பாடிக் கொண்டிருக்கிறது. அதே பாடல், எந்தப் பாடல்? நம்முடைய நண்பர் கலைமாமணி சூரிய பிரகாஷ் பாடிப் பாடி மகிழ்ந்து காட்டுகிறாரே, காதல், காதல், காதல், காதல் போயிற் சாதல் சாதல் சாதல். இசையை விலங்கறியும், பாம்பும் கேட்டுப் படமெடுக்கும் என்றெல்லாம், பசப்பு மொழியில் பாட, குரங்கு மதிமயங்கி, வெறி கொண்டு தாவிக் குதிக்கிறது. தாளம் போடுகிறது. உருகுதே, ஆகா உருகுதே, ஆவி உருகுதே என்று கண்ணைச் சிமிட்டுகிறது. மண்ணை வாரி இறைக்கிறது.

ஆசைக்குயிலே, என் தேவதையே, உன்மேல் நானும் காதல் கொண்டு விட்டேன். எனக்காக, காதல் இல்லையேல் இறந்து விடுவதாகக் கூறினாயே, உன்னைப் பிரிய மனம் வருமா? அருகிலே வா. உனக்கொரு ஆசை முத்தம் தருகிறேன். காதல் மொழி பேசுவதைக் கவிஞர் கேட்டுக் கேட்டு கொதித்து எழுகிறார். கை வாளை எடுத்துக் குரங்கின் மேல் வீச, கனவா அல்லது அது நனவா குரங்கின் நல்ல நேரம் வாளுக்குத் தப்பி, முகத்தை சுழித்துக் காட்டி விட்டு அங்கிருந்து தப்பி ஓடி விடுகிறது.

அந்த மாயக்காரி கருங்குயிலும் எங்கோ மறைந்து விடுகிறது. அந்தச் சோலையில், அனைத்துப் பறவைகளும் மொத்தமாய் ஒலியெழுப்ப மேலே என்ன செய்வது எனப் புரியாது தட்டுத் தடுமாறுகிறார் பாரதியார். எட்டி எட்டித் தேடுகிறார். அந்த குட்டிப் பிசாசுக் குயில், கும்மிருட்டில் மறைந்து விடுகிறது.

The vicious kuyil In a fiery voice with love like amrith flowing thus sang on the bow love love love. When love is lost, When love is lost, death death death.

Music spells they say even the jungle beasts.

Wild Serpents, babes upon the mother's breast. So, true the monkey like a drunkard wild leaping and clapping hands all love beguiled and crying.

Oh oh melts my heart my love now winking scooping out beneath the bough. Heap of mud in ecstacy O dear, O rarest treasure love divine my power of speech over brimmed with love availed thou sang Love, if lost death our lot and threw me into the grave one about to die of love forth with I will kiss and sought sweet enjoy.

Ah, words as these he unread at which eyes arting in a rang unsheated. My sword and flung at him, Ah Can it be dream, fantasy or divinity the puny crecher left all abrupt past death and hid.

The pearless kuyil darted forth and out of sight. The birds now filled the grove with cheamered notes ah ignorance each bow and bush for the devilish kuyil I searched in.

****

குயில் பாட்டுப் பாடுவோம் – இயல் – 11
ராகதாளமாலிகை

6. இருளும் ஒளியும்

ராகம் : ஆரிகாம்போதி
தாளம் : கண்ட எகம்

வான நடுவிலே மாட்சியுறஞாயிறுதான்
மோனவெளி சூழ்ந்திடவும் மொய்ம்பிற்
கொலுவிருந்தான்.
மெய்யெல்லாஞ் சோர்வு விழியில் மயக்கமுற,
உய்யும் வழியுணரா துள்ளம் பதைபதைக்க,
நாணுந் துயரும் நலிவுறுத்த நான்மீண்டு,

(தொகையறா)
பேணும்மனை வந்தேன்

ராகம் : பவானி
(தொகையறா)

பேணும்மனை வந்தேன், பிரக்கினைபோய்
வீழ்ந்துவிட்டேன்,
மாலையிலே மூர்ச்சைநிலை மாறித் தெளிவடைந்தேன்,
நாலுபுறமுமெனை நண்பர் வந்து சூழ்ந்துநின்றார்.
"ஏனடா மூர்ச்சையுற்றாய்? எங்கு சென்றாய்? எது
செய்தாய்?
வானம் வெளிறுமுன்னே வைகறையி லேதனித்துச்
(சென்றனை)

ராகம் : ஜனசம்மோதினி
தாளம் : ஆதி

சென்றனை என்கின்றாரச் செய்தி என்னே?
(தனித்துச்)
சென்றனை என்கின்றாரச் செய்தி என்னே? ஊணின்றி
நின்றதென்னே?" என்று நெரித்துவிட்டார்
கேள்விகளை,
இன்னார்க் கிதுசொல்வ தென்று தெரியாமல்

"என்னாற் பலவுரைத்தல் இப்பொழுது கூடாதாம்.
நாளை வருவீரேல் நடந்ததெலாஞ் சொல்வேன் இவ்
வேளை எனைத்தனியே விட்டகல்வீர்"
என்றுரைத்தேன்,
"அகல்வீர்" என்றுரைத்தேன்

(தொகையறா)
ராகம் . நீலாம்பரி

நண்பரெல்லாஞ் சென்றுவிட்டார், நைந்துநின்ற
தாயார்தாம்
நொந்ததற்குப் பண்டம் உதவிநல்ல பால்கொணர்ந்தார்,
சற்று விடாய்தீர்ந்து தனியே படுத்திருந்தேன்,
முற்றும் மறந்து முழுத்துயிலில் ஆழ்ந்து விட்டேன்.

அருளின் குரல் வரிகள்:—

ஆசைக்குயிலே...! அருட்பொருளே...! தெய்வீகமே...! என்றெல்லாம் நாம் குயிலைப்பற்றிச் சென்ற வாரம் வரை சொல்லி மகிழ்ந்தோம்.

அந்தக்குயில் நம்மையெல்லாம் ஏங்க வைத்து எங்கோ காணாமல் சென்று விட்டதாம்.

இதுதான் நான் சென்ற வாரம் பேசிய பாடுபொருளாகும்.

எங்கே போனதாம்? தெரியவில்லை. எப்படிப் போனதாம்? புரியவில்லை.

அந்தக் குட்டிப்பிசாசுக் குயிலைக் காணவில்லையே என்று ஏங்குகின்ற தருணத்தில், அந்தப் பாடலை மிக நுட்பமாகக் கலைமாமணி சூரியபிரகாஷ் அவர்கள் எவ்வளவு அழகாகப் பாடிக் காட்ட முடியுமோ பாடி உலகெல்லாம் உள்ள பெருமக்கள் குயில் பாட்டிற்கு இப்படி ஒரு பரிமாணமா? குயில் பாட்டினுடைய பொருளை இவ்வளவு அழகாகப் பாடிக் காட்டுகிற கலைமாமணி சூரியபிரகாஷை நாங்கள் என்றென்றும் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று சொல்லி நெகிழ்ந்தார்கள்.

நண்பர்களே! குயில் பாட்டினுடைய அருமையை சூரியபிரகாஷ் பாடிக் காட்டுவது போல அந்தப் பாடலின் சில உட்பொருள்களையெல்லாம் நான் அவ்வப்போது சொல்ல முனைந்துள்ளேன்.

அன்று பரந்து விரிந்த வானத்தின் நடுவில் கோலமிகு கதிரவன் கொலு வீற்றிருந்தான். உடலெல்லாம் சோர்வாக இருக்க, கண்கள் மயங்கிச்சொருக, மனம் துடிதுடிக்க, வெட்கமும் வேதனையும் நெஞ்சை வருத்த, இல்லம் வந்த நான் நினைவிழந்த நிலையில் படுக்கையில் விழுந்தேன். நனவு வருவதற்கு நாள் சென்று மாலை வந்துவிட்டது.

கண்கள் திறந்து பார்த்தபோது நாற்புறமும் நண்பர்கள் சூழ்ந்து நிற்க, சரமாரி கேள்விகள். "விடிந்தும் விடியாத காலையிலே எழுந்து எங்கு சென்றாய்? என்ன செய்தாய்? என்ன நடந்தது? ஏன் வீடு வந்தவுடன் மயங்கி விழுந்து விட்டாய்? உணவும் எடுக்கவில்லை. உண்மையில் என்னதான் உனக்கு?" எனக் கேள்விகள் பல அடுக்கடுக்காக வந்தன. யாருக்கு என்ன பதில் சொல்வது எனப் புரியாமல், என்னை ஒன்றும் இப்பொழுது கேட்காதீர்கள் ; நாளை அனைத்தையும் கூறுகிறேன் எனச் சொல்லி நண்பர்களை நயமாக அனுப்பி வைத்தேன் எனக் கவிஞர் கூறுகிறார். கவலையுடன் நொந்து போயிருந்த தாய் சிற்றுண்டியும் பாலும் தர கொஞ்சம் சோர்வு நீங்கியது. அனைத்தையும் மறந்து ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கினேன் எனப் பாரதி இப்பகுதியை முடிக்கிறார்...

And sore exhausion rolling in my eyes without solace with shame and grief fast weakening my limbs. I sought my roof and there O quite unconscious fell by eve I gained my consciousness. My friends reprove and ask and ask,why didst thou fall in swoon where had thou been and ask and what didst thou my dawn they say you got out all alone. Reveal why didst thou stray forgetful of thy meal so they unceasing asked. I knew not what to answer best and whom. In mild retort I spoke I could not now recount my tale come on the tomorrow, friends and I will tell but now O leave me all alone They left...

****

குயில் பாட்டுப் பாடுவோம் – இயல் – 12
ராகமாலிகை இந்துஸ்தானி ராகங்களுடன்

ராகம் : கானமூர்த்தி
தாளம் : சங்கீர்ண ஜம்பை

பண்டு நடந்ததனைப் பாடுகின்ற இப்பொழுதும்,
மண்டு துயரெனது மார்பை யெலாங் கவ்வுவதே!
ஓடித் தவறி உடையனவாம் சொற்களெலாம்
கூடி மதியிற் குவிந்திடுமாம் செய்தியெலாம்

(தொகையறா)
நாசக் கதையை நடுவே நிறுத்திவிட்டுப்

ராகம் : பேகடா
தாளம் : சங்கீர்ண ஜம்பை

பேசு மிடைப் பொருளின்பின்னே மதிபோக்கிக்
கற்பனையும் வர்ணனையுங் காட்டிக் கதைவளர்க்கும்
விற்பனர்தஞ் செய்கை விதமுந் தெரிகிலன்யான்,
மேலைக் கதையுரைக்க வெள்கிக் குலையுமனம்

(தொகையறா)
காலைக் கதிரழகின் கற்பனைகள் பாடுகிறேன்.

ராகம் : பட்தீப்
(தொகையறா)

தங்க முருக்கித் தழல்குறைத்துத் தேனாக்கி
எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ? வான்வெளியைச்
சோதி கவர்ந்து சுடர்மயமாம் விந்தையினை
ஓதிப் புகழ்வார் உவமையொன்று காண்பாரோ?
கண்ணையினி தென்றுரைப்பர், கண்ணுக்குக் கண்ணாகி

ராகம் : துர்கா
தாளம் : திஸ்ர எகம்

விண்ணை அளக்கும்மொளி மேம்படுமோர்
இன்பமன்றோ?
மூலத் தனிப்பொருளை மோனத்தே சிந்தை செய்யும்
மேலவரும் அஃதோர் விரியுமொளி என்பாரேல்
நல்லொளிக்கு வேறுபொருள் ஞாலமிசை
யொப்புளதோ?
(தொகையறா)

புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி

ராகம் : சாவேரி
தாளம் : ஆதி

மண்ணைத் தெளிவாக்கி, நீரில் மலர்ச்சி தந்து
விண்ணை வெளியாக்கி விந்தைசெயுஞ்
சோதியினைக்
காலைப் பொழுதினிலே கண்விழித்து நான்
தொழுதேன்.
நாலு புறத்துமுயிர் நாதங்க ளோங்கிடவும்,
(தொகையறா)

இன்பக் களியில் இயங்கும் புவிகண்டேன்.
துன்பக் கதையின் தொடருரைப்பேன், கேளீரோ!

அருளின் குரல் வரிகள் :–

அன்பார்ந்த பெருமக்களே ...!

குயில் கூவிக் கொண்டே இருக்கிறது. குயிலின் நல்லிசை ஒலித்துக் கொண்டே இருக்கிறது. உலகெங்கும் உள்ள தமிழர்கள் அங்கிங்கெனாதபடிக் குயில் பாட்டைக் கேட்டுக் கேட்டு இன்புற்று கலைமாமணி சூரியபிரகாஷை வாழ்த்திக் கொண்டே இருக்கின்றார்கள். பாரதி வரிகளை நாங்கள் எத்தனையோ முறை படித்திருந்தாலும் குயில் பாட்டை இசைப்பாட்டாக அற்புதமாகப் பாடிக்காட்டுகின்ற கலைமாமணி சூரியபிரகாஷை நாங்களெல்லாம் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறோம் என்றார்கள்.

நண்பர்களே ! இலண்டன் மாநகரைச் சேர்ந்த கவிஞர் கருணானந்த ராஜா "குயில் பாட்டில் தத்துவ ரகசியங்கள்" என்ற ஒரு நூலைப் பத்தாண்டுகளுக்கு முன்பு எழுதி ஸ்ரீராம் இலக்கியக் கழகத்தின் வாயிலாக அவருக்கு ஒரு சிறந்த பரிசே கிடைத்தது அந்தப் புத்தகத்திற்காக. குயில் பாட்டு தான் அவருக்குப் பாரதியைப் பற்றித் தெரியும். அவர் என்னிடம் நேற்று தொலைபேசியில் அழைத்து மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்தினார். இவ்வளவு அழகாகக் குயில் பாட்டைப் பாடிக்காட்டுகின்ற சூரியபிரகாஷை நான் பார்க்க விரும்புகிறேன். கோவிட் சிக்கல்களெல்லாம் முடிந்த பிறகு நான் உறுதியாகச் சென்னைக்கு வந்து கலைமாமணி சூரிய பிரகாஷைப் பார்க்க வேண்டும்; அவருடன் பேசவேண்டும் என்று மிக மகிழ்ச்சியாக என்னிடம் சொன்னார்.

அதே போல என்னுடைய இன்னொரு நண்பர் அரக்கோணத்திலிருந்து என்னை அழைத்து என்ன சொன்னார் என்றால் சூரியபிரகாஷ் பாடுவதைக் கேட்கும்பொழுது எனக்கு இப்படிச் சொல்லத் தோன்றுகிறது என்று சொன்னார். என்ன என்று கேட்டேன். மாந்தளிரைக் கோத வைக்கும் குயிலின் குளிர்காலக் கூவலைப் போல உள்ளது சூரிய பிரகாஷினுடைய பாடல் என்று சொல்லி மகிழ்ந்தார்.

நண்பர்களே ! குயில் பாட்டு மிக அழகாக இப்பொழுது தொடங்கிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது எப்படி என்றால் கவிஞர் மனக்கலக்கத்தில் உறுமுகிறார். குரங்கும் குயிலுமா கூடிக்குலவுவது? இந்தக் காட்சியைக் கண்டு மனம் மருண்டு கவிஞர். “ஐயகோ ! நான் எதிர்பார்க்காதது நடக்கிறதே” என்று மனம் வேதனையுற்று விடியற்காலையில் காலைக் கதிரவனைப் பார்த்து மகிழ்கிறார்,

காலை நேரம் தூங்கி எழுந்தேன். சொல்லாமலேயே கால்கள் வழக்கம்போல் என்னை சோலைக்கு இழுத்துச் சென்றன. சுற்றும் முற்றும் பார்த்தேன். எங்கேயும் பறவைகளைப் பார்க்க முடியவில்லை. ஓரத்தில் ஒரு மாமரம், அதன் மேல் அந்த அதிசயம் பாருங்கள். அதன் கிளையில் நம் நாயகி குயில் அமர்ந்து கொண்டு கீழே நிற்கும் காளையுடன் காதல் கதை பேசிக் கொண்டிருக்கிறது. மாடும் தலையாட்டிக் கொண்டிருக்கிறது. பார்த்ததுதான் தாமதம் படபடவென வந்தது; நெஞ்சு குமுறியது.

கோபக்கனல் கொப்பளித்தது; கலக்கமுற்றேன். உடல் வியர்த்தேன்; குமுறினேன்; துடிதுடித்தேன்; காளையைக் கொல்ல வேண்டும் எனும் அளவுக்குக் கோபம் வந்தது. குத்துவாள் எடுத்துக்குறி பார்த்தேன்.

இந்தக் குயில் ஒரு பொய் பேசும் பேய். அது இந்தக் காளையுடன் பேசியதைப் பார்த்த பின் கொல்லாமல் விடக்கூடாது என மறைந்து நின்றேன். அந்தக் குயிலோ காதல் மயக்கத்திலிருந்தது. மோகக் கதை காளையிடம் பேசிக் கொண்டே இருந்தது. பொன் போன்ற குரலில் மின்போன்ற வார்த்தைகளால் "காளையே! பெண்டிரைச் சொக்கி இழுக்கும் காந்தமே! மன்மதன் எனும் மந்திரமூர்த்தியே! பூமியிலே உன்போல் இனமுண்டோ? மனிதருள்ளும் வலிமையுடையாரைக் காளை என்றே புகழ்கின்றாரே!" எனப் புகழ் வார்த்தைகளைக் கூறிக் கொண்டே இருந்தது,

Dear friends…

The music of Kalaimamani Suryaprakash is indeed divine. Why is music called the divine art when all other arts are not so called ? We may certainly see God in all arts and in all sciences. But in music alone we see god is free from all forms and thoughts. In every other art there is idolatory. Every thought every word has its form. Sound alone is free from form. Every word of great poetry forms a picture in our mind. Sound alone does not make any object appear before us.

What do we see as the principle expression of the life in the beauty visible before us ? It is movement in line in colour, in the changes of the seasons, and the rising and falling of the waves, in the wind, in the storm, in all the beauty of nature. There is constant movement. It is this movement which is cost day and night and the changing seasons. This movement has given us the comprehension of what we called time. Otherwise there would be no time for it is eternity.

About me sorrows deep and suffocate

words fail and thoughts come

crowding to the gate

of memory Oh well for them

whose well their tale

digressing sweat for a goodly sale !

Alak I lack the art with shame oppressed

I halfway leave my tale

and all with zest of poetic fancy

shall I sing every here and then

now of the glories of the golden morning

oh flow of sweetness sprung from honey

of melted gold soft cool peerless Oh light in pearl

in the silken space of heaven

that is why the sky measures with its light

and opens with its eye

is it not sweeter than the eye of God ?

if it is said by sages of the wood

that is far expanding light peerless is light of heaven

is light that which sweet

that which sweet each doth bless cachy dewy grass with smile & kiss each bud

to Bloom brighten the world

the waters stud with flowers open

high heavens glorious site

at break of day I adored that selfsame light

the world's sweet music filled shines

beautiful now listen

I take the thread of my doleful tale.

குயில் பாட்டுப் பாடுவோம் – இயல் – 13
ராகமாலிகை

7. குயிலும் மாடும்

ராகம் : பூபாளம்
தாளம் : சதுஸ்ர எகம் திஸ்ர நடை

காலைத் துயிலெழுந்து, காலிரண்டு முன்போலே
சோலைக் கிழுத்திட, நான் சொந்தவுணர் வில்லாமே
சோலையினில் வந்துநின்று, சுற்றுமுற்றுந் தேடினேன்,
கோலப் பறவைகளின் கூட்டமெல்லாங் காணவில்லை.
மூலையிலோர் மாமரத்தின் மோட்டுக் கிளையினிலே

ராகம் : பசந்த்
தாளம் : ஆதி

நீலக் குயிலிருந்து நீண்ட கதை சொல்லுவதும்,
கீழே யிருந்தோர் கீழக்காளை மாடதனை
ஆழ மதியுடனே ஆவலுறக் கேட்பதுவும்,

(தொகையறா)
கண்டேன், வெகுண்டேன், கலக்கமுற்றேன்,
நெஞ்சிலனல்
கொண்டேன், குமைந்தேன், குமுறினேன்,
மெய்வெயர்த்தேன்,

ராகம் : சாரங்கா
தாளம் : ஆதி

கொல்லவாள் வீசல் குறித்தேன், இப் பொய்ப்பறவை
சொல்லுமொழி கேட்டதன்பின் 'கொல்லுதலே சூழ்ச்சி' யென
முன்போல் மறைந்துநின்றேன், மோகப் பழங்கதையைப்
பொன்போற் குரலும் புதுமின்போல் வார்த்தைகளும்
கொண்டு,

(தொகையறா)
குயிலாங்கே கூறுவதாம். 'நந்தியே!

ராகம் . ரிஷபப்ரியா
தாளம் . ஆதி

பெண்டிர் மனத்தைப் பிடித்திழுக்கும் காந்தமே!
காமனே! மாடாகக் காட்சிதரும் மூர்த்தியே!
பூமியிலே மாடுபோற் பொற்புடைய சாதியுண்டோ?
மானிடருந் தம்முள் வலிமிகுந்த மைந்தர்
தமைமேனியுறுங் காளையென்று மேம்பா
டுறப்புகழ்வார்.

(தொகையறா)
மேனியுறுங் காளையென்று மேம்பா டுறப்புகழ்வார்

அருளின் குரல் வரிகள்:–

பெருமக்களே...

கரைபுரள அலைபுரள நம்முடைய நண்பர் கலைமாமணி சூரியபிரகாஷ் பாடிக் காட்டுகின்ற குயில் பாட்டு மகோன்னதமான வரவேற்பை உலகெங்கும் பெற்று வருகிறது.

பார்க்கும் நண்பர்களெல்லாம் யூடியூபில் குயில் பாட்டைக் கேட்டுக் கேட்டு இன்புறுவதும் இலண்டன் மாநகரத்திலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும், சுவிட்சர்லாந்திலிருந்தும், கனடாவிலிருந்தும் பெரிய ஆர்வலர்கள் கூட்டம் எங்களை வரவேற்றுக் கொண்டிருக்கிறது. குயில்பாட்டு பாரதியாருடைய சிறந்த இலக்கியப் படைப்பாகும்.

பாரதியாருடைய தலைசிறந்த மூன்று படைப்புகள் எது? என்று கேட்டபொழுது சொன்னார்களாம் தேசிய உணர்ச்சிக்காகப் பாடப்பட்டது பாஞ்சாலி சபதம் என்றும், தெய்வீக உணர்ச்சிக்காகப் பாடப்பட்டது கண்ணன் பாட்டு என்றும், தத்துவ நோக்கத்திற்காகப் பாடப்பட்டது குயில்பாட்டு என்றும் தான் சொல்லியிருக்கின்றார்கள் நண்பர்களே. சரியாக 744 அடிகளில் இந்தக் குயில் பாட்டு பாடல்களை யாப்பு வடிவத்தில் புனைந்திருக்கிறார்கள்.

நண்பர்களே, பாரதியார் சென்ற வாரம் வரை அந்தக் குயில் செய்கின்ற கோலாகல அமளி துமளிகளைப் பற்றி நம்மிடம் அடுக்கிக் கொண்டு வந்தார். என்ன சொன்னோம் சென்ற வாரம்? குயிலையும் குரங்கையும் ஒருங்கிணைத்துப் பார்த்த பொழுது கவிஞர் எப்படிப் பொங்கினார்? எப்படிக் கனன்றார்? என்று சொல்லிக் காட்டி அவ்வளவு அழகாகப் பாடிக் காட்டினார் கலைமாமணி சூரியபிரகாஷ். இந்த வாரம் கவிஞர் எப்படியெல்லாம் தன்னை இன்னும் எடுத்துப் பார்க்கிறார் பாருங்கள் நண்பர்களே!

இந்தமுறை குயிலும் காளையும் பேசிக்கொண்டு இருக்கின்றதாம். ஓகோ... காளை மீதும் இந்தக் குயிலுக்குக் காதல் வந்து விட்டதே என்ற ஏக்கத்தில், தவிப்பில், தத்தளிப்பில் அவர் எகிறிக்குதிக்கிறார். ஆகா... காளையுடன் என்ன காதல் உனக்குக் குயிலே? என்று சொல்லிக் காட்டுகின்ற விதமாக இந்த முறை மிக நுட்பமாகப் பாடிக்காட்டி இந்த ஐந்தாவது பகுதியை மிக அற்புதமாக வழிநடத்திச் செல்லுகிற சூரியபிரகாஷ் அவர்களை எந்நாளும் நாம் வாழ்த்துவோம்.

குயில் பாட்டு

காலை நேரம் தூங்கி எழுந்தேன், சொல்லாமலேயே கால்கள் வழக்கம்போல் என்னை சோலைக்கு இழுத்துச்சென்றன. சுற்றும் முற்றும் பார்த்தேன். எங்கேயும் பறவைகளைப் பார்க்க முடியவில்லை. ஓரத்தில் ஒரு மாமரம், அதன் மேல் அந்த அதிசயம் பாருங்கள். அதன் கிளையில் நம் நாயகி குயில் அமர்ந்துகொண்டு கீழே நிற்கும் காளையுடன் காதல் கதை பேசிக் கொண்டிருக்கிறது.

மாடும் தலையாட்டிக் கொண்டிருக்கிறது. பார்த்ததுதான் தாமதம் படபடவென வந்தது; நெஞ்சு குமுறியது, கோபக்கனல் கொப்பளித்தது; கலக்கமுற்றேன். உடல் வியர்த்தேன்; குமுறினேன்; துடிதுடித்தேன்; காளையைக் கொல்ல வேண்டும் எனும் அளவுக்குக் கோபம் வந்தது. குத்துவாள் எடுத்துக்குறி பார்த்தேன். இந்தக் குயில் ஒரு பொய் பேசும் பேய். அது இந்தக் காளையுடன் பேசியதைப் பார்த்த பின் கொல்லாமல் விடக்கூடாது என மறைந்து நின்றேன். அந்தக் குயிலோ காதல் மயக்கத்திலிருந்தது. மோகக் கதை காளையிடம் பேசிக் கொண்டே இருந்தது.

பொன் போன்ற குரலில் மின் போன்ற வார்த்தைகளால் "காளையே! பெண்டிரைச் சொக்கி இழுக்கும் காந்தமே! மன்மதன் எனும் மந்திரமூர்த்தியே! பூமியிலே உன்போல் இனமுண்டோ? மனிதருள்ளும் வலிமையுடையாரைக் காளை என்றே புகழ்கின்றாரே! " எனப் புகழ் வார்த்தைகளைக் கூறிக் கொண்டே அந்தக் குயில் காளையிடம் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டு நான் மனம் நொந்தேன்.

At break of day as if by magic drawn I sped to the grove and searched.

All birds had flown away but the koel on the topmost bough sat making love to an aged ox below I flew to a passion, grieved with burning heart I smarted, growled, sweated. itched to dart my sword at them. but cooling down my ire I thought it best to hide and overhear the faithless koels tale are I would kill in her sweet melodious voice and words that fill began to speak O bull that maids pine for O Manmathan in this guide,lives there on earth such lovely breed.

****

குயில் பாட்டுப் பாடுவோம் – இயல் – 14
ராகமாலிகை

ராகம் : கன்னட
தாளம் : ஆதி

காளையர்தம் முள்ளே கனமிகுந்தீர், ஆரியரே!
நீள முகமும், நிமிர்ந்திருக்குங் கொம்புகளும்,
பஞ்சுப் பொதிபோல் படர்ந்த திருவடிவும்,
மிஞ்சுப் புறச்சுமையும், வீரத் திருவாலும்,
(தொகையறா)

வானத் திடிபோல 'மா'வென் றுறுமுவதும்
இனப் பறவை முதுகின்மிசை எறிவிட்டால்
வாலைக் குழைத்து வளைத்தடிக்கும் நேர்மையும், பல்
காலம்நான் கண்டு கடுமோக மெய்திவிட்டேன்.
பார வடிவும் பயிலு முடல்வலியும்
தீரநடையும் சிறப்புமே இல்லாத

ராகம் : சந்திர கவுன்ஸ்
தாளம் : ஆதி

சல்லித் துளிப்பறவைச் சாதியிலே நான் பிறந்தேன்.
அல்லும் பகலுநிதம் அற்ப வயிற்றினுக்கே
காடெல்லாஞ் சுற்றிவந்து காற்றிலே ஊற்றுண்டு,
மூட மனிதர் முடைவயிற்றுக் கோருணவாம்,
சின்னக் குயிலின் சிறுகுலத்தி லேதோன்றி

ராகம் . வந்தனதாரிணி
(தொகையறா)

(சின்னக் குயிலின் சிறுகுலத்தி லேதோன்றி)
என்னபயன் பெற்றேன்? எனைப்போலோர்
பாவியுண்டா?
சேற்றிலே தாமரையும் சீழுடைய மீன்வயிற்றில்
போற்றுமொளி, முத்தும் புறப்படுதல் கேட்டிலிரோ?
நீசப் பிறப்பொருவர் நெஞ்சிலே தோன்றிவரும்
ஆசை தடுக்கவல்ல தாகுமோ? காமனுக்கே

ராகம் . நாதநாமக்கிரியை
தாளம் . ஆதி

சாதிப் பிறப்புத் தராதரங்கள் தோன்றிடுமோ?
வாதித்துப் பேச்சை வளர்த்தோர் பயனுமில்லை.
மூட மதியாலோ, முன்னைத் தவத்தாலோ,
ஆடவர்தம் முள்ளே அடியாளுமைத் தெரிந்தேன்.
மானுடராம் பேய்கள் வயிற்றுக்குச் சோறிடவும்

ராகம் . புன்னாகவராளி
தாளம் . ஆதி

கூனர்தமை ஊர்களிலே கொண்டு விடுவதற்கும்
தெய்வமென நீருதவி செய்தபின்னர், மேனிவிடாய்
எய்தி யிருக்கு மிடையினிலே, பாவியேன்
வந்துமது காதில் மதுரவிசை பாடுவேன்
வந்து முதுகில் ஒதுங்கிப் படுத்திருப்பேன்.

அருளின் குரல் வரிகள்:–

பெருமக்களே...

பாரதியினுடைய குயில்பாட்டை மிக வனப்புற, அழகாக பெருமிதமாக எல்லோரும் இப்படியெல்லாம் பாடிக் காட்ட முடியுமா ? குயில் பாட்டை...

எங்கள் கலைமாமணி சூரியபிரகாஷ் பாடிக் காட்டும் விதத்தை, நாங்கள் கண்டு எல்லையில்லாத மகிழ்ச்சி அடைகின்றோம் என்று அனைவரும் போற்றிப் புகழ்ந்து வருகின்றனர்.

பெருமக்களே.....

பாரதியினுடைய மாபெரும் காப்பியமான குயில் பாட்டைப் படலம் படலமாக, மது சுரக்கும் வரிகளை மிக அழகாக, தன்னுடைய வசீகரமான குரலில் கலைமாமணி சூரியபிரகாஷ் பாடுவது நமக்கெல்லாம் பெருமை.

எனக்கென்ன பெரிய பெருமையென்றால்,

சூரியபிரகாஷ் அனைத்துப் பணிகளையும் செய்து விடுவார். நான் அங்கிங்கு அவர் பாடியதை அந்த வரிகளின் சில விளக்கங்களைத் தான் சொல்ல முற்பட்டிருக்கின்றேன்.

குயில் பாட்டின் பெருமையுடன் ஒரு பெருமையை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சூரியபிரகாஷ் மட்டும் இந்தப் பணியைச் செய்யவில்லை. அவர் குடும்பமே ஒரு நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் போல பணியாற்றி வருகின்றார்கள்.

அவர்களுடைய பெற்றோர்கள் அவருக்குக் கிடைத்த மாபெரும் மாணிக்கச் செல்வங்கள் ஆவார்கள். அவர்களுடைய தாயார், நாங்களெல்லாம் பள்ளியில் இணைந்து பயிலும் பொழுதே, நாங்கள் பேசுகின்ற பேச்சுப் போட்டிகளிலும், அவ்வப்போது சொல்லுகின்ற சில கவிதைகளை, போட்டி வளர்க்கின்ற கவிதைப் போட்டிகளுக்கெல்லாம் நடுவராகவே வந்த பெண்மணி அம்மையார் அவர்கள்.

அந்த அம்மையாருடைய ஊக்கமும், அவர்களுடைய ஆக்கமும் இன்றைக்குக் கலைமாமணி சூரியபிரகாஷ், ஒரு ஆலமரம் போல் தழைத்து இருக்கின்றார். அவருடைய துணைவியார் ஒருபக்கம்; மறுபக்கம் அவருடைய மக்கட்செல்வங்கள்; துபாயிலிருந்து அவருடைய தங்கை; நானும் என் பங்கைச் செய்கிறேன் என்று சொல்லி நாங்கள் பேசுவதையும் அவர் பாடுவதையும் மிக அழகாக இந்த யூடியூப் வாசகர்கள் எல்லாம் பார்ப்பதற்காக அதை மிக அழகாக எடிட் செய்து, அழகாகச் செய்து வருகின்ற அந்த அம்மையாரையும் துபாயில் இருக்கும் அவருடைய தங்கையையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பர்களே!

இப்படித்தான் குடும்பமாகச் செயல்பட மிக ஆர்வமாகப் பாரதியும் செயல்பட்டார்.

தன்னுடைய மகளைப் பார்த்து, ஒடுங்கி நிற்காதே, நிமிர்ந்த நன்னடை போடு, நேர்கொண்ட பார்வை பார் என்றெல்லாம் ஊக்கப்படுத்தி தனக்குப் பிறகு தன்னுடைய துணைவியார் தான், அவருடைய

பாடல்களையெல்லாம் பதிப்பிக்க வேண்டும் செல்லம்மாள் பாரதியார் தான் அவருடைய நூல்களையெல்லாம் கவிதைகளை எல்லாம் பதிப்பிக்க வேண்டும் என்ற பேரவா கொண்டு செய்த பணி எல்லாம் நாம் பாராட்டுகின்றோம்.

குயில் பாட்டினுடைய இனிமை ; இந்தக் குயில் என்னெல்லாம் செய்தது பாருங்கள் ; குரங்கைக் காதலித்தது என்று கவிஞர் கோபத்தில் கனன்றார்.

பிறகு காளையைப் பார்த்துமா உனக்கு மயக்கம் என்று சென்றவாரம் சொல்லித் துடித்தார்.

இந்த வாரம் காளையைப் பார்த்து அந்தக் குயில் எவ்வளவு அழகாகச் சொல்லிக் காட்டுகின்றது என்றால்,

பெருமிதமானவனே,

மிக உயரமானவனே,

அழகானவனே....

என்று அந்தக் காளையை வர்ணிக்கின்ற காட்சிகளைக் கண்டு கவிஞர் என்ன சொல்லுகிறார் என்பதைப் பாருங்கள் நண்பர்களே !

குயில் தன் காதலைக் காளையிடம் தொடர்ந்து சொன்னது.

“மேன்மையானவரே !

அனைத்துக் காளையிலும் நீர் தான் மிகுந்த தீரம் பெற்றவர்.

ஆகா ! என்ன நீளமான முகம், நிமிர்ந்த கொம்புகள், நிற்கும் உடலோ மென்மையிலே, வெண்மையிலே பஞ்சுப் பொதி போன்ற வடிவம். ஆனால் உடல் அனைவரையும் தோற்கடிக்கும் திடம். வாலோ வீரத்தின் விளைநிலம். நீ "மா" எனக் குரல் எழுப்பினால் வானத்து இடி முழக்கம். யாராவது ஒரு வெட்கமற்ற பறவை முதுகில் ஏறி அமர்ந்தால் வாலால் நீ அதனைச் சுழற்றி அடிக்கையில் உன் காதலின் நேர்மை நிமிர்ந்து நிற்கும்.

அதனாலேயே உன்னைக் கண்டு மயங்கி விட்டேன் எனக் கூறிய குயில், மேலும் தொடர்ந்தது ;

கொழுத்த உடலும் விழுமிய உடல் வலிமையும் வீரம் மிகுந்த நடையும் என எந்தப் பெருமையும் இல்லாத சிறிய பறவையாக நான் பிறந்துவிட்டேன்.

இரவும் பகலும் இந்தச் சிறு வயிற்றுப் பிணிக்காகக் காட்டினைச் சுற்றிப் பறப்பேன். காற்றின் வேகத்தில் காலனைச் சந்தித்தால் சில மடமை கொண்ட மனிதர்களுக்கு உணவாகி விடுவேன்.

இந்தச் சிறிய குயில் குலத்தில் பிறந்து புலம்புகிறேன். என்செய்வேன்! நான் ஒரு பாவி அல்லவா? சேற்றிலே மலரும் செந்தாமரையும், சிறு மீன் இனச்சிப்பியின் கழிவு வயிற்றுக்குள் முத்தும் பிறப்பதை நீ கேள்விப்பட்டிருப்பாய் அல்லவா?

இந்த மோசமான குலத்தில் பிறந்தாலும், மனதின் ஆசையை மறக்க முடியுமா? மன்மத அம்பு இனம், குலம் பார்க்குமா என்ன? இனி இப்படித் தர்க்கம் பேசிப்பேசி எந்தப் பயனும் இல்லை.

அறிவின்மையாலோ, முன்வினைப் பயனாலோ, ஆண்களுக்குள்ளே காளையான உன்னைக் கண்டு கொண்டேன்.

நீயோ மக்களுக்கு பாரம் சுமந்து உணவு எடுத்துத் தருவதற்கு அவர்களுக்குத் தெய்வமென உதவி செய்கிறாய்.

உனக்கு நான் உதவி செய்யத் துணிந்தேன். வேலை முடிந்து அலுப்பு தீர நீ அயர்ந்த நேரத்தில் உன் உறக்கத்திற்கு ஊறு விளைவிக்காது காதல் தேனிசை பாடுவேன்.

உன் முதுகில் ஏறி, ஓரமாய்ப் படுத்துக் கொள்வேன். என்றெல்லாம் அந்த கானக் குயில் காதல் மொழி பேசுவதை நம் கவிஞர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

Such lovely breed?

Aren't men of beauteous girth called by thy name and so extolled?

O blessed of thy race! O Handsome with a long face blest! With horns uprist and mould as cotton heap,a rolling hump on back,thy tail doth keep stern watch,with bellow as thunder thou swishest away upon thy back the birds impudent sway.such charms as these, I have,

O loved in thee for long and pined.I lack the majesty of thy mighty form I am a puny breed! O misery, It has become a need to wing each day mid jungles,tossed in the

wind for paltry food. O dangers that attend us besides,for men covet us most to make us into dish.

A sinner lost, the lotus is of the mire and mud,the pearl so beautiful doth spring from the oyster shell. So then if true love from the low born flows how could it be rebuffed? is god who knows the path of love ever swayed by thought of caste or creed?

Ah!words and arguments go waste by ignorance or deeds of days gone by I have fixed thee for my lover meet and sigh, when after toiling in the fields to feed the devilish man and labouring on the road to carry the hump backed to their village near, thou coming weary taketh rest, in thy ear sweet cadeness of song I will pour and soft upon thy back would lie, when the swish of the tuft of thy tail doth brush over me

I will be happy and feel the song and merge my voice in thy bellows peal. The lice upon thy back I will kill entire when grazing thy fill in fields and woodlands near and ruminating liest many a tale I will tell these sitting by O bull all hale side.

****

குயில் பாட்டுப் பாடுவோம் – இயல் – 15
ராகமாலிகை

ராகம் : ஆந்தோளிகா
தாளம் : ஆதி

வாலிலடி பட்டு மனமகிழ்வேன் 'மா' வென்றே
ஒலிடுநும் பேரொலியோ டொன்றுபடக் கத்துவேன்
மேனியுளே உண்ணிகளை மேவாது கொன்றிடுவேன்.
கானிடையே சுற்றிக் கழனியெலாம் மேய்ந்து, நீர்
மிக்கவுண வுண்டுவாய் மென்றசைதான் போடுகையில்

ராகம் . கமாஸ்
தாளம் . ஆதி

பக்கத் திருந்து பலகதைகள் சொல்லிடுவேன்,
காளை யெருதரே! காட்டிலுயர் வீரரே!
தாளைச் சரணடைந்தேன். தையலெனைக்
காத்தருள்வீர்.
காதலுற்று வாடுகின்றேன். காதலுற்ற செய்தியினை
மாத ருரைத்தல் வழக்கமில்லை என்றறிவேன்.

ராகம் . ரதிபதிப்பிரியா
தாளம் . சதுஸ்ர எகம் திஸ்ர நடை

ஆனாலும் என்போல் அபூர்வமாங் காதல் கொண்டால்,
தானா வுரைத்தலின்றிச் சாரும் வழியுளதோ?
ஒத்த குலத்தவர்பால் உண்டாகும் வெட்கமெலாம்,
இத்தரையில் மேலோர்முன் ஏழையர்க்கு நாண முண்டா?
தேவர் முன்னே அன்புரைக்கச் சிந்தை வெட்கங்
கொள்வதுண்டா?

ராகம் . குந்தலவராளி
தாளம் . ஆதி

காவலர்க்குத் தங்குறைகள் காட்டாரோ கீழடியார்?
ஆசைதான் வெட்கம் அறியுமோ?" என்றுபல
நேசவுரை கூறி நெடிதுயிர்த்துப் பொய்க்குயிலி
பண்டுபோ லேதனது பாழடைந்த பொய்ப்பாட்டை
எண்டிசையும் இன்பக் களியேறப் பாடியதே,

காதல், காதல், காதல்,
காதல் போயிற் காதல் போயிற்
சாதல், சாதல், சாதல்
முதலியன (குயிலின் பாட்டு)

அருளின் குரல் வரிகள்:–

பெருமக்களே...

குயில் காளையிடம் மேலும் கூறுவதைக் கவிஞர் தொடர்கிறார்

காளையே ! நான் உன் முதுகில் அமர்ந்திருக்கையில் வாலைத் தூக்கி என்னை அடித்தாலும் நீ என்னை அணைப்பதாக எண்ணி அகமகிழ்வேன்;
நீ "மா" என ஒலி எழுப்புகையில், நானும் உன்னுடன் சேர்ந்து குரலெழுப்பி, குதூகலமடைவேன்;

உன் உடலின் மேல் படிந்திருக்கும் உண்ணிகளால் உனக்கு வலி ஏற்படாது எடுத்துக் கொன்று விடுவேன்.

காடெல்லாம் அலைந்து, வயல்வெளியெல்லாம் எங்கும் சுற்றி வந்தபின், பசித்து உணவு உண்டு அசைபோடுவாயே, அப்போது நான் உன் பக்கத்தில் அமர்ந்து, நீ ரசிக்கும்படியான கதைகள் பல கூறிடுவேன்;

என் அருமை காளையரே !

இக்காட்டின் சிறந்த வீரரே !

உன் காலில் விழுந்து வணங்குகிறேன்.

பெண்ணாய்ப் பிறந்த என்னைக் காத்தருள்வாயாக !

வழக்கமாகப் பெண்கள் வாய்விட்டுச் சொல்லத் தயங்கும் காதலை நான் வேறு வழியின்றி உன்னிடம் நானாகச் சொல்லிவிட்டேன், என்னைப் போன்ற இனத்தவர்களிடம் வேண்டுமென்றால் நான் வெட்கத்தை வெளிப்படுத்தலாம்; ஆனால், தங்களைப் போன்ற மேன்மை உற்றவர்களிடம் நான் எப்படி நாணம் காட்டி நலம் பெறுவது ?

இறைவனிடம் வணங்கி அன்புடன் பக்தி பரவசத்தில் வெட்கம் நீங்கி வேண்டுவதில்லையா!

மன்னர் முன் மக்களெல்லாம் மண்டியிட்டுக் கேட்பதில்லையா, அதற்கு மேல், ஆசை வெட்கமறியாதல்லவா?

எனப் பல காதல் வார்த்தைகள் குயில் காளையிடம் சொல்கிறது கவிஞர் நினைக்கிறார்.

ஆஹா ! என்ன நடிப்பைய்யா இது ? இந்தப் பொய்க் குயில் பெருமூச்சு விட்டு எப்படி எப்பொழுதும் போல தன் பொய்க் காதலைக் கொஞ்சமும் கூச்சமில்லாமல் கொட்டுகிறது; என வியக்கிறார்.

குயிலோ, எப்பொழுதும் போல, எதுவும் தெரியாதது போல எட்டுத்திசையும் மகிழும்படி பாடுகிறது.

காதல், காதல், காதல்

காதல் போயிற், காதல் போயிற்

சாதல், சாதல், சாதல்

எனத் தன் இனிய குரலில் இசைக்கிறது.

Swung by the swish of thy tale sure my heart would be gay;

with thy loud blowing 'maa' I would coo conjoined;

on thy back the Acari ticks that suck, I shall kill sparing none;

wandering in the wild, grazing all the field, when you after

your full eat, postprandially, start chewing the cud,

beside you I shall reel out tales several! O, Mr Bull Ebullient,

Dark Soldier of the Sylvan Wood, I fall at your feet cloven !

In total surrender clinging! Save this silly lass in me;

love lorn I wilt; I do know ofcourse

it doesn't become

the maidens to parade and proclaim love in the open.

But like as I am totally taken over by love unprecedented,

except auto-divulging it, is there any vent to unvalve it!

Shame in equal clan is seldom seen in the low down

before the superior great on this terrain! Before Deva,

to proclaim love, would mind shrink abashed ever ?

Won't the downside thrall bare their craving

before the guardian angel ? Would egregious lust ever

know
the strain of chagrin ?- thus and thus

in endearing Friendly talk,
as ever accustomed in the past, she but sang the lie-laden

lay inebriating the eight airts with doting toxin saying, aye !

Love Love Love

If Love be lost,

Love's Labor Lost,

Death, Death, Death

Death Wish, a certain Good !

****

பகுதி - 16

குயில் பாட்டுப் பாடுவோம் – இயல் – 16
ராகமாலிகை

ராகம் : ராமப்ரியா
தாளம் : ஆதி

பாட்டு முடியும்வரை பாரறியேன், விண்ணறியேன்,
கோட்டுப் பெருமரங்கள் கூடிநின்றகாவறியேன்!
தன்னை யறியேன், தனைப்போல் எருதறியேன்,
பொன்னை நிகர்த்தகுரல் பொங்கிவரும்
இன்பமொன்றே
கண்டேன், படைப்புக் கடவுளே! நான்முகனே!

ராகம் : வரமு
தாளம் : ஆதி

பண்டே யுலகு படைத்தனைநீ என்கின்றார்.
நீரைப் படைத்து நிலத்தைத் திரட்டிவைத்தாய்
நீரைப் பழைய நெருப்பிற் குளிர்வித்தாய்,
காற்றைமுன்னே உதினாய் காணரிய வானவெளி
தோற்றுவித்தாய், நின்றன் தொழில் வலிமையாரறிவார்?

ராகம் : காந்தாமணி
தாளம் : ஆதி

உள்ளந்தான் கவ்வ ஒருசிறிதுங் கூடாத
கொள்ளைப் பெரியவுருக் கொண்ட பலகோடி
வட்ட வுருளைகள்போல் வானத்தில் அண்டங்கள்
எட்ட நிரப்பியவை எப்போதும் ஒட்டுகின்றாய்,
எல்லா மசைவில் இருப்பதற்கே சக்திகளைப்

ராகம் : கோகிலப்ரியா
தாளம் : ஆதி

(சக்திகளைப்)
பொல்லா பிரமா, புகுத்திவிட்டாய், அம்மாவோ!
காலம் படைத்தாய் கடப்பதிலாத் திக்கமைத்தாய்,
ஞாலம் பலவினிலும் நாடோ றுந் தாம்பிறந்து
தோன்றி மறையும் தொடர்பாப் பல அனந்தம்,
சான்ற உயிர்கள் சமைத்துவிட்டாய், நான்முகனே!

ராகம் : சரஸ்வதி
தாளம் : ஆதி

சால மிகப்பெரிய சாதனைகாண் இஃதெல்லாம்!
தாலமிசை நின்றன் சமர்த்துரைக்க வல்லார் யார்?
ஆனாலும் நின்றன் அதிசயங்கள் யாவினுமே
கானா முதம்படைத்த காட்சிமிக விந்தையடா!
காட்டு நெடுவானம், கடலெல்லாம் விந்தையெனில்,

ராகம் : ஆனந்தபைரவி
தாளம் : ஆதி

பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின்மிசை
இல்லையடா!
பூதங்க ளொத்துப் புதுமைதரல் விந்தையெனில்
நாதங்கள் சேரும் நயத்தினுக்கு நேராமோ?
ஆசைதருங் கோடி அதிசயங்கள் கண்டதிலே,
ஓசைதரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ!

அருளின் குரல் வரிகள்:-

பெருமக்களே...!

கலைமாமணி சூரியபிரகாஷ் குயில் பாட்டை மிக இனிமையாகப் பாடிக் கடந்த பதினைந்து வாரங்களாக, பல்வேறு நிலைகளில் அந்தப் பாடல்களைப் பாடியும், அதற்கேற்ற சில உரை விளக்கங்களையும் அங்கிங்கெனாதபடிச் சொல்லி நான் மகிழ்ந்து வருகிறேன்.

பெருமக்களே!

குயிலினுடைய கோலத்தை நாம் ஒவ்வொரு படலமாகப் பார்த்து மகிழ்ந்தோம்.

சென்றவாரம் குயிலும் காளையும் எப்படியெல்லாம் அவர்கள் காதல் வயப்பட்டனர் என்று சொல்லிக் காட்டி, இந்தக் காளை பெறுகின்ற இந்த மகிழ்ச்சியும் இன்பமும் கவிஞராகிய நான் கூடப் பெறவில்லையே என்று பாரதி ஏங்குவதையும் கண்டு நான் விம்மிதமடைகின்றேன்.

பெருமக்களே!

இந்த முறை மிக நுட்பமாக அந்தக் குயில் பாடலின் விளக்கமாக இசையினுடைய மேன்மையும் பாரதியார் சொல்லி வருவதுதான் மிகச் சிறப்பாக இருக்கிறது.

பாரதிக்கு எப்படி எல்லாம் இசை மீது அளவற்ற இன்பமும் நேயமும் பரவிக் கிடப்பதையும் விரவிக் கிடப்பதையும் காணும்போது நாமெல்லாம் எல்லையில்லாத மகிழ்ச்சி அடைகின்றோம்.

என்னை நேற்றைக்கு என் மகள் ஆதிரை கேட்டாள்.

பாரதியை நாம் சென்னையில் தானே பார்த்துப் பார்த்து மகிழ்ந்தோம். அவருடைய இல்லம் கூட இங்கு சென்னையில் தானே இருக்கிறது. அங்கிருந்து ஏன் புதுவைக்குச் செல்கிறார்? எப்படி அவருக்கு அந்த புதுவையின் வேட்கை? எங்கிருக்கின்றது அந்தக் குயில் பாடுகின்ற அந்தக்காடு? அந்த வனம் எங்கே என்று வினவினாள்.

எனக்கு மிக மகிழ்ச்சியாக இருந்தது. நான் மகள் ஆதிரையிடம் தெரிவித்தேன்.

குயில் பாட்டு அவர் புதுவையில் சென்றபொழுது எழுதியது. எப்பொழுது செல்கிறார் என்றால் – இந்தியா வார இதழை நடத்திக்கொண்டிருந்தபோது. இந்த இதழ் சென்னையில் நடத்த முடியாத ஒரு சூழலில் இந்த இதழை இங்கே நடத்த முடியாது என்பதனால் அரசியல் புகலிடமாகப் புதுவைக்குச் செல்கிறார்.

அதுவரை புதுவை கடன்காரர்களுடைய புகலிடமாகத்தான் பொலிவு பெற்றதாம். புகழ் பெற்றதாம். இதுதான் முதல் முறை அரசியலாளர்களுக்குப் புகலிடமாக பாரதியால் புதுவை புகழ் இடம்பெற்றது.

அங்கு அவர் சென்றவுடன் அவருக்கு அங்குதான் எங்கிருந்தோ வந்தான் கண்ணன் என்பது போல குவளைக் கண்ணன் அவருக்கு நண்பனாக அமைவதும், அவர் எங்கு போய் அந்தக் குயில் பாட்டை எந்த இடத்தில் பாடினார் என்பதைக் கேட்டீர்களென்றால் மகிழ்வீர்கள்.

வெள்ளச்சி கிருஷ்ணசாமி செட்டியாருக்கு புதுவையை அடுத்த முத்தியால்ப்பேட்டைக்குப் பக்கத்தில் ஒரு அழகான தோப்பு இருந்தது.

அந்தத் தோப்பில்தான் பாரதியார் மணிக்கணக்காக இருப்பாராம். அந்தத் தோப்பே தான் பாரதியாருடைய குயில் பாட்டினுடைய காட்சித்தளமாகவும், தமிழ் உள்ளளவும் சாகாவரம் பெற்று விட்டது இந்தத் தோப்பு என்று நாம் சொல்லி மகிழலாம்.

குயில் பாட்டு மாஞ்சோலை நிழல் நிறைந்தது.

என்ன வெயில் அடித்தாலும் உறைக்காத அதன் குளிர்தரு நிழலிலிருந்து வெளியே பார்த்தால் கண்ணுக்கு எட்டும் தூரம் வரையில் பசுமையான வயல் தெரியும்.

அந்த வயல் வெளிகள் நடுவிலேதான் அந்தத் தென்னந்தோப்பு தன்னந்தனியாய் இருக்கும் என்று பாராட்டுகிறார்கள்.

ஒருமுறை வானவில் ரவி என்னிடம் மிக மகிழ்ச்சியாகச் சொன்னார்கள். பல ஆண்டுகளுக்கு முன்பு குயில் பாட்டு நடைபெற்ற அந்தத் தென்னந்தோப்பைப் பார்ப்பதற்கென்றே நாங்கள் ஒரு பத்துப் பதினைந்து பேர் சென்று பார்த்து வந்தது நினைவிருக்கிறது என்று சொன்னார்கள்.

ரா.அ.பத்மநாபன் அவர்கள் தன்னுடைய 'சித்திரபாரதி'யில் இது பாரதியார் நூற்றாண்டின்போது வெளியிடப்பட்ட இந்த நூலில் மிக அழகாக அந்தக் குயில் தோப்பு பாடப்பட்ட அந்தத் தோப்பினுடைய படமும் வெளியிடப்பட்டிருக்கிறது.

குயிலும் மாடும்

காலைத் துயிலெழுந்து சோலை வந்த பாரதியார் குயிலும் மாடும் காதல் களிப்புடன் குலவுவதைக் கண்டு மனம் பதறுகிறார்.

குயில் வழக்கமான தன் காதல் போயிற் சாதல் என்ற கானகத்தைப் பாடி மாட்டினை மகிழ்வித்துக் கொண்டிருக்கிறது. குயில் கூறுகிறது –

நான் உலகம் அறியாமல் இருந்தேன்; கானகமும் கண்டதில்லை; உன்னைப் போன்ற எருதையும் நான் ஏறிட்டும் பார்த்ததில்லை. என்னுடைய இசை ஒன்றையே அறிவேன் என்றெல்லாம் கூறிக்கொண்டிருந்தது.

பாரதியின் மனம் குயில் கூறியதை மறந்து அதன் குழலிசையில் மயங்கி எண்ணுகிறார்

இறைவனே !
பிரம்மனே !
நான்முகனே !

எனத் தொடங்கி உலகு உருவான விதம் பற்றி வானியல் வரலாற்றையே இப்படிப் பாரதியார் வகுக்கிறார்.

இவ்வுலகு எங்ஙனம் உருவானது? பாரெங்கும் நீரால் நிரம்பி, பின் சூரிய ஒளியில் நீர் குறைந்து நிலம் உருவாகிறது. வான்வெளியில் உன் மூத்த பூமிக்குக் காற்றாகிறது. எண்ணுதற்கரிய பல விண்மீன்களையும் கோள்களையும் வட்ட வட்டமாய் உருவாக்கி அனைத்தையும் ஈர்ப்பு விசையால் உருள வைக்கிறாய், அந்தச் சக்திகளை உருவாக்கிய பிரம்மனே! நீ காலத்தையும் ஒரு பரிமாணமாக்கினாய்.

இசை அமைத்த வெளியில் திசையமைத்தாய். புவிக்குள் தோன்றி மறையும் நினைக்க முடியாப் பல படைப்புக்கள். இத்தனை செயல் செய்யும் நீ ஒரு பெரும் அதிசயம்.

உன் படைப்புக்கள் பெரும் அதிசயமாகத்தான் இருக்கிறது.

All forms of nature the flowers so perfectly formed and coloured the planets and stars the earth, all gives the idea of beauty, of harmony, of music. The whole of nature is breathing not only in living creatures but all nature and the sign of life that this living beauty gives its music. The divine beauty of music beauty in tonal form line and colour in imagination, in sentiment, in feeling, in passion for me there is music in every creative feel, be it architecture, gardening, farming, painting, poetry what not?

In all the occupations of life where beauty has been the inspiration, where the divine wine has been poured out there is music, but among all arts of music have been specially considered divine because it is the exact miniature of the law working thro the whole universe.

Music inspires not only the soul of the great musicians but every infant, the instant it comes into the world begins to move its little arms and legs with the rhythm of music.

Therefore it is no exaggeration to say that music is a language of beauty, the language of the one whom every living soul has love and we can understand that we realize and recognize the perfection of all this beauty as

god our beloved then it is natural that this music, which we see in art in the whole universe should be called in divine art beauty and sublimity are the two cardinal characteristics of music.

The sheer beauty of Bharathiyar's melodious music thinking claims the conflicts of our rational minds.

It reveals, affirms, charms, delights, enlightens, enfanchisises and emancipates.

Sublime is usually used to describe a natural scene that in its immensity and grandeur seems to dwarf the Viewer.

This is how Bharathiyar explains in this Chapter of Kuyilpaattu-

O rapt in the spell of song I knew not earth or sky or clustering trees of swelling girth!

I knew not self of bull, ah in my plight, but the golden gush of song I heard aright.

Four Headed creature, O hear me they say this ancient world you shaped, the watery way. This earth and cooled the waters at the mouth of extinct volcanoes, blew North and South and all about pure ether.

The vault of heaven so beautifully you created.

O vain! to gauge thy mighty power mind reels to think of worlds of dreamy girth that drown the brink of heaven roll in myriads ever. Thou hast, O God, all worlds with fiery movement blessed Ah, time and dreamy distances!

O men! and lives that breathe and die in valley and glen. in millions thou hast created,

O, God O who can gauge the wonders of thy rod? Rarest of all thy beauteous creations, the far expanding blue and swelling oceans, is melody of song. Though it be thought the elements so beautifully wrought.

A miracle together make they seem but naught compared with the cadences and dream of song. Of the million wonders charming ever.

ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ.
Oh Song of the million wonders charming ever

****

குயில் பாட்டுப் பாடுவோம் – இயல் – 17
ராகமாலிகை

ராகம் : சாரங்க தரங்கிணி
தாளம் : ஆதி

செத்தைக் குயில்புரிந்த தெய்விகத்தீம் பாட்டெனுமோர்
வித்தை முடிந்தவுடன், மீட்டுமறி வெய்திநான்
கையில் வாளெடுத்துக் காளையின்மேல் வீசினேன்.
மெய்யிற் படுமுன் விரைந்ததுதான் ஓடிவிட,
வண்ணக் குயில்மறைய மற்றைப் பறவையெலாம்

ராகம் : யதுகுலகாம்போதி
தாளம் : ஆதி

முன்னைப்போற் கொம்பு முனைகளிலே வந்தொலிக்க
நாணமில்லாக் காதல்கொண்ட நானுஞ் சிறுகுயிலை
வீணிலே தேடியபின், வீடுவந்து சேர்ந்துவிட்டேன்.
எண்ணியெண்ணிப் பார்த்தேன் எதுவும்
விளங்கவில்லை.
(தொகையறா)
கண்ணிலே நீர்த்தும்பக் கானக் குயிலெனக்கே

ராகம் : காவதி
தாளம் : ஆதி

காதற் கதையுரைத்து நெஞ்சங் கரைத்ததையும்,
பேதை நானங்கு பெரிய மையல் கொண்டதையும்,
இன்பக் கதையின் இடையே தடையாகப்
புன்பறவை யெல்லாம் புகுந்த வியப்பினையும்
ஒற்றைப் பொருள்செய்யா உள்ளத்தைக் காமவனல்

ராகம் : கிரணாவளி
தாளம் : ஆதி

தின்றெனது சித்தம் திகைப்புறவே செய்ததையும்
சொற்றைக் குரங்கும் தொழுமாடும் வந்தெனக்கு
முற்றும் வயிரிகளா மூண்ட கொடுமையையும்

(தொகையறா)
இத்தனைகோ லத்தினுக்கும் யான்வேட்கை தீராமல்
பித்தம் பிடித்த பெரிய கொடுமையையும் 120

ராகம் . யதுகுலகாம்போதி
எண்ணியெண்ணிப் பார்த்தேன், எதுவும் விளங்கவில்லை,
கண்ணிரண்டும் மூடக் கடுந்துயிலில் ஆழ்ந்துவிட்டேன்.

அருளின் குரல் வரிகள்:–

சூரியபிரகாஷ் தன்னுடைய இன்னிசையால் குயில் பாட்டைச் செதுக்கி செதுக்கிப் பாடி வருகிறார்.

இப்போது நாம் பார்க்கவிருப்பது, பதினேழாம் படலம். பதினேழு வாரங்கள் என்று எண்ணிக்கையால் கூறி வந்தாலும் எண்ணத்தால் ஓங்கிய அளவில் இப்படிப் பாடிக்காட்ட முடியுமா?

குயில் பாட்டை நாங்கள் கேட்டுக் கேட்டு மகிழ்கிறோம் என்று உலக நாடுகளில் உள்ள பல நண்பர்கள் வியந்து பார்க்கின்றார்கள்.

குயில் பாட்டைப் படலம் படலமாக மிக நுட்பமாகக் கலைமாமணி சூரியபிரகாஷ் பாடுவது மட்டுமல்லாமல், அவருடைய தங்கை துபாயிலிருந்து இதனை மிக அழகாகப் படக்கலையாகச் செய்து நாமெல்லாம் பார்த்து வியக்கும் அளவிற்குப் படக்கலவையும் செய்து காட்டுகிறார்கள்.

நண்பர்களே !

பாரதியார் எப்படியெல்லாம் எண்ணி எண்ணிப் பாடியிருக்கிறார் என்பதைக் குயில் பாட்டு வாயிலாக கண்டு வியக்கிறோம்.

அந்தக் குயிலும் காளையும் அவர்களுடைய காதலை அவர் சொல்லிக் காட்டுகின்றவிதம், தான் அந்தக் காதலைக் கண்டு இப்படி இந்தக் குயில் என்னை ஏமாற்றிப் பதைக்க வைக்கிறதே என்று அவர் ஏங்குகின்ற அளவிற்கு அந்தப்பாடல் திறத்தை இவ்வாரமும் நாம் கண்டு களிக்க விரும்புகிறோம்.

தன்னைத் தன் குரலால் வசப்படுத்தி ஏமாற்றிக் கொண்டிருக்கும் குயிலின் கானம் காளையுடன் பாடும் காதல் பாடல் என்னும் இசையை மாயவித்தையில் மதியாக்கியிருந்த கவிஞர் நினைவு பெறுகிறார்.

உன்மத்தம் தலைக்கேற உருவிய வாளை காளை மேல் வீசுகிறார்.

அதன் உடல் மேல் பாய்வதற்குள் உடன் ஓடி விடுகிறது காளை. கரிய குயிலும் கண்ணை விட்டு மறைய, கொம்பில் வந்தமர்ந்து மற்ற பறவைகளெல்லாம் ஒலி எழுப்ப, குயில் காணாமல் தேடிச் சோர்ந்து போன நம் கவிஞர் இல்லம் திரும்புகிறார்.

தன்னைத் எப்படியெல்லாம் இந்தக் குயில் காதல் மொழி பேசி பசப்பு வார்த்தைகளில் வசப்படுத்தியது என்று தான் ஏமாந்ததை எண்ணி நினைக்கையில் கண்களில் நீர் ததும்பியது ; நெஞ்சம் கனத்தது. இப்படித்தான் தங்கள் காதல் நேரத்தில் மற்ற பறவைகள் மரத்தில் அமர்ந்து தடை செய்ததை எண்ணி வியப்படைந்தார்.

ஒன்றும் தெரியாத தன்னைக் காதல் நெருப்பில் வாட வைத்ததையும், ஒரு ஒழுங்கற்ற குரங்கும், தொழுவத்தின் காளையும் காதல் எதிரிகளாக இடையில் புகுந்து இன்னல் புரிந்ததையும் கட்டுக்கடங்காமல் வெடிக்கும் சினத்தையும் எண்ணுகிறார்.

ஆனால் குயில் மேல் கொண்ட காதல் வேட்கை அவரை ஆட்கொண்டிருப்பதை ஆச்சரியத்துடன் ஒன்றும் புரியாமல் குழம்புகிறார்.

கண்கள் செருகுகின்றன, களைப்பில் கடும் உறக்கம் அவரைத் தழுவுகிறது.

The symphony of the song is the
Sweetest dower…
when the feathery
Kuyils rapturous song did cease.
My Senses I regained and quick did
Seize my sword and whirled it at
The bull !
o swift he fled unhurt
The dusky koel left ! the woodland
Birds returning creaked upon the
Boughs O Shame !
I searched for the koel in vain and
Staggered home in disappointed
Love revolving many memories.
I strove in vain my self to gain how
Thawed my heart.

The koel with
Love and tears Ah by the dart of
love I pined and now the birds to
our tryst came creaking wild and

passion with a burst unmindful of
all hindrances came on my heart
and spelled me quiet
the monkey mean and the cattle
bull came rivals to my love
regardless of these impediments
o how I hankered after love, such
thoughts as these benumbed me
quite and in the dreaminess of
sleep I lost myself… now dawned
the day
the Divine quality of the music
seems to suggest that everything in
infinite space and a sea without a
shore an everlasting fire an
unquenchable light ,
a calm wind or
a ragging tempest thundering
sky or a rainy heavel singing brook or
vailing rule a tree up bloomed in
spring or a ganacatte sapling in

winter a rising mountain or a descending valley

No wonder when koel sings eternal wisdom

often seems to speak to us in mysterious

language of Bharathiar. Soul and

nature converts together when we listen to

Kuyilpattui and we stand speechless and

bewildered in a state of ecstasy

I would end this as a personal tribute by

quoting the immortal lines of kahlil
Gibran

"O your music in your depths we deposit our hearts
and souls

thou has taught us to see with our ears

and hear with our hearts"
Hail Bharathiyar

Long live Kalaimamani Surya Prakash for the lovely
kuyilpattu

****

குயில் பாட்டுப் பாடுவோம் – இயல் – 18
ராகமாலிகை

8. நான்காம் நாள்

ராகம் . சரசாங்கி
தாளம் . ஆதி

நான்காம்நாள் என்னை நயவஞ்சனைபுரிந்து
வான்காதல் காட்டி மயக்கிச் சதிசெய்த
பொய்ம்மைக் குயிலென்னைப் போந்திடவே கூறியநாள்
மெய்ம்மை யறிவிழந்தென் வீட்டிலே, மாடமிசை
சித்தத் திகைப்புற்றோர் செய்கை யறியாமல்

எத்துக் குயிலென்னை எய்துவித்த தாழ்ச்சியெலாம்
மீட்டும் நினைத்தங்கு வீற்றிருக்கும் போழ்தினிலே,
காட்டுத் திசையினிலென் கண்ணிரண்டும் நாடியவால்,
வானத்தே ஆங்கோர் கரும்பறவை வந்திடவும்
யானதனைக் கண்ட, 'இது நமது பொய்க் குயிலோ?'

ராகம் . ஹேமவதி
தாளம் . ஆதி

என்று திகைத்தேன், 'இருந்தொலைக்கே நின்றதனால்
நன்று வடிவம் துலங்கவில்லை, நாடுமனம்
ஆங்கதனை விட்டுப் பிரிதற்கு மாகவில்லை.
ஓங்குந் திகைப்பில் உயர்மாடம் விட்டுநான்
வீதியிலே வந்து நின்றேன் மேற்றிசையில் அவ்வுருவம்

சோதிக் கடலிலே தோன்றுகரும் புள்ளியெனக்
காணுதலும், சற்றேகடுகி யருகேபோய்,
'நாணமிலாப் பொய்க்குயிலோ,' என்பதனை நன்கறிவோம்
என்ற கருத்துடனே யான்விரைந்து சென்றிடுங்கால்,
நின்ற பறவையுந்தான் நேராகப் போயினதால்,

ராகம் . சலநாட்டை
(தொகையறா)

யான்நின்றால் தான்நிற்கும் யான்சென்றால்
தான்செல்லும்,

தாளம் . ஆதி

மேனிநன்கு தோன்றஅருகினிலே மேவாது
வானி லதுதான் வழிகாட்டிச் சென்றிடவும்
யான்நிலத்தே சென்றேன் இறுதியிலே முன்புநாம்
கூறியுள்ள மாஞ்சோலை தன்னைக் குறுகியந்த

ஊரிலாப் புல்லுமத னுள்ளே மறைந்ததுவால்,
மாஞ்சோலைக் குள்ளே மதியிலிநான் சென்றாங்கே
ஆஞ்சோதி வெள்ளம் அலையுமொரு கொம்பரின்மேல்
சின்னக் கருங்குயிலி செவ்வனே வீற்றிருந்து,
பொன்னங்குழலின் புதிய ஒலிதனிலே

ராகம் . கோரக் கல்யாண்
தாளம் . ஆதி

பண்டைப் பொய்க்காதற் பழம்பாட்டைத் தாம்பாடிக்
கொண்டிருத்தல் கண்டன, குமைந்தேன், எதிரேபோய்,
"நீசக் குயிலே, நிலையறியாப் பொய்ம்மையே,
ஆசைக் குரங்கினையும் அன்பார் எருதினையும்
எண்ணிநீ பாடும் இழிந்த புலைப்பாட்டை

நண்ணியிங்கு கேட்க நடத்திவந்தாய் போலுமெனை“
என்று சினம்பெருகி ஏதேதோ சொல்லுரைத்தேன்.
கொன்றுவிட நெஞ்சிற் குறித்தேன், மறுபடியும்
நெஞ்ச மிளகி நிறுத்திவிட்டேன்.

(தொகையறா)

ஈங்கிதற்குள்,
வஞ்சக் குயிலி மனத்தை இரும்பாக்கிக்
நெஞ்ச மிளகி நிறுத்திவிட்டேன்

ராகம் : சேகரசந்திரிகா
தாளம் : ஆதி திஸ்ர நடை

கண்ணிலே பொய்நீர் கடகடவெனத் தானூற்றப்,
பண்ணிசைபோ லின்குரலாற் பரவியது கூறிடுமால்,
‘ஐயனே, என்னுயிரின் ஆசையே! ஏழையெனை
வையமிசை வைக்கத் திருவுளமோ? மற்றெனையே
கொன்றுவிடச் சித்தமோ? கூறீர், ஒருமொழியில்!

அன்றிற் சிறுபறவை ஆண்பிரிய வாழாது,
ஞாயிறுதான் வெம்மைசெயில், நாண்மலர்க்கு
வாழ்வுளதோ?
தாயிருந்து கொன்றால், சரண்மதலைக்
கொன்றுளதோ?
தேவர் சினத்துவிட்டால், சிற்றுயிர்கள் என்னாகும்?
ஆவற் பொருளே! அரசே! என் ஆரியரே!

ராகம் : கேதாரம்
தாளம் : ஆதி

சிந்தையில்நீர் என்மேற் சினங்கொண்டால்
மாய்ந்திடுவேன்
வெந்தழலில் வீழ்வேன், விலங்குகளின்
வாய்ப்படுவேன்.
குற்றம்நீர் என்மேற் கொணர்ந்ததனை யானறிவேன்,
குற்றநுமைக் கூறுகிலேன், குற்றமிலேன் யானம்ம!
புன்மைக் குரங்கைப் பொதிமாட்டை நான்கண்டு
மென்மையுறக் காதல் விளையாடி னேன்என்றீர்,
என்சொல்கேன்! எங்ஙனுய்வேன்! ஏதுசெய்வேன்,
ஐயனே!
நின்சொல் மறுக்க நெறியில்லை, ஆயிடினும்
என்மேல் பிழையில்லை, யாரிதனை நம்பிடுவார்?
நின்மேல் சுமைமுழுதும் நேராகப் போட்டுவிட்டேன்.

ராகம் : ஸௌராஷ்டிரம்
(தொகையறா)

வெவ்விதியே! நீ என்னை மேம்பாடுறச் செய்து
செவ்விதினிங் கென்னைஎன்றன் வேந்தனொடு
சேர்த்திடினும்
அல்லாதென் வார்த்தை அவர்சிறிதும் நம்பாமே
புல்லாக எண்ணிப் புறக்கணித்துப் போய்விட, நான்
அக்கணத்தே தீயில் அழிந்துவிழ நேரிடினும்,
எக்கதிக்கும் ஆளாவேன், என்செய்கேன்?
வெவ்விதியே!

அருளின் குரல் வரிகள்:-

பெருமக்களே !

நம் நெஞ்சங்களையெல்லாம் கொள்ளை கொள்ளும் அளவிற்கு மிக இன்பமாக நயமாக அருவி ஒட்டத்தின் வேகத்துடன் குயில் பாட்டினை மிக இனிமையாகப் பாடிக்கொண்டு வருகிறார் நம்முடைய அருமை இளவல் கலைமாமணி டாக்டர் சூரியபிரகாஷ்.

சூரியபிரகாஷ் அவர்களுடைய இன்னிசையினுடைய பெருக்கத்தினால் உலகெங்கும் உள்ள தமிழர்கள் மிக மகிழ்ச்சியாகப் பாரதியினுடைய குயில் பாட்டை நாங்கள் கேட்பதிலும் அதில் இழைக்கப்படுகின்ற அந்த இசை நுணுக்கங்களையெல்லாம் ஆய்ந்து கேட்கும்பொழுது இன்பக்கடலிலே நாங்கள் மூழ்கி எழுகிறோம் என்று பாராட்டிக்கொண்டே இருக்கிறார்கள்.

ஏறக்குறைய ஒராண்டாக, பல தடைகளுக்கும் தளர்வுகளுக்கும் ஏற்ப, குயில் பாட்டினை மிக நுட்பமாகக் கலைமாமணி சூரியபிரகாஷ் படைத்து வருகிறார்.

குயிலினுடைய சிருங்காரத்தையும் காதலிலே கவிஞர் கனிந்து கொள்கின்ற காட்சிகளையெல்லாம் நாம் கண்டும் கேட்டும் இன்பமாய்ச் சிரித்தோம்; மகிழ்ந்தோம்.

பல நேரங்களிலே காதல் போனால் சாதல் சாதல் என்று சொல்வது போல, காதலில் படுகின்ற பல அல்லல்களை, துன்பங்களைக் கவிஞர் மிக நயமாகச் சுட்டிக்காட்டி வருகின்றார்.

பதினேழு வாரங்கள் கழித்து அடுத்த படலமாகக் குயிலினுடைய கதை எங்கே செல்கிறது என்பதை நாம் இப்போது பார்த்து மகிழலாம்.

நம் கவிஞர், குயில் பாட்டினைத் தொடர்கிறார்.

நான்காம் நாள் நிகழ்ச்சி பற்றிக் கூறுவதற்குக் முன்னால் கொஞ்சம் திரும்பிப் பார்த்துவிட்டு வரலாம்.

காதல் போயிற் சாதல் எனக் குயில் தன் குழலினிய குரலில் கவிஞரிடம் தன் காதலைக் கூறியது. சிந்தையைப் பறிகொடுத்தார்.

காதலை வேண்டிக் கரைத்த குயிலோ மற்ற பறவைகள் வந்து இவர்கள் தனிமையைக் கெடுத்ததால் இவரை அடுத்த நான்காம் நாள் வந்தருளக் குயில் வேண்டிச் சென்றது.

சித்தம் மயங்கித் திகைப்போடு நின்ற கவிஞர் நான்காம் நாளுக்காகக் காத்திருந்தார்.

அதற்குள் அடுத்தடுத்த நாட்களில் சோலையில் குயில் குரங்கிடம் குலவியதைக் கண்டு கலங்கி மயங்கினார்.

அதற்கடுத்து குயில் ஒரு மாட்டிடம் குழைந்து காதல் பேசுவதைக் கண்டு குழம்பினார்.

இருந்தாலும் வேட்கை தீராமல் நான்காம் நாளுக்காக சொன்ன நாள் வந்ததென எண்ணிப் பார்க்கிறார்.

நயவஞ்சனை செய்து பசப்பு வார்த்தைப் பேசினாலும் குயிலை மறக்க முடியாமல் வீட்டின் மாடத்தில் நின்று குயில் இருந்த மாஞ்சோலை திசையைப் பார்த்தார்.

மேற்கு திசை கடல் மேல் வானத்தில் கரும்பறவை வியந்து போல் வீதி வந்தார்.

வானிலிருந்து அவரைத் தொடர்ந்து சென்று மாஞ்சோலைக்குள் நுழைகிறது.

அவரும் உள்ளே சென்று அது வீற்றிருக்கும் மரக்கொம்பினை நோக்குகிறார்.

அது எப்பொழுதும் பாடும், பொய்க் காதல் பழம்பாட்டைப் பாடியதைக் கண்டு மனம் குமைந்தார்.

ஏ குயிலே !

என்ன நாடகம் ஆடுகிறாய்? குரங்கையும், காளையையும் காதலித்து அவற்றை எண்ணிப் பாடும் பாட்டை நான் கேட்க வேண்டும் என என்னையும் அழைத்து வந்தாயோ?

எனச் சினம் பொங்கச் சீறுகிறார்.

இதைக் கேட்டவுடன் கண்ணீர் மழையெனக் கொட்ட குயில் கூறியது. என் ஆசை நாயகனே !

இந்த ஏழையை ஏன் தவறாகக் கருதுகிறீர், தகாத வார்த்தைகளைக் கூறி என்னைச் சாகடிக்க வேண்டுமோ?

கொளுத்தும் வெயிலில் மெல்லிய மலர் வாடுமன்றோ?

தாயே குழந்தையைக் கொல்லலாமா? இறைவனைக் கோபித்தால் மண்ணுயிர்கள் வாழ முடியுமா? என்னைக் கொல்லத் துணிந்து விட்டீர்களா?

என் தலைவரே! நீங்கள் சினம் கொண்டால் நான் செத்து விடுவேன். நெருப்பில் வீழ்வேன்.

மற்ற விலங்குகளுக்கு இரையாகி விடுவேன்.

உங்கள் கோபம் புரிகிறது.

நான் குரங்கிடமும் மாட்டிடமும் முறையற்ற காதல் கொண்டதாகத் தாங்கள் சந்தேகிக்கிறீர், என்னவென்று சொல்வது?

நான் ஒரு பிழையும் செய்யவில்லை. விதியே!
யார் என்னை நம்புவார்?

நீ தான் உதவ வேண்டும். என் வேந்தன் என்னை வெறுக்கிறார். என் வார்த்தையை அவர் நம்ப மறுக்கிறார்.

நான் தீயில் விழுந்து மரிப்பது தவிர வேறு வழி தெரியவில்லை எனப் புலம்பத் தொடங்கியது.

Fixed by the koel, that with her loving lay had made me languish still.

When lost in thought of humiliations by the koel wrought I sat upon the turret of my house and dreamily to the woodland turned my eyes-0 blissfulness!,

I faint espied afar A dusky bird on wing, and mouth ajar,with a tremulous heart I gazed O deep engrossed!

I thought it was my faithless koel lost!

since far off flew the bird I couldn't make out it was the bird it looked. But snatch my heart. I could not from the object of my gaze; and down the stairs. I hastened in a daze and rushed into the street and spied upon the western sky a sooty speck up borne on the glittering sea of light.

To be assured it were the selfsame shameless treacherous bird I knew,I hurried forth.

Straight on she flew stopping and moving,and I did, on blue, still keeping high avoiding closer sight.She led me by degrees to the woodland bright and vanished! into the mango grove I sped and saw the wee she koel sitting proud upon a bough where waves of glimmering light did play and singing in her voice as bright and beautiful as the sound of a golden flute freshmade. She sang her treacherous love.

Ah mute I heard a while and sighed.

Approaching her I spake all wrath, Detested warbler, hear! Inconstant bird, O Please hear me! Is it for this -to hear your song of treacherous love and bliss to your pair of lovers the monkey and the bull you led me here?

I flew to a rage to kill but cooling down,I kept me back sweet -while the koel in her melodious voice and guile of tears said loved of my soul pray tell me straight dost thou intend to save or kill outright?

the anril bird when parted from her mate will cease to live...if sun shines burning hot would timid blossoms smile?

If mother kills where could the child protection seek from ills?

what will poor creatures do if devas burn with ire?,

O lord of my heart O noble born, if thou dost burn with, anger I will die I will drop in fire or die of animals by.

I know the guilt you come to charge me with.

Ah, thou art not yo blame nor I in troth you told with the hateful monkey and bull of the meadows green I had indulged to the full in amours.

Ah,what shall I say O god how live what will I do O living lord refute thy charge I cannot but be assured I am not to blame.

Ah who will trust me now?

vile fate to blame whether thou dost yield to save me from disgrace and wed me to my love or the lover distrusting for sakes me quite as a thing all mean and I without respite happen to plunge in fire,whatever it be should I bear stern fate is there no remedy.....

****

குயில் பாட்டுப் பாடுவோம் – இயல் – 19
காவடிச்சிந்தும் அபூர்வ ராகங்களும்

9. குயில் தனது பூர்வ ஜன்மக் கதையுரைத்தல்

காவடிச்சிந்து

தாளம் . சதுஸ்ர எகம் திஸ்ர நடை

"தேவனே! என்னருமைச் செல்வமே! என்னுயிரே!
போவதன் முன்னொன்று புகல்வதனைக்
கேட்டருள்வீர்!
முன்னம் ஒருநாள் முடிநீள் பொதியமலை
தன்னருகே நானும் தனியேயோர் சோலைதனில்
மாங்கிளையிலேதோ மனதிலெண்ணி வீற்றிருந்தேன்.

ஆங்குவந்தார் ஓர்முனிவர் ஆரோ பெரியரென்று
பாதத்தில் வீழ்ந்து பரவினேன், ஐயரெனை
ஆதரித்து வாழ்த்தி யருளினார், மற்றதன்பின்,
'வேத முனிவரே, மேதினியில் கீழ்ப்பறவைச்

சாதியிலே நான் பிறந்தேன்,
கீழ்ப்பறவைச்
சாதியிலே நான் பிறந்தேன்
சாதிக் குயில்களைப்போல்

ராகம் : த்விஜாவந்தி
(லய விருத்தம்)

(சாதிக் குயில்களைப்போல்)
இல்லாமல், என்றன் இயற்கை பிரிவாகி,
எல்லார் மொழியும் எனக்கு விளங்குவதேன்?
மானுடர்போற் சித்தநிலை வாய்த்திருக்குஞ்
செய்தியேன்?
யானுணரச் சொல்வீர்' என வணங்கிக் கேட்கையிலே,
கூறுகின்றார் ஐயர். 'குயிலே! கேள், முற்பிறப்பில்

ராகம் : நாமநாராயணி
தாளம் : எக தாளம் திஸ்ர நடை

வீறுடைய வெந்தொழிலார்வேடர் குலத்தலைவன்
வீர முருகனெனும் வேடன் மகளாகச்
சேர வளநாட்டில் தென்புறத்தே ஓர்மலையில்
வந்து பிறந்து வளர்ந்தாய் நீ, நல்லிளமை
முந்து மழகினிலே மூன்றுதமிழ் நாட்டில்

ராகம் : மியான் கி மல்ஆர்
தாளம் : ஆதி

யாரும் நினக்கோர் இணையில்லை என்றிடவே
சீருயர நின்றாய், செழுங்கான வேடரிலுன்
மாமன் மகனொருவன் மாடனெனும் பேர்கொண்டான்
காமன் கணைக்கிரையாய், நின்னழகைக் கண்டுருகி,
நின்னை மணக்க நெடுநாள் விரும்பி, அவன்

ராகம் : நாயகி
தாளம் : ஆதி

பொன்னை மலரைப் புதுத்தேனைக் கொண்டுனக்கு
நித்தம் கொடுத்து நினைவெல்லாம் நீயாகச்

(தொகையறா)
சித்தம் வருந்துகையில், தேமொழியே, நீயவனை
மாலையிட வாக்களித்தாய், மையலினா லில்லை,
அவன்
சால வருந்தல் சகிக்காமல் சொல்லிவிட்டாய்.

ராகம் : தேனுகா
தாளம் : ஆதி

ஆயிழையே, நின்றன், அழகின் பெருங்கீர்த்தி
தேயமெங்குந் தான்பரவத் தேன்மலையின்
சார்பினிலோர்
வேடர்கோன், செல்வமும், நல்வீரமுமே தானுடையான்,
நாடனைத்தும் அஞ்சி நடுங்குஞ் செயலுடயான்,
மொட்டைப் புலியனுந்தன மூத்த மகனான

ராகம் : மஆதி
(லய விருத்தம்)

நெட்டைக் குரங்கனுக்கு நேரான பெண்வண்டி,
நின்னை மணம்புரிய நிச்சயித்து, நின்னப்பன்
தன்னை யணுகி, "நின்னோர் தையலையென்
பிள்ளைக்குக்
கண்ணாலஞ் செய்யும் கருத்துடையேன்" என்றிடலும்,
எண்ணாப் பெருமகிழ்ச்சி எய்தியே, நின்தந்தை

ராகம் : நீதிமதி
தாளம் : ஆதி

ஆங்கே உடம்பட்டான், ஆறிரண்டு நாட்களிலே
பாங்கா மணம் புரியத் தாமுறுதி பண்ணிவிட்டார்.
பன்னிரண்டு நாட்களிலே பாவையுனைத்
தேன்மலையில்
அன்னியன்கொண் டேகிடுவான் என்னும் அதுகேட்டு,
மாடன் மனம்புகைந்து மற்றைநாள் உன்னை வந்து

ராகம் : சக்ரவாகம்
தாளம் : ஆதி

நாடிச் சினத்துடனே நானா மொழிகூற
நீயும் அவனிடத்தே நீண்ட கருணையினால்,
"காயுஞ் சினந்தவிர்ப்பாய் மாடா, கடுமையினால்
நெட்டைக் குரங்கனுக்குப் பெண்டாக நேர்ந்தாலும்,
கட்டுப் படிஅவர்தங் காவலிற்போய் வாழ்ந்தாலும்
ராகம் : வனஸ்பதி
(தொகையறா)

மாதமொரு மூன்றில் மருமம் சிலசெய்து,
பேதம் விளைவித்துப் பின்னிங்கே வந்திடுவேன்,
தாலிதனை மீட்டுமவர் தங்களிடமே கொடுத்து
நாலிரண்டு மாதத்தே நாயகனா நின்றனையே
பெற்றிடுவேன், நின்னிடத்தே பேச்சுத் தவறுவனோ?

ராகம் : காம்போதி
தாளம் : ஆதி

மற்றிதனை நம்பிடுவாய் மாடப்பா" என்றுரைத்தாய்,
காதலினா லில்லை, கருணையினால் இஃதுரைத்தாய்.

(தொகையறா)
(மாதரசாய், வேடன் மகளான முற்பிறப்பில்,
சின்னக் குயிலியென்று செப்பிடுவார் நின்நாமம்.)
பின்னாச் சிலதினங்கள் சென்றதன்பின் பெண்குயிலி,

அருளின் குரல் வரிகள்:-

பெருமக்களே!

பாரதியாரின் பாடல்களை உருக்கமாகவும் துணிவாகவும் பல்வேறு இசைநிலைகளில் பாடி வருவதை நீங்கள் தொடர்ந்து கேட்டுக் கொண்டு வருகின்றீர்கள்.

அருமை நண்பர் கலைமாமணி டாக்டர் சூரியபிரகாஷ் பாடும் இன்னிசை வெள்ளம், குயில் பாட்டைப் புதிய உலகத்திற்கு நம்மை அழைத்துச் சென்றது.

குயில் பாட்டினுடைய தத்துவ அடுக்கங்களையும் அவர் எடுத்துச் சொல்கின்ற அந்தப் பாடலினுடைய நுட்பத்தையும் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அவ்வப்போது நானும் சில தொடர்களாக அந்தப் பாடலுக்கு விளக்கம் சொல்வதற்கு மெருகேற்றுவதற்கு முயன்றேனே தவிர பாட்டா, உரையா என்று நீங்கள் எல்லோரும் வினவினால் குயில் பாட்டினுடைய சிறப்பும், கலைமாமணி டாக்டர் சூரியபிரகாஷ் இசை அறிவால்தான் இந்தக் கலைமாமணியின் குயில் பாட்டினுடைய வெற்றித் தூணாக விளங்குகிறது.

எனக்கும் வாய்ப்பு தந்த அருமை நண்பர் சூரியபிரகாஷ் அவர்களுக்கு நான் நன்றிக்கடன்பட்டுள்ளேன்.

அவருடன் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயின்றதனால் எனக்கு அந்த வாய்ப்பு.

வாய்ப்பை நல்கிய சூரியபிரகாஷின் இத்தனை இசைக் கோலங்களையும் செய்துகாட்டுகின்ற நுண்ணாற்றலை அவருடைய குடும்பத்தினர் போற்றி வளர்க்கின்றனர்.

தன்னுடைய தங்கை துபாயிலிருந்து இதற்கு வரைகலை செய்வதும் இது புலனத்தில் வெற்றி காண்பதும் அவர்களுடைய குடும்பத்தினுடைய பெருமையாகும் என்று சொல்லிக் குயில் பாட்டினுடைய பெருமையாக இந்த முறை என்ன சொல்லப்போகிறார். என்ன பாடப் போகிறார் என்றால் நண்பர்களே !

பெருமக்களே !

வியப்படைவீர்கள்.

அந்தக் குயில் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் பாரதியாரை, கவிஞரை ஏமாற்றியதனால் கவிஞர் குயில் மீது கோபமுற்றார்.

சினம் கொண்டார்.

ஏன் இது? எத்தனைக் கோலங்கள் செய்கின்ற இந்தக் குயிலைக் கொன்றே விடலாமா? என்று பாரதியார் கொந்தளித்தபோது தன்னுடைய முன் கதையைச் சொல்லத் தொடங்கியது, அந்தக் குயில் பேசுகிறது.

நமது கவிஞரின் மனதைக் கவர்ந்த குயில், ஒரு குரங்கோடும், மாட்டோடும் குலவுவதைக் கண்டு உள்ளம் துடிதுடிக்க கோபக்கனலில் கொன்று விடவும் துணிகின்றார்.

பின் நெஞ்சம் இளகிடவே, குயில் சொல்லும் கதையைக் கேட்கத் துணிகிறார்.

குயில் தன் கதையைத் தொடங்கியது.

என் இறைவனே!

என் செல்வமே!

என் உயிரே!

நான் சொல்வதைக் கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள்!

ஒரு முறை, பொதிய மலையருகில் உள்ள ஒரு பூஞ்சோலையில் நான் தனித்து இருக்கையில் ஒரு முனிவர் வந்தார்.

அவர் காலில் விழுந்து வணங்கினேன்;

அவரிடம் நான் கேட்டேன் "எனக்கு மட்டும் எவ்வாறு அனைவரும் பேசும் மொழி புரிகின்றதே !

மனிதர்கள் போன்ற சிந்தை எனக்கு எங்ஙனம் வாய்ந்தது ?"

என வினவினேன்.

அந்தப் பெரியவர் கூறினார் –

குயிலே !

நீ முற்பிறவியில் சேர நாட்டின் தெற்குப் பகுதியில் வாழ்ந்து வந்த ஒரு வேடர் தலைவனின் மகளாகப் பிறந்தாய் !

நல்ல இள மங்கையாய், தமிழகத்தின் மூன்று பகுதிகளிலும் அழகில் உன்னை வெல்வார் யாரும் இல்லை எனும்படி வளர்ந்திருந்தாய் !

உன் மாமன் மகன் மாடன் என்பவன் உன்னையே திருமணம் செய்ய வேண்டுமென உன்னையே நாளும் எண்ணியிருந்தான்.

உனக்காக தினமும் மலைத்தேனையும், புது மலரையும் கொண்டு வந்து கொடுத்து மகிழ்ந்திருந்தான்.

அவன் உன்னையே எண்ணி உருகுவதையும் உடல் வருந்துவதையும் கண்டு மனமிரங்கி அவனையே மணந்து கொள்வதாக வாக்களித்தாய் !

அவனை ஒன்றும் நீ காதலிக்கவில்லை;

அது பரிதாபத்திலிருந்து வந்த பாச மொழி மட்டும் தான்.

அதற்குள் மற்றொன்று நடந்து விட்டது.

தேன்மலை என்ற இடத்தைச் சேர்ந்த மொட்டைப்புலியன் எனும் வேடர் தலைவன் தன் மூத்த மகன் நெட்டைக்குரங்கன் என்பவனுக்குத் திருமணம் செய்ய எண்ணி, உன்னைப் பெண் பார்க்க, உன் தந்தையை அணுகினான்;

அவனோ, பார்த்தாலே பயத்தை ஏற்படுத்தும் உருவமும், செயலும் உள்ளவன்;

உன் தந்தையிடம் அவன் தன் கருத்தைச் சொன்னவுடன், அவரும் மகிழ்ச்சியுடன் இசைவு சொல்லி உறுதியும் செய்து விடுகிறார்.

அது கேட்டு உன் மாமன் மாடன், உன்னையே எண்ணி உள்ளுருகி வாழ்ந்து வந்த மாடன், திடுக்கிட்டான்;

மனம் புகைந்தான்;

விறுவிறுவென வந்தான்;

உன்னைப் பார்த்து. "என்ன வஞ்சகச் செயல் இது" எனக் கோபத்தில் கொதித்தான்.

நீயும் அவனை ஆறுதல்படுத்த "மாடனே!

கவலைப்படாதே !

கோபத்தைத் தவிர். என் தந்தை செய்த நெருக்கடியினால் இப்படிச் செய்து விட்டேன் !

என்னைக் குரங்கினர் மணம்புரிந்து தன் காவலில் வைத்தாலும் எப்படியாவது மூன்று மாதங்களுக்குள் அவருடன் கோபம் கொண்டு அதன் விளைவாகச் சண்டையிட்டு, எப்படியாவது, தாலியையும் மீட்டுத் தங்களிடம் வந்து விடுவேன்.

இன்னும் ஏழெட்டு மாதங்களில் நீங்கள்தான் எனக்குக் கணவனாவீர்" என அவனைச் சமாதானப் படுத்துவதற்காகக் கூறியுள்ளாய்;

சொல்ல மறந்து விட்டேன்,

முற்பிறவியில் மாதரசியான உன்னை சின்னக்குயிலி எனச் செல்லமாக அழைப்பர் என்றும் கூறினார்.

உனக்கு மாடன் மேல் காதலும் இல்லை; ஒன்றும் இல்லை; சும்மா அவன் கோபம் தணிக்கவும், சினம் தவிர்க்கவும் மட்டுமே அவ்வாறு கூறி ஒருவாறு அவனை அனுப்பி வைத்தாய் !

சில நாட்கள் சென்றன.

பெண் குயிலி என்ன செய்தாள் ?

மீதியை அடுத்த நிகழ்வில் காண்போம்.

O Deva, rarest treasure !

O my soul, you departed, listen to foolish fowl,

In a grove one morning by the southern hill I state on a mango twig, lone pondering on my fate.

There came a sage.

At his feet I fell all meek.

He blessed me.

The noble sage that wise men seek I asked pray tell me,vedic sage,how though a low born bird I am born on earth I know unlike my kith and kin the tongues of all and human like consciousness of my soul possess ?

The rishi made reply O hear in a former birth grew the daughter dear of the dreaded hunter chief Murugan the bold of the southern hill in the Chera realm of gold,most beautiful in the Tamil Kingdoms three...most hunters of

the woods of luxury, thy uncles son madam by name full struck with thy beauty yearned to win thee in wedlock.

He brought thee gold and honey fresh and flowers and pining sought to live as wedded lovers.

Thou out of sympathy but not of love, gave word to take him as thy mate.

And now O maid of delicate waist, thy beauty's name far spread.

A hunter chief of might and fame, Pulian bold his name,of the honey hill side for Kurangan tall,his son asked thee for bride.thy father gladly gave assent.

The date was fixed to celebrate with great eclat the happy wedding.

This thy cousin heard and burning with ire to thy lovely presence sped and vented his wrath in words of fire.

In grace thou made streply, put out thy ire ablaze,

O Mada, rest assured though gained my will I am wed to Kurangan tall and kept on hill.

I shall, each quarter scheming some device or other, causing trouble in his house return, leaving behind his Tali jewel and sometime after marry thee.

I tell no lies,believe me....

I profusely thanks Mrs The mozhi from USA for the intro video presentation of mine which has been introduced in this episode...

These were words of grace but not of love.

குயில் பாட்டுப் பாடுவோம் – இயல் – 20
ராகமாலிகை

ராகம் . அமிர்தவர்ஷிணி
தாளம் . எக தாளம் திஸ்ர நடை

நின்னொத்த தோழியரும் நீயுமொரு மாலையிலே
மின்னற் கொடிகள் விளையாடு தல்போலே,
காட்டி னிடையே களித்தாடி நிற்கையிலே,
வேட்டைக் கெனவந்தான் வெல்வேந்தன் சேரமான்
தன்னருமை மைந்தன், தனியே, துணைபிரிந்து
மன்னவன்றன் மைந்தனொரு மானைத் தொடர்ந்துவரத்
தோழியரும் நீயும் தொகுத்துநின்றே ஆடுவதை
வாழியவன் கண்டுவிட்டான். மையல் கரைகடந்து
நின்னைத் தனக்காக நிச்சயித்தான், மாதுநீ

(தொகையறா)
மன்னவனைக் கண்டவுடன் மாமோகங்
கொண்டுவிட்டாய்

ராகம் : பலஆம்ச
தாளம் : எக தாளம் திஸ்ர நடை

நின்னையவன் நோக்கினான், நீயவனை நோக்கி நின்றாய்,
அன்னதொரு நோக்கினிலே ஆவி கலந்துவிட்டீர்,
தோழியரும் வேந்தன் சுடர்க்கோலந் தான்கண்ட
ஆழியரசன் அரும்புதல்வன் போலு மென்றே

(தொகையறா)
அஞ்சி மறைந்து விட்டார். ஆங்கவனும் நின்னிடத்தே.

ராகம் : தோடி
தாளம் : ஆதி

"வஞ்சித் தலைவன் மகன்யான்" எனவுரைத்து
"வேடர் தவமகளே! விந்தை யழகுடையாய்!
ஆடவனாத் தோன்றி யதன்பயனை இன்றுபெற்றேன்,
கண்டதுமே நின்மிசைநான் காதல்கொண்டன்"
என்றிசைக்க,
மண்டு பெருங்காதல் மனத்தடக்கி நீ மொழிவாய்

"ஐயனே! உங்கள் அரண்மனையில் ஏந்நூறு
தையலருண்டாம், அழகில் தன்னிகரில் லாதவராம்,
கல்வி தெரிந்தவராம், கல்லுருகப் பாடுவ்ராம்,
அன்னவரைச் சேர்ந்தேநீர் அன்புடனே வாழ்ந்திருப்பீர்,
மன்னவரை வேண்டேன், மலைக்குறவர் தம்மகள்
யான்,

ராகம் : கௌரிமனோகரி
(லய விருத்தம்)

கொல்லு மடற்சிங்கம் குழிமுயலை வேட்பதுண்டா?
வெல்லுதிறல் மாவேந்தர் வேடருள்ளோ
பெண்ணெடுப்பார்?
பத்தினியா வாழ்வதல்லால் பார்வேந்தர் தாமெனினும்
நந்தி விலைமகளா நாங்கள்குடி போவதில்லை,

பொன்னடியைப் போற்றுகிறேன், போய்வருவீர், தோழியரும்

என்னைவிட்டுப் போயினரே, என்செய்கேன்?" என்றுநீ
நெஞ்சங் கலக்கமெய்தி நிற்கையிலே, வேந்தன் மகன்
மிஞ்சு நின்றன் காதல் விழிக்குறிப்பி னாலறிந்தே,
பக்கத்தில் வந்து பளிச்சென் றுனதுகன்னஞ்
செக்கச் சிவக்க முத்தமிட்டான், சினங்காட்டி

ராகம் : ஆம்சநாதம்
(லய விருத்தம்)

நீ விலகிச் சென்றாய் –நெறியேது காமியர்க்கே?
தாவி நின்னைவந்து தழுவினான் மார்பிறுக.
"நின்னையன்றி ஒர் பெண் நிலத்திலுண்டா
என்றனுக்கே?
பொன்னே, ஒளிர்மணியே, புத்தமுதே, இன்பமே,
நீயே மனையாட்டி, நீயே அரசாணி,

நீயே துணை எனக்கு. நீயே குலதெய்வம்
நின்னையன்றிப் பெண்ணை, நினைப்பேனோ? வீணிலே
என்னை நீ ஐயுறுதல் எதுக்காம்? இப்பொழுதே
நின்மனைக்குச் சென்றிடுவோம், நின்
வீட்டிலுள்ளோர்பால்
என்மனதைச் சொல்வேன், எனதுநிலை யுரைப்பேன்.

ராகம் : லதாந்தப்ரியா
(லய விருத்தம்)

வேத நெறியில் விவாகமுனைச் செய்து கொள்வேன்.
மாதரசே!“ என்றுவலக் கைதட்டி வாக்களித்தான்.
பூரிப்புக் கொண்டாய் புளகம்நீ எய்திவிட்டாய்.
வாரிப் பெருந்திரைபோல் வந்த மகிழ்ச்சியிலே
நாணந் தவிர்த்தாய், நனவே தவிர்ந்தவளாய்

காணத் தெவிட்டாதோர் இன்பக் கனவினிலே
சேர்ந்துவிட்டாய், மன்னன்றன் திண்டா ளை நீயுவகை
ஆர்ந்து தழுவி அவனிதழில் தேன்பருகச்
சிந்தைகொண்டாய், வேந்தன்மகன்
தேனில்வீழும் வண்டினைப்போல்
விந்தையுறு காந்தமிசை வீழும் இரும்பினைப்போல்,

ராகம் : கோசலம்
(லய விருத்தம்)

ஆவலுடன் நின்னை யறத்தழுவி, ஆங்குனது
கோவை யிதழ்பருகிக் கொண்டிருக்கும் வேளையிலே–
சற்றுமுன்னே ஊரினின்று தான்வந் திறங்கியவன்,
மற்றுநீ வீட்டைவிட்டு மாதருடன் காட்டினிலே
கூத்தினுக்குச் சென்றதனைக் கேட்டுக் குதூகலமாய்

ஆத்திரந்தான் மிஞ்சிநின்னை ஆங்கெய்திக்
காணவந்தோன்
நெட்டைக் குரங்கன் நெருங்கிவந்து பார்த்துவிட்டான்.
"பட்டப் பகலிலே! பாவிமகள் செய்தியைப் பார்!
கண்ணாலங் கூடஇன்னுங் கட்டி முடியவில்லை
மண்ணாக்கி விட்டாள்! என் மானந்
தொலைத்துவிட்டாள்!

அருளின் குரல் வரிகள்:–
பெருமக்களே!

முன்னொரு பிறவியிலேயே நீ ஒரு அழகிய பெண்ணாக வேடர் தலைவன் மகளாகப் பிறந்து இருந்தாய் அல்லவா!

ஒரு நாள் மாலை சின்ன குயிலாகிய நீயும் உன் தோழிகளும் மின்னல் கொடிகளாய் ஒரு தோட்டத்தில் விளையாடிக் கொண்டு இருந்தீர்கள்.

உன்னையே நினைத்து இயங்கிக் கொண்டிருக்கும் உன் மாமன் மகன் மாடன் உன்னை மணந்து கொள்வோம் என்ற கனவுலகில், தேன்மழை நாட்டு வேடன் மகன் நெட்டைக்குரங்கன் நேராக நின்று தந்தையை மிரட்டி உன் மனம் பற்றி நினையாமல் மனம் நிச்சயித்துச் சென்றுள்ளான்.

இவர்கள் இருவரிடமும் செல்லாத மனம் கொண்ட நீயோ கள்ளமில்லாப் பேதையாய் தோழிகளுடன் விளையாடிக் கொண்டிருந்த அன்று வீரன் சேரமான் மகன் ஒருவன் மான் தேடி வனம் புகுந்தான்.

உனைக் கண்டான்; மையல் கொண்டான். நீயும் அவனைக் கண்டாய்; மோகம் கொண்டாய்; கண்டதும் காதல் கொண்ட கண்களுமே ஆவி கலந்து விட்டாய், தோழியர் பயந்து தொலைந்து விட்டனர்.

"வேடர் மகளே! வஞ்சி அரசன் மகன் நான்; உன் மேல் காதல் கொண்டேன் என்று சொன்னால் நீயும் காதல் வசப்பட்டாய்;

ஆனால் அச்சம்..

"நீங்களோ பெரும் செல்வந்தர் ; கல்விமான் மன்னவர் நாங்கள் மலைக்குறவர் சிங்கம் முயலை நேசிக்குமோ? நாங்கள் குறவர் ஆண் யாருக்காவது மனைவியாக இருப்பது அல்லாமல் ஒரு இல்லத்தில் அடிமையாகும் நிலை மகளாகவும் இருக்க விரும்ப மாட்டோம்" எனக் கூறிவிட்டாய்.

ஆனாலும் உன் கண்களில் உள்ள காதலை அறிந்த அந்த வேந்தன் மகன் உன்னை கட்டி அணைத்து முத்தமிட்டான்.

நீ விலகிச் சென்றாலும் உன்னைத் தாவி அணைத்து விட்டான்.

காதல் மொழியால் கவிதை பாடினான்.

பொன்னே!
மணியே,
அமுதமே!
என் ஆசை துணைவியே என் மனதின் ராணியே,
நீ என் துணை!
நீ என் தெய்வம்!

உன்னைத் தவிர வேறு பெண்ணை நான் சிந்தையாலும் தொடேன்.

இக்கணமே உன் இல்லம் செல்வோம் ; என் மனம் சொல்லி வேதம் சாட்சியாக விவாகம் முடிப்பேன்

வெண்நிலவே எனச் சத்தியம் செய்தான். நீயோ பூரிப்பு கொண்ட புளகாங்கிதம் பெற்றாய்.

நாணம் தவிர்த்தாய், மன்னவன் தோள் தழுவி விட்டாய், வேந்தன் மகனும் தேனில் வண்டாய் மயங்கி விட்டான், இருவர் இதழ்களும் இணைந்தன. கண்கள் செருகின ; இங்ஙனம் இருவரும் இருக்கையில்தான் நடந்ததோர் பூகம்பம்.

குயிலியை மணக்கப் போகும் நெட்டைக்குரங்கன் அங்கு வந்து நின்றான்.

ஊரிலிருந்து வந்த அவன் குயில் எங்கே? எனச் சுற்றி சுற்றத்தாரிடம் தோப்பிலே தோழியிடம் என்ற பதில் கேட்டு ஆசையுடன் வந்தவனை ஆத்திரமூட்டும் காட்சி, அதிர வைக்கும் செய்கை, பதைபதைக்க வைக்கும் நிகழ்ச்சி. துடித்துப் போய் கத்தினான்.

பட்டப்பகலிலேயே என்ன கெட்ட செயல் இது ?

திருமணம் நிச்சயமான பெண்ணொருத்தி இன்னொரு பாவியுடன் சல்லாபம் செய்கிறாளா... என பரிதவித்து, திருமணத்துக்கு முன் இப்படியொரு திருட்டுக் காதலா எனக் கதறினான்.

விழுந்து விட்டாளே, அதைத் தொலைத்து விட்டாளே என மனம் நொறுங்கி நோக்கி நின்றான். இனி என்ன நடக்கும் ?

அடுத்த நிகழ்வில் காணலாம்.

Thou with thy maids a few days hence forth to the woods at evening and played as lightning flashes....

Then quick upon you came from the bushes,hunting,the lovely prince of the Chera king chasing a deer alone he came...

The ring of maids with thee as queen in revelry he spied...

Outright he fell in love with thee and you with him.

The maids about thee fled and his,as prince they saw so lovely clad before them..

Nearing thee the stranger said I am the son of the Vanchi chief,O hunter maid so beautifully!

The fruits of birth as man I reap,ah,only now!

For I have won thee,loving at first sight.with passion swell pent up, thou madest reply

In thy palace dwell five hundred wives all beautiful and young well read and versed in the art of dance and song.Go then enjoy their lovely company .

A Kurava maid I am.

I dare not be thy bride. Would the fiery lion ever stop to run the rabbit down or conquering king go in for a hunter maid?

Even though he be a king we will not live his paramour and fling our chastity away...

With reverence I worship thee and bid goodbye...

O, Prince my maid companions all have left ! O what shall I do?

In such a baffled state thou were.

The prince who read lush love upon thy eyes emboldened tripped to thee all in a trice and kissed thy cheeks aflush...

With a frowning brow you stepped aside what shame do lovers know he gliding close embraced and said, my gold my dazzling gem, fresh amrut,joy untold...

Thou art my bride my queen...O my deity, would I ever dream of other maids than thee?

Why should thou me distrust?

This very hour we will go to your house and I tell am thy lover. As writ in vedas

I shall wed thee damsel...so vowed the prince...

Thou feltest bosom swell of rapture and delight. all, timidity you shook away...

Free from the rigidity of wakeful life,you swam into the realm of sweet unending dreams...

To overwhelm the prince with clasps and kisses and to drink in his honeyed lips you longed at passions brink

Like bee quick buzzing down in honey,or iron falling into gravity,thy lover embraced thee close of thy red lips sweet honey quaffed in never quenching sips...and

now Kurangan tall returning home thy revels in the woods away from home did learn and leaping with delight he sped to where thou wert and saw the prince in bed with thee...

Atrocious sin in broad day light

O God!the wedding is not over yet...she hath now dashed my dreams to dust and shamed me ....

****

குயில் பாட்டுப் பாடுவோம் – இயல் – 21
ராகமாலிகை

ராகம் : கல்யாணி
(விருத்தம்)

'நிச்சய்ய தாம்பூலம்' நிலையா நடந்திருக்கப்
பிச்சைச் சிறுக்கி செய்த பேதகத்தைப் பார்த்தாயோ?"
என்று மனதில் எழுகின்ற தீயுடனே
நின்று கலங்கினான் நெட்டைக் குரங்கனங்கே.
மாப்பிள்ளைதான் ஊருக்கு வந்ததையும், பெண்குயிலி,

தோப்பிலே தானுந்தன் தோழிகளு மாச்சென்று
பாடி விளையாடும் பண்புகேட் டேகுரங்கன்
ஓடி யிருப்பதோர் உண்மையையும் மாடனிடம்
யாரோ உரைத்துவிட்டார், ஈரிரண்டு பாய்ச்சலிலே
நீரோடும் மேனி நெருப்போடுங் கண்ணுடனே

ராகம் : ச்ரோதஸ்வினி
(லய விருத்தம்)
மாடனங்கு வந்து நின்றான். மற்றிதனைத்
தேன்மலையின்
வேடர்கோன் மைந்தன் விழிகொண்டு பார்க்கவில்லை.
நெட்டைக் குரங்கனங்கு நீண்ட மரம்போலே
எட்டிநிற்குஞ் செய்தி இவன்பார்க்க நேரமில்லை.
அன்னியனைப் பெண்குயிலி ஆர்ந்திருக்குஞ்
செய்தியொன்று

தன்னையே இவ்விருவர் தாங்கண்டார், வேறறியார்,
மாடனதைத் தான்கண்டான், மற்றவனும் அங்ஙனமே.
மாடன் வெறிகொண்டான், மற்றவனும் அவ்வாறே.
காவலன்றன் மைந்தனுமக் கன்னிகையும் தானுமங்கு
தேவசுகங் கொண்டு விழியே திறக்கவில்லை.

ராகம் : குமுதக்ரியா
(லய விருத்தம்)

ஆவிக் கலப்பின் அமுத சுகந்தனிலே
மேவியங்கு மூடி யிருந்த விழிநான்கு.
ஆங்கவற்றைக் கண்டமையால் ஆவியிலே தீப்பற்றி
ஓங்கும் பொறிகள் உதிர்க்கும் விழிநான்கு.
மாடனுந்தன் வாளுருவி மன்னவனைக் கொன்றிடவே

ஓடிவந்தான், நெட்டைக் குரங்கனும் வானோங்கி
வந்தான்,
வெட்டிரண்டு வீழ்ந்தனகாண் வேந்தன் முதுகினிலே,
சட்டெனவே மன்னவனும் தான்திரும்பி வாளுருவி
வீச்சிரண்டில் ஆங்கவரை வீழ்த்தினான், வீழ்ந்தவர்தாம்
பேச்சிழந்தே ஆங்கு, பிணமாகக் கிடந்துவிட்டார்.

ராகம் : சாரமதி
(லய விருத்தம்)

மன்னவனும் சோர்வெய்தி மண்மேல் விழுந்துவிட்டான்.
பின்னவனை நீயும் பெருந்துயர்கொண் டேமடியில்
வாரி யெடுத்துவைத்து வாய்புலம்பக் கண்ணிரண்டும்
மாரி பொழிய மனமிழந்து நிற்கையிலே
கண்ணை விழித்துனது காவலனும் கூறுகின்றான்.

(தொகையறா)

"பெண்ணே, இனிநான் பிழைத்திடேன், சிலகணத்தே
ஆவி துறப்பேன், அழுதோர் பயனில்லை,
சாவிலே துன்பமில்லை, தையலே, இன்னமும் நாம்
பூமியிலே தோன்றிடுவோம். பொன்னே, நினைக்கண்டு
காமுறுவேன், நின்னைக் கலந்தினிது வாழ்ந்திடுவேன்,

ராகம் : யமுனாகல்யாணி
(லய விருத்தம்)

இன்னும் பிறவியுண்டு, மாதரசே இன்பமுண்டு,
நின்னுடன் வாழ்வனினி நேரும் பிறப்பினிலே!"
என்று சொல்லிக் கண்மூடி, இன்பமுறு புன்னகைதான்

(தொகையறா)
இன்பமுறு புன்னகைதான்
நின்று முகத்தே நிலவுதர, மாண்டனன்காண்.

(லய விருத்தம்)
மாடனிங்கு செய்ததோர் மாயத்தால் இப்பொழுது.

பீடையுறு புள்வடிவம் பேதையுனக் கெய்தியது.
வாழிநின்றன் மன்னவனும் தொண்டை வளநாட்டில்
ஆழிக் கரையின் அருகேயோர் பட்டினத்தில்
மானிடனாத் தோன்றி வளருகின்றான். நின்னையொரு

(தொகையறா)
கானிடத்தே காண்பான். கனிந்துநீ பாடும்நல்ல

ராகம் : மணிரங்கு
(தொகையறா)

பாட்டினைத்தான் கேட்பான். பழவினையின் கட்டினால்
மீட்டு நின்மேற் காதல்கொள்வான், மென்குயிலே!"
என்றந்தத்
தென் பொதியை மாமுனிவர் செப்பினார். "சாமி,
குயிலுருவங் கொண்டன்யான். கோமானோ மேன்மை
பயிலு மனிதவுருப் பற்றநின்றான், எம்முள்ளே

காதலிசைந் தாலும் கடிமணந்தான் கூடாதாம்
சாதற் பொழுதிலே தார்வேந்தன் கூறியசொல்
பொய்யாய் முடியாதோ?" என்றிசைத்தேன்,
புன்னகையில்
ஐயர் உரைப்பார், "அடி பேதாய், இப்பிறவி
தன்னிலும் நீ விந்தகிரிச் சாரப்பினிலோர் வேடனுக்குக்

ராகம் : கானடா
(தொகையறா)

கன்னியெனத் தான்பிறந்தாய் கா்ம வசத்தினால்,
மாடன் குரங்கன் இருவருமே வன்பேயாக்
காடுமலை சுற்றி வருகையிலே கண்டுகொண்டாா்
நின்னையங்கே, இப்பிறப்பில் நீயும் பழைமைபோல்
மன்னனையே சோ்வையென்று தாஞ்சூழ்ந்து மற்றவரும்

நின்னைக் குயிலாக்கி நீசெல்லுந் திக்கிலெலாம்
நின்னுடனே சுற்றுகின்றாா் நீயிதனைத்
தோ்கிலையோ?“
என்றாா். “விதியே, இறந்தவா்தாம் வாழ்வாரை
நின்று துயருறுத்தல் நீதியோ? பேய்களெனைப்
பேதைப் படுத்திப் பிறப்பை மறப்புறுத்தி,

வாதைப் படுத்தி வருமாயின், யானெனது
காதலனைக் காணுங்கால், காய்சினத்தால் எதேனும்
தீதிழைத்தால் என்செய்வேன்? தேவரே, மற்றிதற்கோா்
மாற்றிலையோ?“ என்று மருகி நான் கேட்கையிலே,
தேற்றமுறு மாமுனிவா் செப்புகின்றாா்.–
‘பெண்குயிலே!

அருளின் குரல் வரிகள்:-
பெருமக்களே!

குயில் பாட்டின் இறுதிப் பகுதிக்கு நெருங்கி வருகிறோம்...

கலைமாமணி சூரியபிரகாஷ் அற்புதமாகப் பாடி வருவதை உலகமே மகிழ்ந்து கேட்டு வருகிறது...

பொதிகை மலை முனிவர் கதையைத் தொடர்கிறார்.

நீயும் தோழியும் பூவனத்தில் ஒடி விளையாடுகையில் மான் தேடி வந்த சேரமான் மகன் உன்னைக் கண்டு மையல் கொள்ள நீயும் மனம் மயங்கி அவனிடம் நெருங்கி வர இருவரும் ஆரத்தழுவிக் கொள்ள நெட்டைக் குரங்கன் அங்கு வந்து பார்த்து விடுகிறான்.

மனம் அதிர்ச்சியுற்றான்.

திகைத்து நின்றான்.

என்ன இது அநியாயம்!

எனக்கும் இவளுக்கும் நிச்சயம் நடந்துள்ளது.

இந்தப் பாதகி யாருடனோ சல்லாபம் செய்து கொண்டு இருக்கிறாளே எனத் துடித்துப்போனான்.

மனதில் கோபம் பொங்கி எழுகிறது.

அதே சமயம் குயிலியின் மாமன் மகன் மாடனிடம் யாரோ குரங்கு வந்து குயிலியை தேடி பூங்காவிற்கு சென்றதைச் சொல்லி விட அவனும் அங்கு வந்து நின்றான்.

மாடன் ஐயோ! ஐயோ! சேரமான் மகனும் செயல்படும் காணவில்லை சேர்ந்து அணைத்து அனைத்தும் மறந்து நிற்கின்றனர்.

கண்டவுடன் காதல் கொண்ட இருவர் விழிகளும் கலந்து மயங்கி இருக்க நான்கு விழிகள் மூடிய நிலையில் இருந்தன.

குரங்கன், மாடன் இவர்களின் நான்கு விழிகளும் கோபக் கனலில் கொதித்து விழித்திருக்கின்றன.

குரங்கனும் மாடனும் ஆளுக்கொரு வாள் எடுத்து வந்து சேர மன்னன் மகன் முதுகில் வெட்டி விடுகின்றனர்.

இளவரசன் சற்றே திரும்பித் தன் வாளால் அந்த இருவரையும் வெட்டிச் சாய்க்கிறான்.

இருவரும் பிணமாக மண்ணில் சாய்ந்தனர்.

மன்னவன் மைந்தரும் சோர்ந்து கீழே விழுந்தான்.

குயிலியும் மனம் பதைத்து காதலனை மடியில் வாரி எடுத்து வைத்துப் புலம்புகையில் அவன் கூறினான் "இறக்கும் தருவாயில் நான் உள்ளேன்.

இன்னும் சில மணித்துளிகளில் நான் மறைந்து விடுவேன்.

நீ கலங்காதே, எத்தனைப் பிறவி எடுத்தாலும் நீதான் என்னுடனே இருப்பாய் மகிழ்ந்திருப்போம்" எனக்கூறி மலர்ந்த புன்னகையுடன் மடிந்து விடுகிறான்.

"மாடன் செய்த மாயம் தான் நீ அடுத்தப் பிறவியில் இந்தப் பெண் குயிலாக இப்போது பிறந்து விட்டாய்.

உன் மன்னவன் தொண்டை நாட்டின் கடற்கரையில் உள்ள உள்ளங்களில் மனிதனாக வளர்ந்து உள்ளான்.

உன்னைத் தோப்பில் காண்பான்.

நீ பாடும் கனிவான பாட்டைக் கேட்பான்.

முற்பிறயில் தொடங்கிய காதல் மீண்டும் தொடரும்" என அந்த முனிவர் உரைத்தார்.

குயிலோ, "முனிவரே! நான் உயிர்ப் பறவை என்கோ மகனோ மனிதன் அன்றோ ! நாங்கள் மீண்டும் காதல் திருமணம் எப்படிச் செய்ய முடியும் ? என நான் வினவினேன் ! முனிவர் கூறுகிறார்.

"இப்பிறவியிலும் நீ விந்திய மலை அருகில் ஒரு வேடனின் மகளாகத் தான் பிறந்தாய்.

ஆனால் மறைந்த மாடனும் குற்றுயிராய் விழுந்து இறந்த குரங்கனும் பேயாய்த் திரிகின்றனர்.

உன்னைக் கண்டு கொண்டனர். உன்னை உயிர்ப் பறவையாக சபித்து விட்டனர்.

நீ மன்னவனை மீண்டும் சேர்ந்து விடாமல் தடுப்பதற்கு" என உரைத்தார்.

குயில் மீண்டும் தவயோகியிடம் கேட்டது "இப்பிறவியிலும் என் மன்னவனை அவர்கள் எங்காவது பார்த்து அவருக்கும் ஏதாவது தீங்கு செய்து விடுவார்களா! என் செய்வது! இதற்கு மாற்றுவழி இல்லையா? எனக்கு?" என நான் முனிவரை வினவினேன்.

அதற்கு அந்த முனிவர் குயிலே எனப் பதில் கூறத் தொடங்குகிறார்.

அவர் சொன்னதை மீண்டும் தொடர்ந்து காண்போம்.

Kuyilpaatu

episode 21.

English version.

She hath now dashed my dreams to dust and shamed me quite and her bethrotal hath defamed, O beggar wench!

so sighed thy Kurangan tall and stood all wrath.

Now to thy Maadans hall quick flashed the news the bridegroom had arrived,and hastened to the woods to, see the bride revelling with her maids.

Now Maadan sprang to his feet with bloodshot eyes and seating along he ran to the woods and saw thee with thy love in loves sweet paradise in a slumberous grove!

he rankling stood but saw not Kurangan tall nor the latter him.

They saw nothing at all except thy slumbering beauty and thy lover.

They smarting stood while you two in the bower as if in the blissful bower of heaven slept soul with soul commingling,love enrapt!

two jealous pairs of eyes their dreamy vigil keep.At this two souls afflaming fill the floating eyes with sparks of fire.

Now rushed Maadan and Kurangan tall at the lovers hushed intent to kill the prince.

two cuts on back quick spilled the royal blood.

now sprang O quick the prince and cut the murderous two in twain .

they with a thump fell dead and in a swoon the prince fell on the ground.

And in thy lap thou tookest him, wailing at the dread mishap as from a dream in the prince now opened the eyes and said how long I will die.no good I'm cries...

No sorrowing in death.

Ah once again o maid we will be born on earth.

I will pine for love of thee and then enjoy thee too.

more births await us, pleasures too.

I will woo thee and enjoy in the birth to come.

Which said with a fading smile upon his lips,he died by Maadans spell thou hast been changed a bird.thy former lover prince who fell by sword is born a man in the sea washed town set in the palmy Thonda realm.

The poet does not call it ponde(French) realm.

thus shows the poets love of freedom and of the mother land.in ancient times Thondamandalam which included Pondicherry was ruled by Thondaman Ilanthirayan,a scion of the Chozha line...

thou wilt be seen by him in a wood.

thy thrilling song he will hear and charmed,impelled by fate,become thy lover again...

so ended the sage of the southern hill.

my lover by birth a man and I a koel!

though love genuine be betwixt us twain how could we wed?

are words of my lover in vain words of a former birth at death bed said.the sage with a smile replied,o foolish bird,thou even in this birth wert born a maid a hunters child on the vindhya mountain side,Maadan and Kurangan tall by Karma old by woods and hills as ghosts, aye wand ring wild came upon thee quick.lest thou shouldst once again rejoin thy former lover prince,they have transformed thee to a bird, okoel and follow thee,o doggedly over hill and dale.

Art thou not aware of this,o fate for the dead to vex the living is it meet o if the devils weaken my sense and make me quiet forget my birth would the lover take me as his bride..

.or if he hurts,Alack great sage,what shall I do ? couldst thou not find a way to save me..

.now the sage rejoined in grace ,o koel,okoel

****

குயில் பாட்டுப் பாடுவோம் – இயல் – 22
ராகமாலிகை

ராகம் : தேஷ்
(லய விருத்தம்)

தொண்டைவள நாட்டிலோர் சோலையிலே வேந்தன்மகன்
கண்டுனது பாட்டில் கருத்திளகிக் காதல்கொண்டு
நேசம் மிகுதியுற்று நிற்கையிலே, பேயிரண்டும்
மோசம் மிகுந்த முழுமாயச் செய்கைபல
செய்துபல பொய்த்தோற்றங் காட்டித் திறல்வேந்தன்

ஐயமுறச் செய்துவிடும், ஆங்கவனும் நின்றனையே
வஞ்சகியென் றெண்ணி மதிமருண்டு நின்மீது
வெஞ்சினந்தான் எய்திநினை விட்டுவிட நிச்சயிப்பான்
பிந்தி விளைவதெல்லாம் பின்னேநீ கண்டு கொள்வாய்
சந்தி ஏபம் செய்யுஞ் சமயமாய்விட்ட தென்றே

****

ராகம் : சிவரஞ்சனி
(லய விருத்தம்)

காற்றில் மறைந்து சென்றார் மாமுனிவர், காதலரே!
மாற்றி உரைக்கவில்லை, மாமுனிவர்
சொன்னதெல்லாம்
அப்படியே சொல்லிவிட்டேன். ஐயா! திருவுளத்தில்
எப்படிநீர் கொள்வீரோ, யானறியேன், ஆரியரே!
காத லருள்புரிவீர், காதலில்லை யென்றிடிலோ

(தொகையறா)
சாத லருளி நுமது கையால் கொன்றிடுவீர்!"
என்று குயிலும் எனது கையில் வீழ்ந்ததுகாண்.
கொன்றுவிட மனந்தான் கொள்ளுமோ?
பெண்ணென்றால்
பேயு மிரங்காதோ? பேய்கள் இரக்கமின்றி
மாயமிழைத் தாலதனை மானிடனுங் கொள்ளுவதோ?

ராகம் : கோகிலம்
(லய விருத்தம்)
காதலிலே ஐயம் கலந்தாலும் நிற்பதுண்டா?
மாதரன்பு கூறில் மனமிளகார் இங்குளரோ?
அன்புடனே யானும் அருங்குயிலைக் கைக்கொண்டு
முன்புவைத்து நோக்கியபின் மூண்டுவரும் இன்பவெறி
கொண்டதனை முத்தமிட்டேன். கோகிலத்தைக்
காணவில்லை.

விண்டுரைக்க மாட்டாத விந்தையடா! விந்தையடா!
ஆசைக் கடலின் அமுதடா! அற்புதத்தின்
தேசமடா! பெண்மைதான் தெய்வீகமாம் காட்சியடா!
பெண்ணொருத்தி அங்குநின்றாள், பேருவகை
கொண்டுதான்
கண்ணெடுக்கா தென்னைக்கணப் பொழுது
நோக்கினாள்,

ராகம் : ஆம்சானந்தி
(லய விருத்தம்)

சற்றேதலைகுனிந்தாள், சாமீ! இவளழகை
ஊற்றேதமிழில் இசைத்திடுவேன்? கண்ணிரண்டும்
ஆளை விழுங்கும் அதிசயத்தைக் கூறுவனோ?
மீள விழியில் மிதந்த கவிதையெலாம்
சொல்லில் அகப்படுமோ? தூயசுடர் முத்தையொப்பாம்

பல்லில் கனியிதழில் பாய்ந்த நிலவினை யான்
என்றும் மறத்தல் இயலுமோ? பாரின் மிசை
நின்றதொரு மின்கொடிபோல் நேர்ந்தமணிப்
பெண்ணரசின்
மேனி நலத்தினையும், வெட்டினையுங் கட்டினையும்,
தேனி லினியாள் திருத்த நிலையினையும்,

ராகம் . காபி
(லய விருத்தம்)

மற்றவர்க்குச் சொல்ல வசமாமோ? ஓர் வார்த்தை
கற்றவர்க்குச் சொல்வேன். கவிதைக் கனிபிழிந்த
சாற்றினிலே, பண்கூத் தெனுமிவற்றின் சாரமெலாம்
ஏற்றி, அதனோடே, இன்னமுதைத் தான்கலந்து,
காதல் வெயிலிலே காயவைத்த கட்டியினால்
(தொகையறா)

(காதல் வெயிலிலே காயவைத்த கட்டியினால்)
மாதவளின் மேனி வகுத்தான் பிரமனென்பேன்.
பெண்ணவளைக் கண்டு பெருங்களிகொண்டாங்ஙனே
நண்ணித் தழுவி நறுங்கள் ளிதழினையே
முத்தமிட்டு முத்தமிட்டு மோகப் பெருமயக்கில்
சித்தம் மயங்கிச் சிலபோழ் திருந்த பின்னே,

ராகம் : கோப்ரியா
(லய விருத்தம்)

பக்கத் திருந்தமணிப் பாவையுடன் சோலையெலாம்
ஒக்க மறைந்திடலும், ஓஹோ! எனக்கதறி
வீழ்ந்தேன். பிறகு விழிதிறந்து பார்க்கையிலே
சூழ்ந்திருக்கும் பண்டைச் சுவடி, எழுதுகோல்,
பத்திரிகைக் கூட்டம், பழம்பாய்–வரிசை யெல்லாம்

ஒத்திருக்க 'நாம் வீட்டில் உள்ளோம்' எனவுணர்ந்தேன்.
சோலை, குயில், காதல், சொன்னகதை யத்தனையும்,
மாலை யழகின் மயக்கத்தால் உள்ளத்தே
தோன்றியதோர் கற்பனையின் சூழ்ச்சியென்றே
கண்டுகொண்டேன்.
ஆன்றதமிழ்ப் புலவீர், கற்பனையே யானாலும்,

ராகம் . சுருட்டி
(தொகையறா)
வேதாந்த மாக விரித்துப் பொருளுரைக்க
யாதானுஞ் சற்றேஇடமிருந்தாற் கூறீரோ?

Kuyil Pattu Paduvom - Episode 22
(final episode)

This final episode has been recorded solo, set in ragas Desh, Misra Sivaranjani, Kokilam, Hamsanandi, Kapi, Gopriya (dream scale), Suruti and Madhyamavathi (the ending with Bharathi's Thamizh Vaazthu)

Now the sage rejoined in grace,

O kuyil hear in a woodland wild amidst the palmy thonda realm,beguiled by thy song,thy prince of old would woo thee straight.Then will the ghost with many a phantom sight soon make him doubt thy fidelity.

Thy lover would think thee treacherous and wish in ire to quite forsake thee ever. what happens then yourself could see. Ablution hour is on. which said the great sage vanished into the air.great sages words,no lie,O lover fair, I know not how thou deemed my tale,high born..requite my love or else to death Mr spurn.so saying she dropped into my hands.How dare to kill her? Even ghosts they say do ever pity the weaker sex.if ghosts do work ,ah,cruel phantasies,how could we mark,them true? Would linger doubts in love for long?

lives there a man who melts not at the song of a maidens love? O amorously I took the rarest bird in hand and with a look. All passionate her kissed the kuyil was seen no more. O passing strange for the tongue of man. O strange sweet amrit of the sea of love. O wonder and romance! O beauteous brow of divine maidenhood!

There stood all charm .

A maid of rare delight!she glanced at my form and hung her head in timidity!

O gods!How could I melodize her charm in words?

O what could I sing?

of her enchane eyes,or of bewitching glance?

would words suffice to sing her charms?

Ah could I ever forget the moon sheen of her tooth soft pearly set playing upon her red,red lips?

O vain adequate to describe how like a queen of precious maids,a lightning flash on earth all luscious featured and of delicate girth she stood,sweeter than red,red honey in troth!

To the learned I tell.

Great Creator seems to have wrought her blissful form with the juice a squeezed from the fruit.

Of poesy mixed with the amrit sweet and essences of song and dance and dried in loves sun shine!

this lovely maid I spied and steeped in ecstasy,her close embraced and her lips of odorous wine I kissed and kissed and lost myself in a depthless daze of love awhile

Lo!the charming maid and the grove beside me vanished !

I screaming fell then,when I opened my eyes,

I saw before me pen and cadjan leaf of old and dailies

lot,old mat and all those in the row I wot!and then perceived that I was on my cot!

The grove,the kuyil,love and poesy I spun I knew to be the phantasy of a brain enamoured of the sunset sweet!

O learned Tamil Bards,

though it be meet to deem this but a fantasy,will you not tell me if the slightest scope there be to expound this tale as vedic truths that be?

****

ஓயாத குயிலின் உன்னதப் பாடல்

ஆசைக்குயிலே... அருட்பொருளே... தெய்வீகமே... என்றெல்லாம் நாம் குயிலைப் பற்றிச் சென்ற வாரம் வரை சொல்லி மகிழ்ந்தோம்.

அந்தக் குயில் நம்மையெல்லாம் ஏங்க வைத்து எங்கோ காணாமல் சென்று விட்டதாம்.

இதுதான் நான் சென்றவாரம் பேசிய பாடுபொருளாகும்.

எங்கே போனதாம்? தெரியவில்லை. எப்படிப் போனதாம்? புரியவில்லை. அந்தக் குட்டிப் பிசாசுக் குயிலைக் காணவில்லையே என்று ஏங்குகின்ற தருணத்தில், அந்தப்பாடலை மிக நுட்பமாகக் கலைமாமணி சூரியபிரகாஷ் அவர்கள் எவ்வளவு அழகாகப் பாடிக் காட்ட முடியுமோ பாடி உலகெல்லாம் உள்ள பெருமக்கள் குயில் பாட்டிற்கு இப்படி ஒரு பரிமாணமா? குயில் பாட்டினுடைய பொருளை இவ்வளவு அழகாகப் பாடிக்காட்டுகிற கலைமாமணி சூரிய பிரகாஷை நாங்கள் என்றென்றும் வாழ்த்தக் கடமைப் பட்டிருக்கிறோம் என்று சொல்லி நெகிழ்ந்தார்கள்.

நண்பர்களே !'

குயில் பாட்டினுடைய அருமையைச் சூரியபிரகாஷ் பாடிக்காட்டுவது போல அந்தப் பாடலின் சில உட்பொருள்களையெல்லாம் நான் அவ்வப்போது சொல்ல முனைந்துள்ளேன்.

மொழியியற் பேராசிரியர் செ.வை.சண்முகத்தின் "குயில் பாட்டுத் திறன்"

(அண்மையில் மறைந்த பேராசிரியரின் நினைவாக)

கவிதை மௌனமாக இருக்கிறது ; திறனாய்வு தான் பேசுகிறது" என்கிறார் நார்த்ராப் ஒப்ரை என்ற கனேடியத் திறனாய்வாளர் ஆம், திறனாய்வுதான் கவிதையின் மௌனத்தைக் கலைத்து, அதில் ஒளிந்திருக்கும் உண்மைகளையும் அழகையும் வெளிக்கொணர்கிறது. கருத்து மற்றும் வடிவ நோக்கில் பலவகையான திறனாய்வுகள் உள்ளன. மொழியியல் இலக்கியத் திறனாய்வு கவிதையின் மொழிக் கூறுகளை, மொழியியல் அடிப்படைகளை அலசி ஆய்கிறது. சிறந்த மொழியியல் வல்லுநரும், இலக்கிய ஆய்வாளருமான பேரா.செ.வை.சண்முகம் பாரதியின் அற்புதப் படைப்பான குயில்பாட்டை இந்நூலில் மிக நுணுக்கமாகவும் ஆழமாகவும் ஆய்வு செய்துள்ளார்.

நூலின் முதல் அதிகாரம் மொழியியல் திறனாய்வின் கூறுகளை, தொல்காப்பியம், மற்றும் தற்கால மொழியியல் அடிப்படையில் விளக்குகிறது. குறிப்பாக விகாரம், கிளவியாக்கம், உள்ளுறை இறைச்சி ஆகியவற்றையும் மீமிசைச் சொல்லாக்கம் கருத்தன் ஆகியவற்றைத் தொல்காப்பியத்தையொட்டி விளக்கிவிட்டு, உறழ்ச்சி, கருத்தாடல், தொடரியல் முதலியவற்றை மொழியியல் நோக்கில் விளக்குகிறது. 'அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்' என்ற புறப்பாடலில் காலம் இருபகுதிகளிலும் கருத்தாக

இருப்பதையும், மொழி மாற்றுதலால் முதல் வாக்கியத்தில் காலம் + செயப்படுபொருளும், இரண்டாம் வாக்கியத்தில் செ.பொ.வும் முன்னிலைப் படுத்தப்படுவதைக் காட்டி அவற்றிற்கான காரணங்களையும் ஆசிரியர் சிறப்பாகக் காட்டுகிறார். காலம்தான் மாற்றத்திற்குக் காரணம் எனக் காட்டியுள்ளதை ஆனால் பாடலின் மொத்த வடிவத்தில், காலத்தின் மாற்றத்தால் அற்றை/இற்றை, அவர்கள் வாழ்வில் பெருமாற்றம் எற்பட்டதை இணை அமைப்பு, வேறுபாடு மூலம் கவிஞர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும், இரண்டாம் பகுதி நீண்டிருப்பதற்கு துன்ப உணர்வு காரணம் என்பதை விட, “வென்று எறி முரசின் வேந்தர்” இடையில் வந்ததுதான் என்பதைக் கவிதை அமைப்பு, காட்டுவதாகவும் கொள்ளலாம். மேலும் நேர்மறையும் எதிர்மறையும் நிலை மாற்றத்தை நன்கு காட்டுகின்றன. மொத்தத்தில் அடிப்படைக் கருத்துக்கள் மொழியியல் துணையோடு நன்கு காட்டப்பட்டுள்ளன. #‘மொழித்திறன்‘ என்ற அடுத்த அதிகாரத்தில் குயில் பாட்டில், பல்வேறு மொழிக் கூறுகளுக்கான எடுத்துக்காட்டுகள் தரப்பட்டுள்ளன.

அவற்றுள் நின், உன், நான், யான், நும் ஆகிய சொற்கள் பாத்திரங்களின் சமூக நிலைக்கேற்ப பயன்படுத்தப் பட்டிருப்பதை ஆசிரியர் நன்கு காட்டியுள்ளார். மேலும், கதைச் சூழலுக்கேற்பவும் அவை பயன்படுத்தப்பட்டுள்ள கல்யாணம், கண்ணாலமாக வருவதும் சமூக அடிப்படையிலான பயன்பாடே, ‘ஏனடா மூர்ச்சையுற்றாய்‘

என்று வரும் நான்கு வினாக்களில் 'பொருண்மை இயல்' திரிசொல்லாக அமைந்துள்ளது என ஆசிரியர் கூறுவது, ஒதெல்லோவில் இறுதியாகக் கைக்குட்டைக்கே என்று (It is gone, lost, out. the way) எனப் பல சொற்களைப் பயன்படுத்துவதை நினைவூட்டுகிறது.

அடுத்து, 'பொருண்மையியல் திறன்' என்ற பகுதியில் குயில் பாட்டில் ஒரு சொல் பல பொருளில் வருவது, மீமிசைச் சொற்கள், உட்சொற்கள் பயன்படுத்துவதைக் காட்டுகிறார்.

குறிப்பாக உட்சொல்லே, மீமிசைச் சொல்லாக மாறும்போது கவிதையில் அர்த்தங்கள் தொடர்ந்து விரிவடைவது காட்டப்படுகிறது. மேலும் கவிதையில் முரண் போன்ற உத்திகள் பயன்படுத்தப்படும் போது பொருள் இடைவெளி (gaps) அமைந்துள்ளது. வாசகர் பொருளை உய்த்துணர வைக்கவே என்று கூறும்போது வாசகர் மையத் திறனாய்வுக்கு (Ready oriented) வழிவகுக்கிறது.

எடுத்துக்காட்டாக, குயிலின் முதற்பாட்டில் காதல் # சாதல், அருள் / இருள், கூடல் / வாடல், தளம் / கூளம் ஆகிய முரண்களுக்கிடையே உள்ள இடைவெளி, வாசகரின் அர்த்த உருவாக்கத்தைத் தூண்டவே. வாசகர்கள் வெறும் அர்த்தத்தை நுகர்பவர்களில்லை, அர்த்தத்தை உருவாக்குபவர்கள் (Not simply consumers. but creators of meaning), கவிதையில் அர்த்த உருவாக்கமும், விரிவாக்கமும்

முக்கியப் பண்புகளாகும். ஆசிரியர் இந்தப் பகுதியை மேலும் சற்று விரிவாகச் செய்திருக்கலாம்.

அடுத்து அணித்திறன் என்ற அதிகாரத்தில் குயில் பாட்டில் வரும் உவமை, உருவக அணிகளை தொல்காப்பியத்தையொட்டி விளக்குகிறார் ஆசிரியர். அவ்வப்போது அவற்றின் மெய்ப்பாட்டைக் குறிப்பது பயனுள்ளதாய் உள்ளது.

அடுத்து மெய்ப்பாட்டுத் திறன் என்றே ஒரு அதிகாரம் உள்ளது. முதலில் தொல்காப்பியங்களை நகை முதல் உவகை ஈறாக எட்டு மெய்ப்பாடுகளையும் அவற்றின் காரணிகளையும் ஆசிரியர் பட்டியலிட்டுள்ளார். குயில் பாட்டு முழுதும் வியப்பு (மருட்கை) மேலோங்கியிருப்பதாகக் கூறுவது ஏற்புடையதே, கதை மாந்தர்கள் வெளிப்படுத்தும் மெய்ப்பாடுகளைக் காட்டிவிட்டு, ஆசிரியர், கவிஞரின் மெய்ப்பாடுகளை விரிவாகக் கூறுகிறார். கவிஞர் ஒரு கதை மாந்தராகவும் கதை சொல்பவராகவும் பல்வேறு மெய்ப்பாடுகளை வெளிப்படுத்தி பாடலை இணைக்கும் சக்தியாகவும் விளங்குவதாக ஆசிரியர் காட்டியுள்ளார். பொதுவாக வடமொழித் திறனாய்வாளர்கள் ரசக் கோட்பாட்டைப் பயன்படுத்துவதுபோல் தமிழ்த் திறனாய்வாளர்கள் மெய்ப்பாடுகளுக்கு முக்கியத்துவம் தருவதில்லை. குயில் பாட்டை மெய்ப்பாடுகள் நோக்கில் ஆசிரியர் காட்டியிருப்பது புதுமையானதே.

எடுத்துரைப்பியலில் பாரதி நிகழ்வுகளை இணைத்துக் கூறும் பாங்கினை ஆசிரியர் விளக்குகிற நிகழ்வுகளின் இடம், காலம் வெளியிடுவதைக் காட்டிவிட்டு, அவைகள் காலம் சார்ந்த தொடர்பு ஒழுங்காலும், காரணகாரியத் தொடர்பு ஒழுங்காலும் இணைக்கப்படுவதாகக் காட்டுகிறார். பெரும்பகுதி காலம் சார்ந்தும், பின்பகுதி காரணம் சார்ந்தும் அமைந்து, முடிவு காலம் சார்ந்தே அமைவதாக ஆசிரியர் கூறுகிறார்.

குயில் பாட்டு ஒரு கதைப் பாட்டு. ஆனால் அது ஒரு கனவுக் கவிதையாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. 'பட்டப் பகலில் பாவலர்க்குத் தெரியும் நெட்டைக் கனவு ' என்று பாரதியே கூறுகிறார். இது ஒப்ராய்டின் கவிதை பற்றிய கருத்து. நனவுலகில் இடம், காலம் ஆகியன தெளிவாகக் கூறப்பட்டு, பிறகு முக்கிய நிகழ்ச்சிகள் கனவுக் காட்சிகளாக, நாடக பாணியில் காட்டப்பட்டு, நான்காம் நாளில் குயில் பூர்வ ஜென்மக் கதையை முனிவர் கூறியதாகக் கூறும்போது சிக்கல் அவிழ்கிறது.

குயில் பெண்ணாகத் தோன்றி கவிஞர் அதை முத்தமிடும் உச்ச கட்டத்தில் கனவு கலைந்து நனவுலகுக்குக் கவிஞரும் நாமும் திரும்புகிறோம். நம்பமுடியாத அதிசய நிகழ்வுகள் கனவில் வருவதும், அவற்றின் உச்சகட்டத்தில் கனவு கலைவதும் இயல்பே. கனவு கலைந்தபின் கவிஞர் தனது பழைய சூழலை விவரிக்கிறார். நனவுலகிலிருந்து கனவுலகுக்குச் சென்று மறுபடியும் நனவுலகுக்கே திரும்புவது கோல்ட்ரிஜ், கீத்ஸ் போன்றோரின் விந்தையுடைய

(Romantic Poetry) கவிதையின் தன்மையாகும். கவிஞரே கதை சொல்லியாகவும், கதை நாயகராகவும் மாறிமாறி வருவதால் அவர் கதை மாந்தருக்கும் வாசகர்களுக்குமிடையே பாலமாக அமைகிறார்.

அடுத்து குயில் பாட்டின் யாப்புத் திறனை விரிவாகவே ஆய்வு செய்கிறார். குயில் பாட்டில் பயன்படுத்தப்படும் யாப்புக் கூறுகளை எடுத்துக்காட்டுகிறார். ஆனால் அவை எப்படிக் கருத்தேட்டத்திற்கேற்ப மாற்றம் அடைந்துள்ளன என்பதை மேலும் காட்டியிருக்கலாம்.

இறுதியாக 'வேதாந்தம்' என்ற தலைப்பில், குயில் பாட்டின் அடிக்கருத்து குறித்து ஏற்கெனவே செய்யப்பட்டுள்ள வாசிப்புக்களைக் குறிப்பிட்டு ஆசிரியர் விளக்குகிறார். சிவமணி காதலை மையப் பொருளாகக் கொண்டு, அது பாட்டில் ஆன்மிகக் காதல், ஆண் – பெண் காதல் ஆகியவைகளாக உள்ளதாகக் கூறுகிறார். விமலானந்தம் அகத்திணைக் காதலாகவும் அத்வைதமாகவும், கா.மீனாட்சி சுந்தரம் கவிதைக் காதலாகவும், தெய்வீகக் காதலாகவும் காட்டுவதையும் ஆசிரியர் காட்டுகிறார்.

ஆசிரியர் பல்வேறு ஆய்வுகளை விரிவாக விளக்கி விட்டு வேதாந்த விளக்கம் குறித்து தெளிவான முடிவு தரவில்லை. ஆனால் திணை நோக்கில் காதல் சூழ்நிலையில் விளக்கியிருப்பது சிறப்பாக உள்ளது. குயிலை ஜீவாத்மாவாகக் கொள்வதுதான் பொருத்தமாகத் தோன்றுகிறது.

குரங்கை ஆணவமாகவும், மானை ஆசையாகவும் கொள்வதைவிட குரங்கை மனமாகவும், மானை உடலாகவும் கொண்டு குயிலை ஆத்மாவின் பண்பட்ட நிலையாகவும் கொள்ளலாம். இப்படிச் செய்யும்போது குயிலை மாய சக்தியாக மட்டுமின்றி, கற்பனா சக்தியாகவும் கொள்ள இடமுள்ளது. குயில் மாயக்குயில் என்றே குறிப்பிடப்படுகிறது. இந்த இரண்டு நிலை விளக்கங்களையும் இணைக்க முடியும்.

வேதாந்த விளக்கத்தை முதல் நிலைக் கருப்பொருளாகவும் கற்பனை, தமிழாளர் ஆக்கத்தை இரண்டாம் நிலைக் கருப்பொருளாகவும் கொள்ளலாம். ஐம்புலன்களோடு வேடர்கள் தொடர்பு படுத்தப்படுகின்றனர். சேர இளவரசன் கவிஞனாக வருவதால் இந்த இரண்டு நிலைகளின் தொடர்பைக் காட்டுகிறது. நான்கு நாள் விழிப்புநிலை, கனவு, ஆழ்நிலைத் தூக்கம், துரிய நிலைகளின் குறியீடுகளாகக் கொள்ளலாம். துரிய நிலைதான் மற்ற மூன்று நிலைகளின் அடித்தளம், ஆனால் துரிய நிலை தான் தூய பிரக்ஞை, அது விழிப்புமில்லை தூக்கமுமில்லை .

ஆனால் குயில் பாட்டு போன்ற அற்புதக் கவிதையை எந்த ஒரு தனி அர்த்தத் தளத்திலும் நிலை நிறுத்த முடியாது. அர்த்தப் பன்மைதான், கவிதையின் அடிநாதம். தெய்வீகக் காதல் / மானுடக் காதல், ஜீவாத்மா / பரமாத்மா, கனவு / நனவு போன்ற முரண்பாடுகள் ஒன்றோடு ஒன்று மோதுவதைத்தான் கவிதை

காட்டுகிறது. இதை கட்டுடைத்தல் (deconstruction) திறனாய்வு மூலம் காட்ட முயலலாம்.

ஆசிரியர் சார்பு நூல் பற்றி சிவமணி கூறுகிறார். ஆனால், குயில் பாட்டில் கீத்ஸின் வானம்பாடிப் பாடலும், என்டிமியான் என்ற பாடலும் இழையோடுவதை மறுக்க முடியாது. குயில் பாட்டின் கடைசி வரிகள் கற்பனையின் சூழ்ச்சியைக் குறிப்பிடுகிறது. கீத்ஸும் Fancy cannot cheat so well. As she is famed to do deceiving elf என்று வானம்பாடிப் பாடலை முடிக்கிறார். தூங்குகிறேனா விழித்திருக்கிறேனா? என்ற ஐயம்தான் அதில் கடைசி வரி. இது குறித்து 'பொதிகைத் தென்றலும் மேலைக்காற்றும்' என்ற நூலில் விரிவாக எழுதியுள்ளேன்.

ஆனால், பாரதியின் வேதாந்தம் ஒரு மூலநிலைக் (Archetype) காதலாகக் காட்டப்பட்டுள்ளது. ஆத்மாவின் உண்மை நிலை காதல். அது கற்பனையோடும் இணைக்கப்படுகிறது. ஆனால் எல்லாத் திறனாய்வுகளும் கவிதையை நோக்கி இட்டுச் செல்லும் வழிகள் தாம், மொழியியல் திறனாய்வும் அப்படி ஒரு வழியே. குயில் பாட்டின் முழுமையையும் அது காட்டாவிட்டாலும் அதன் மொழித்திறனை முழுமையாகக் காட்டும் ஒரு முழுமையான ஆய்வு பேராசிரியர் சண்முகனாரின் நூல் என்பதில் ஐயமில்லை.

THE HINDU - FRIDAY REVIEW

A bird, Bharati and melody

Lavanya Narayanan

MAY 28, 2020

R. Suryapraksash

Carnatic musician R. Suryaprakash and Tamil scholar Dr. Arul Avvai Natarajan join hands for Kuyil Paattu

It was the call of the cuckoo bird, which inspired Carnatic vocalist R. Suryaprakash to get immersed in the poetry of the legendary Subramania Bharati. "Moved by its haunting 'coo,' I wondered why not tune the verses of Bharati's epic work, Kuyil Paattu for music lovers, caught in the lockdown, across the world," says Suryaprakash, tracing the genesis of his venture.

Before long thought metamorphosed into action and 'Kuyilpaattu Paduvom' was born.Suryaprakash's classmate from school, Dr. Arul Avvai Natarajan, had written a related article in his current post as Director of Translations for the Government of Tamil Nadu. Coincidentally, it effused themes of the same works and instantly, Suryaprakash knew who this project must include. It meant analysing the massive work — 744 lines in nine chapters — a task that excited Dr. Arul.According to Dr. Arul the beauty of Kuyil Paattu lies in its origin. "Bharati has described it as the outcome of his reverie, taking place in a garden in the west of Puducherry.

He was listening to the cuckoo's melodious cry and comprehended its meaning — a songbird pining for his love," he describes. The verses unfold like an epic, with characters such as a bull, monkey, a sage, and even ghouls playing parts. Studded with mystique, it's a narrative, which will unfold as the weeks progress, each verse being brought to life by Suryaprakash's vocalisations and choice in ragam.Suryaprakash calls it his 'passion project,' an extension of his love for Bharatiar's compositions that are a must in his concerts.

While he continues to indulge in Bharathiar's more popular, often patriotic works, he hopes this episodic series will introduce audiences to a rare side of the poet.His rendition, he anticipates, will fill at least 25 online episodes. Released in an array of ragas, including Bouli, Natakuranji, Ahiri, Sumanesa Ranjani, Nalinakanthi, Atana, Sindubhairavi and Durbarikanada, his priority remains the compatibility of the lyrical and musical bhava — a concept that has led the musician to set certain verses to talam, while others remain more extempore as virutthams. The project has also allowed Suryaprakash to discover two new ragas — Kuyilkurinji and Suryavasantha.

While the former is a janya of Chakravaham, named for its resemblance to the kuyil's call in tara sthayi, the latter, a janya of raga Soolini, is the result of the artiste's extended practice sessions during the lockdown. "Kuyilkurinji is more folksy and happy in nature, while Suryavasantha has both veera rasam and pathos," he explains. With one episode released on May 24 and many to come, available both on YouTube and the artiste's social media pages, it's a project to note and one that he hopes keeps rasikas engaged during this trying time. Perhaps, it's an effort to preserve the old - a positive spirit and hope which personify Bharati - for future generations to come.

THE HINDU
FRIDAY REVIEW
Arts&Culture

****

வானவில் கட்செவி குழுவில்
என் கட்டுரை
பாரதியாரை நாளும் நினைவோம் !
புதுவைக் குயிலின் பொன்னோவியம் !

பாரதியாரின் எழுத்துக்கும் வாழ்க்கைக்கும் எப்போதும் இடைவெளியிருந்ததில்லை. நெஞ்சில் கனல் மணக்கும் நித்திலப் பூவாக அவர் எப்போதும் வாழ்கிறார். புலவர்களின் பெரும்பாலோர் பெற்று வாழ்ந்த பேராளர்கள். அவர் ஒருவர்தான் கொடுத்துச் சிவந்த கோமான். வாழ்க்கை முழுவதும் தோற்றார் என்றாலும், எந்த இடத்திலும் தன் தோல்வியைச் சொன்னதில்லை. இத்தனை தோல்விகளுக்குப் பிறகும் "எடுத்த காரியம் யாவிலும் வெற்றி" என்று பாடுவதற்கு ஒருவர் முன்வர இயலுமா?

தேசிய நோக்கில் படைக்கப்பட்ட காப்பியம், பாஞ்சாலி சபதம். பக்திப் பாங்கில் படைக்கப்பட்டது கண்ணன் பாட்டு. தத்துவ இழையில் பின்னப்பட்டது குயில் பாட்டு.

குயில்பாட்டு எழுநூற்றி நாற்பத்து நான்கு அடிகளில் படைக்கப்பட்ட காப்பியம். இந்த குயில் படைப்பு ஒன்பது பகுதிகளாக விரிகிறது.

தலைப்பு	அடிகள்
குயில்	36
குயிலின் பாட்டு	30
குயிலின் காதற்கதை	75

காதலோ காதல் 27

குயிலும் குரங்கும் 80

இருளும் ஒளியும் 46

குயிலும் மாடும் 122

நான்காம் நாள் 66

குயில் தனது பூர்வீகக் கதை உரைத்தல் 262

குயிலின் பாட்டாக இடையிடையே வருகின்ற பகுதிகளைத் தவிர எஞ்சியுள்ள பகுதிகள் அனைத்தும் வெண்பா யாப்பில் அமைந்திருக்கின்றன. முப்பெரும் காப்பியங்களுள் இந்தக் காப்பியமான குயில் பாட்டு மட்டும் சங்ககாலப் பத்துப் பாட்டுகளை ஏதோ ஒரு வகையில் நினைவூட்டுவதாகவே அமைந்துள்ளது.

குக்கூ என்ற குரலில் காதல், அருள், இன்பம், நாதம், தாளம், பண், புகழ், உறுதி, கூடல், சூழல் ஆகிய பத்துப் பொருண்மைகளையும் ஒளியாலும் சூழலாலும் குரல் வெளிப்பட்ட முறையாலும் பாரதியார் உணர்கிறார். சின்னக் குயிலின் மடியில் வெட்டுண்ட நிலையில் கிடக்கும் சேரமானின் இறுதிப் பேச்சு,

கண்ணகியின் மடியில் வெட்டுண்ட கோவலன் பேசிய இறுதிப் பேச்சைப் பல இடங்களில் குயில் பாட்டில் நினைவூட்டுகிறது. ஏயுற்று மன்னன் மகன் வீசும் வாள் வீச்சு, காயசண்டிகையின் கணவன் உதய குமரன் மீது வீசிய வாள் வீச்சையும் நினைவூட்டுகிறது.

குயில்பாட்டில் மக்கள் மட்டும் பாத்திரங்களாக வரவில்லை. பேய், பிசாசு, விலங்கு, புல் ஆகியனவும் பாத்திரங்களாகின்றன.

எல்லா உயிர்களுக்கும் உள்ள காதல் உணர்ச்சி, இங்கே புதிய முறையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பொதுவாகக் கவிஞர்கள் அன்பிலும், அழகிலும், பெண்மையிலும், ஈடுபாடு கொண்டவர்கள். மகாகவி பாரதியார், பெண்மையைப் போற்றுபவர், சக்தியை வழிபடுபவர், புதுமைப் பெண்ணைக் காணத் துடிப்பவர். அவர் கண்ட குயில், தமிழ்ச் சமுதாயத்தின் சராசரி பெண்ணுக்குக் குறியீடாகிறது. இந்தியச் சமுதாயத்தின் சராசரி பெண் என்றாலும் தவறில்லை.

குயிலின் சோகம், இந்த சமுதாயச் சராசரி பெண்ணின் சோகம், அல்லது பெண்மையின் சோகம், குயிலின் வரலாறு இந்த சமுதாயப் பெண்ணின் வரலாறு, குயிலின் காதல் கதை ஆண்டாண்டாக அவலத்தில் ஆழ்ந்த பெண்ணின் காதல் கதை. குயில் பாட்டின் மையப் பொருள் குயில்.

பாரதியார், தன் குயில் பாட்டில் காட்டியுள்ள பாத்திரங்களைத் தாம் புனையும் கவி அமைப்புக்கு ஏற்பக் கற்பனை உலகில் இட்டு உருக்கி, கவிதை அச்சில் வார்த்தெடுத்து, உளவியல் சாணையில் தீட்டி, ஓவியம் எழுதி, உயிரும் உணர்வும் ஊட்டி உலா வகுத்த நீண்ட கனவின் நிகழ்ச்சியாகும்.

பாரதியாரின் கவித் திறனுக்கும், கற்பனை வளத்துக்கும், புதியன புனையும் ஆற்றலுக்கும் சொல்லோவியத் திறனுக்கும் குயில் பாட்டு தனிப் பெரும் சான்றாகத் திகழ்கிறது.

ஆண்டு தவறாமல் ஸ்ரீராம் நிறுவனம், பாரதி பெருவிழா நடத்தும்போது மூன்று தலை சிறந்த அறிஞர்களுக்குக் காசோலையும், விருதும் வழங்குவது மரபு. ஒவ்வோராண்டும் வானவில் இரவி அவர்களிடம் அளவளாவி, அறிஞர்களைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து விருதுகளை என் தந்தையார் பரிந்துரைப்பதும் வழக்கமாகிவிட்டது.

ஒருநாளும் தனக்கு விருது தர வேண்டும் என்று நிறுவனமாகட்டும், அரசாகட்டும் யாரிடமும் அவர் ஏங்கி நின்றதில்லை. பாரதியின் அன்பின் ஊற்றாகவும், பரிவின் உருவாகவும், பண்பின் நிலையமாகவும், தொண்டின் சிகரமாகவும், வாழும் நல்லோராக மிளிர்பவர் கவிஞர் இரவி கல்யாணராமன் ஆவார்.

அறிவுத் தோழமைக்கு அணிகலனாக விளங்கும் அவர் ஆணைக்கிணங்கச் சில வரிகளை நானும் வரைந்தேன். அதுவே இப்படி ஓர் இசைக் கோவைப் பனுவலாயிற்று.

அங்குமிங்குமாகச் சிதறியிருந்த என் எழுத்து வடிவக் கோலங்களை அரிய முயற்சியோடு தொகுத்து வடிவம் தந்த செயற்செம்மல் பொன்னேரி பிரதாப்புக்கு நாளும் நன்றி !

அன்போடு

ஔவை அருள்

5.5.2020



SHRIRAM
Capital

"Shriram House"
No. 4, Burkit Road,
T.Nagar, Chennai - 600 017.
Ph : 044 - 4905 2500

EMPOWERING PEOPLE THROUGH PROSPERITY



புல்லரிக்க வைக்கும் புல்லாங்குழல் !

தரைவேந்தர் மூவர்க்கு நிகரான புகழ் வளர்த்துப் பொலிந்த உரைவேந்தர் ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்கள்.

செம்மொழித் தமிழாய்ந்த மும்மொழிப் புலமை முற்றிய மூதறிஞர். 'தட்டான் பொன்னை உரையிட்டுக் காட்டுவது போன்று' சங்கத் தமிழென்னும் சாம்புநதப் பொன்னை உரையிட்டுக் காட்டி ஒளிசெய்த ஒப்பற்ற புலமை கொண்டவர் அவர்.

அவர் வழங்கிய அருட்கொடை – அன்னைத் தமிழின் அருந்தவச் செல்வம் ஔவை நடராசன். உரையா செய்யுளா என உளந்திகைக்குமாறு மழைத்தொழிலாய்த் தமிழ்பொழியும் மந்திரச்சொல்வாணர் அவர். சிந்தைக்கும் செவிக்கும் இனிய செஞ்சொற்களைச் செதுக்கிப் புதுக்கும் சித்திரச் சொல்லழகர்.

அவர்தம் வித்தக விரல் பிடித்து வண்ணத் தமிழ் வையை என்னும் பொய்கையில் இறங்கிப் புகுந்து நீராடி, 'கண்டறியாதன கண்டேன்' என்று களிகொண்டு நிற்கும் – என் அருமை இளவல் ஔவை அருள் அவர்கள்.

பட்டப்பகலில் பாரதிக்குத் தோன்றிய நெட்டைக் கனவின் நீட்சி – குயில்பாட்டு. ஒரு கல்விக் கடல் கனத்துப் படைத்த கற்பனைக் களஞ்சியம் குயில்பாட்டு.

அதற்குப் பாரதி தந்த தலைப்பு. 'குயில்' என்பதுதான். அந்தக் குயில், ஔவை அருளின் முத்தமிழ் முயற்சியில், மாந்தளிர் கோதும் மாண்பில் நம் மனம் கோதி மகிழ்கிறது.

அழகுரை நம்பி ஔவை அருளின் அருவித் தமிழும் ஆங்கிலமும் பாங்குறக் கலந்த பரவச நடையில் பயணிக்கிறது இந்நூல்.

அருளின் பள்ளி நாள் தோழர் கலைமாமணி சூரியப்பிரகாஷ் இசைத்தமிழ் கொண்டு எழில்செய்த கோலத்தை ஏற்கனவே வலையொளி வழி பல்லாயிரவர் கண்டுகேட்டு மகிழ்ந்திருக்க, வரிவடிவில் வண்ணமிகு வாய்ப்பாய் வளர்ந்து நிற்கிறது.

நெல்லிக்கனி சாப்பிட்டு நீர்குடித்த மாதிரி நினைத்தொறும்–பேசுதொறும்–நெஞ்சுதொறும் தித்திக்கும் நேரிய சிந்தனைகள் மலர்ந்து மணக்கும் இம் மகரந்த நூலில் மலர்படியும் சுரும்பாகி மயங்கட்டும் தமிழுலகம்.

- நயவுரைநம்பி ஜெகத்ரட்சகன்